IATA
**SKY WINGS** TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are the authorised main agents for
Sri Lankan, Jet Airways, Qatar, Kuwait, Oman & many more
We accept all major credit cards
Reservation Please call: 02086729111
Head Office:
119, Tooting High street
London, SW17 OSY
Mob: 07850876921

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 08 ♦ ISSUE - 167 ♦ FRIDAY 06 APRIL 2012

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
- (Neck, Back & Shoulder Pain)
- (Terms & Conditions Apply)

NO WIN NO FEE
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**nathan & co**
Pawnbrokers, Jewellers & Goldsmiths
HALF PRICE PAWN LOANS, HIGH VALUES, LOW RATES
BORROW £100
Nathan & Co charge £4.00 per month APR 52.7%
H&T Pawnbrokers charge £8.00 per month
Albermarle Bond charge £7.99 per month
Prices correct at 01.03.2012
61 Peckham High Street, Peckham, SE15 5EB Tel: 020 7701 7827
6 Tooting High Street, Tooting, SW17 0RG Tel: 020 3441 2202
www.nathan-co.co.uk

SPEAK TO OUR FRIENDLY TAMIL TRAVEL EXPERTS on 020 8866 3311
**Flyplaces**
Worldwide Travel & Tours
BRITISH AIRWAYS Preferred Partner
Email: info@flyplaces.co.uk
EMERGENCY No: 07904 000 037
FOR BOOKING: 020 8866 3311
PRICE MATCH GUARANTEE
We accept all major debit & credit cards
COLOMBO from£169
CHENNAI from£189
TORONTO from £199
Note: All fares mention are low season, excluding taxes/terms and condition apply.

Indian and Eelam cuisine
**Chennai kitchen**
Vegetarian & Non vegetarian
Take away in South Ealing
We are specialist caters for all occasions including Weddings, Birthdays and parties
Free Delivery Unbeatable prices
Tel : 020 8560 1171 / Mob : 07813 456 350
Order online at.. www.chennaikitchen.co.uk
172, South Ealing Road, South Ealing, W5 4QL

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன
**Keyboard**
அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது
OEBL Syllabus, Trinity college Syllabus க்கு ஏற்ப கற்பிக்கப்படுகிறது.
New malden, Morden, Sutton
Contact : 07917 128 581

**PAWNBROKERS**
தங்கம், நகைகள், கைக்கடிகாரம், கார்கள் மற்றும் பெறுமதியான பொருட்களுக்கு ஈடாகக் கடன் வழங்கப்படும்.
- தாராளமான கடன் தொகை
- தனிப்பட்ட ரீதியான சேவை
- மிகச் சிறந்த வீதம்!
- இந்த விளம்பரத்தைக் கையளிப்போருக்கு 10%கழிவு

Est. 1976
www.maxcroft.co.uk
Maxcroft Tel 020 8518 1828
632 Eastern Ave, Ilford, Essex IG2 6PG (Near Gants Hill Tube)

CLAIMSmatters proudly anounces its NEW service...
claim back your PPI
Have you had Loans, Mortgages, or Credit cards in the last ten years?
Claim up to £3000 or more
PAYMENT PROTECTION INSURANCE
ACCIDENT?
We provide a complete accident management solution; making the whole claim process as simple and as efficient as possible.
Call our FREE SUPPORT LINE 08000 842 472
For a Fast Professional and Free Service
Terms & Conditions Apply
www.claimsmatters.com info@claimsmatters.com

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Prime Training College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

**Our services:**

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு
£ 190 .00 மட்டுமே
(பரீட்சைக் கட்டணம் உட்பட)

பிரித்தானியா மற்றிய விடயங்களை ESOL பயிற்சி முலமும் குடியுரிமை வகுப்புக்கள் முலமும் அத்துச பயிற்சி வழங்குகின்றோம்.
சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

Tel: **020 8150 9953** | Mob: **075 3893 3261**

இங்கே ஞாயிறு 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு.

**Branches**
- Wembley
- Tottenham
- Hendon
- Manchester
- Coventry
- Birmingham
- Bradford

www.primetrainingcollege.co.uk

**Head Office**
14 Lombard Business Park,
2 Purley Way, Croydon
CR0 3JP.

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு



வாருங்கள்! கேளுங்கள்!! ஆசீர்வாதமடையுங்கள்!!!

London மாநகரில் பெத்தானியா தேவாலயங்கள் இணைந்து நடத்தும்

## பெரிய வெள்ளி ஆராதனை

தேவசெய்தி
போதகர் தங்கையா சத்தியராஜ்
(தலைமைப் போதகர்:
பெத்தானியா தேவாலயம்)

காலம் : 06 ஏப்ரல் 2012
வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 11.00 மணி

இடம் : Monsoon Banqueting Suite, Dominion Road, Southall, Middlesex UB2 4BG. **Car Park :** Dominion Car Park

BFM BETHANY CHURCHES

Bus Routes : E5, H32, 120, 195, 482, 105
By Train : Southall Railway Station (British Rail)

மேலதிக விவரங்களுக்கு
பெத்தானியா தேவாலயம்
Bethany House, 12 Park Avenue, Southall, Middlesex UB1 3AJ
web : www.bethanychurches.org
Email : info@bethanychuches.org
Telephone: 020 8571 2156
Mobile: 0795073 5417, 078 7266 5157, 078 3726 0678, 079 6057 0704



பிரியமானவர்களே...
**"உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்"**

இந்த தேசத்தில் உன் உள்ளம் எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

*அருள்நாதர் இயேசு சொல்கிறார்:*
*"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் [இயேசு] எல்லோரும் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."*
*வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்.*

**ஞாயிறு ஆராதனை நடை பெறும் இடம்:**
19-21 Bellingham Estate, Bellingham, Catford, Lewisham. SE6 3BX
**நேரம் 2.30 pm**
[Near **Bellingham station**]
[Bus Stop **Catford Bus Garage**]
[**Bus route no**: 47,54,136, 171 ,199, 208, 320]

தொடர்புகளுக்கு: **நல்ல சமாரியன் தேவ சபை**
**Bro. Edmond**
**Mob: 07877 977 086 Tel: 020 8691 2705**



## KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஓர் இனியசெய்தி.....!!!

FREE Basic Tamil Lessons

Tamil Lessons
Beginners
Intermediate
Advanced
£5/hr

Maths
English
Science
£10/hr per subject

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் **கல்விக்கூடம்**
தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

## 'கல்விக்கூடம்'

edexcel
advancing learning, changing lives

IGCSE தமிழ்மொழிப் பரீட்சையை எமது அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தினூடாக வெளிவாரியாகத் தோற்றவும் முடியும்.

பிரதி ஞாயிறு தோறும்
10.00 மணிமுதல் - மாலை 05.00 மணிவரை நடைபெறும்.

- தொடர்புகளுக்கு -
**020 8090 3366**
**07738 056 950**
www.kalvikoodam.co.uk

Harrow Branch
167, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BJ



## UK COOL AND SHOP FITTING

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY



## செல்வராஜா கோல்ட் ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸின்

### சித்திரைத் திருவிழா



தங்கத்தின் விலை அதிகரித்து விட்டதா!
**கவலை வேண்டாம்**

24.04.12 அக்ஷய திருதியை முன்னிட்டு நகைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு லக்ஷ்மி தங்க நாணயம் முற்றிலும் இலவசம்.

கூறைப் புடவைகள், பட்டுப் புடவைகள் அனைத்தும் 40% விலைக் கழிவில்
சிறுவர்களுக்கான ஆடைகள், சுடிதார், சோளி அனைத்தும் நம்ப முடியாத விலைக்கழிவில்

TP: 0208 767 3795 MOBILE: 07825005269
162 B MITCHAM ROAD, TOOTING, LONDON, SW17 9NJ

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்களும் ஒரு அதிர்ஷ்டசாலி ஆகுங்கள்




## பாராட்டுவதை விட்டுவிட்டு...

அண்மையில் ஒரு நூல் வெளியீட்டு விழாவில் ஒரு பேப்பர் இரவி வெளியிட்ட கருத்துகளுக்காக வாங்கி கட்டிக் கொண்டார் போல் தெரிகிறது. இனி யாராவது வெளியீட்டு விழாக்களுக்கு சென்று புத்தகங்களை விமர்சிப்பவர்கள், முடிந்தால் எழுத்தாளரை பாராட்டிவிட்டு வாருங்கள் அல்லது இவ்வாறான விழாக்களுக்கு போகாதீர்கள். உங்கள் விமர்சனத்தை கேட்கவா காசு செலவழித்து மண்டபம் எடுத்து விழா நடாத்துகிறார்கள். இல்லாதைச் சொல்லியாவது அவர்கள் மனங்குளிர பாராட்டிவிட்டு வாருங்கள்.

*கமலாகரன்*

## புலனாய்வாளராக மாறிவிட்ட வைத்தியர்....

தனது வெள்ளை மயிரைக் காட்டி தனது அனுபவங்களைப்பற்றிதொலைக்காட்சியில் வந்து சொல்லும் வைத்தியர் ஒருவரை உள்ளூர் புலனாய்வு வேலைகளில் ஈடுபடுத்தியுள்ளார்களாம் கடைசிமட்டும் தலைவரோடை இருந்து விட்டு வந்ததாக கதை விடும் பேர்வழிகள். வைத்தியரும் ஆராரிடம் என்ன என்ன சொத்து இருக்கிறது விசாரித்து வருகிறராம். பாவம் நல்ல மனுசன் தேர்தல் கொமிசனர் பதவியைக்கொடுத்துபுலனாய்வுவேலைக்கு பயன்படுத்துகிறார்கள் எனக் கவலைப்பட்டார் இவரைவிட அனுபவசாலியான இன்னொரு வைத்தியர்.

*வைத்தியலிங்கம்*

## படம் காட்டுறாங்கள்...

இந்த முறை ஜெனிவாக்கு கனக்க தமிழ் அமைப்புகள் வந்ததாம் எல்லாரும் ஒற்றுமையாய் செயற்பட்டினமாம் கேட்க சந்தேசமாக இருக்கிறது என்று ஒவ்வொரு தடவையும் ஜெனிவாவுக்கு போய் லொபி வேலை செய்யும் நண்பரைக் கேட்டேன். அதே ஏன் கேட்கிறியள், சிலது படம் எடுக்கிறதுக்குதான் வந்ததுகள். வெள்ளைக்காரர் ஒருவரைக் கண்டால்போதும், ஒருவர் போய் பேச்சுக் கொடுப்பார் மற்றவர் படம் எடுப்பார். பேசிக்கொண்டது என்னவோ வெளியிலை இருக்கிற காலநிலையைப் பற்றியதாகக் கூட இருக்கலாம். ஆனால் அடுத்த நாள் பார்த்தால், இந்தப்பிரமுகரை அந்தப் பிரமுகர் சந்தித்துப் பேசினார் என்று வெப்சைட்டிலை வரும். இவ்வாறு அலுத்துக் கொண்டார். ஈசா இதுகளை என்ன செய்ய?

*ஞானப்பிரகாசம்*

## ஆருக்கு வோட்டு போட?

லண்டன் மேயர் தேர்தல் நடக்கப் போகிறது. கென் லிவிங்ஸ்ரனும் பொறிஸ் ஜோன்சனும் போட்டி போடுகிறார்கள். இதில் யாருக்கு வோட்டுப் போடுவது என்று தெரியவில்லை. எல்லாத்துக்கும் அரசியல் ஆய்வு செய்யிற எங்கடை ஊடகங்கள் இந்த விசயத்திலை ஏன் அடக்கிவாசிக்கினமோ தெரியவில்லை. ஒரு பேப்பர் ஆவது ஏதாவது எழுதுமா?

*றொகான்*

## கூடல் குளம்

எழுத்தாளர்கள் கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் கூட்டறிக்கை விடுகிறார்கள் என்றால் விஞ்ஞானிகளுக்கு அதில் பங்கில்லையா? அணு உலையால் வரும் பாதிப்புப் பற்றி அறிக்கை விட வேண்டியவர்கள் விஞ்ஞானிகள் தானே? அணு உலையால் நாட்டுக்கு எவ்வளவு நன்மை கிடைக்கப் போகிறது நன்மைகளை விட தீமைகள் தான் எடை கூட என்று விஞ்ஞானிகள் அல்லவோ சொல்ல வேண்டும்.

ரமணா

## திரும்பவும் செல்வா பெயர்...

ஆயுதம் எடுத்தோம் பின்னடைவேற்பட்டு விட்டது இந்தச் சூழலிலும், எமது மண்ணைக் காப்பாற்றுவதற்கு முதலிடம் தராது வேறு கதைகள் சொல்லத்தான் நிலம் பற்றிக் கதைகிறார்கள். தீர்க்க தரிசியாக கூட்டாச்சி கேட்ட செல்வாதான் எப்பொழுதோ, தனிநாடு என்று முடிவெடுத்து விட்டாரே. இப்பொழுது அவர் கூட்டாச்சி கேட்டார் கைவிட்ட கொள்கையை வைத்து தீர்க்கதரிசனம் என்றால் அதில் என்ன அர்த்தம் இருக்கு என்று புரியவில்லை.

கதிர்காமத்தம்பி

## மனித உரிமைச் சபை

இந்தியா தமிழ் நாடுக்காக இலங்கைக்கு எதிராக ஊக்கமளித்ததா, அல்லது அமெரிக்கச்செல்வாக்கினால் வாக்களித்ததா? எது என்னவோ எங்கள் பிரச்சினை மனிதவுரிமை சபையின் தீர்மானங்களுள் ஒன்றாகிவிட்டது கூடிய அழுத்தம் நாம் கொடுத்தால் மனிதவுரிமை சபை சமாளிக்கும் பதில் கொடுக்காது இலங்கை உருப்படியாக ஏதும் செய்யாவிட்டால் அதை நிச்சயம் தட்டிக் கேட்கும். இப்போதைய தீர்மானத்தால் பெரிய நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும் வேறு வழிகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கும்

கந்தசாமி

## இது கெட்ட கேட்டிற்கு..

நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு சாட்சியமளித்த கல்முனையைச் சேரந்த இரத்தினம் பூங்கோதை என்ற பெண்ணை சிறிலங்கா பயங்கரவாத தடுப்பு காவல்துறை நாலாம் மாடிக்கு அழைத்துள்ளதாம். நாலாம் மாடிக்கு அழைப்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பது தெரியும். இந்த லட்சணத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதை வரவேற்று தமிழ் அமைப்புகள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். கவிஞர் சேரன் சொன்னதுபோல் தமிழர்கள் எருமைகள் தான்.

*முரளிதரன்*

## It's Croydon...!

"Sri Lankan and South Indian restaurant in Croydon, Spiceland, serves food as good as the best Tamil restaurant I know of in Tamil Nadu. Its cuisine is excellent as is the service. Beer, wine and spirits supplement, and the atmosphere is folksy, not that of loud pubs. Here you can meet friends and comrades. Here you can acquire my recently released book, "Tamil Nation in Sri Lanka". It was this book that brought me to London in March and several times to Mr. Prem's fine restaurant and second home for many customers. Thank Nadarajah.

*-Ron Ridenour*

## சிறிதரன் எம்பிக்கு பாராட்டு...

சிறிதரன் எம்பி மனம்திறந்து பேசிய யூரியுப் காணொளியை பார்த்தேன். தலைவர் பிரபாகரனைத் தவிர வேறெவரையும் தான் தலைவராக பார்க்கவில்லை எனவும், சுமந்திரனின் அபத்தமான கருத்துகளை இனிமேலும் கேட்டுக்கொண்டிருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். தமிழர்கள் தேசியக் கொடியை பிடிப்பதில் என்ன தவறு என்றும், அவ்வாறு தான் தவறு என்று சொன்னதாக எந்தவிடத்திலும் குறிப்பிடவில்லை எனவும், அதனை ஆதாரத்துடன் நிருபித்தால் பதவிவிலகவும் தயாராக இருப்பதாகவும் சொல்லியுள்ளார். அவரது பேட்டி சம்பந்தனுக்கு செம்பு தூக்குபவர்களுக்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ளதாம்.

*கோபாலகிருஸ்ணன்*

*ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....*
Tel : 020 7043 4314

# மீண்டும் குழப்பத் தொடங்கிவிட்டார்கள்...

கடந்த வருடம் லண்டனில் மாவீர்நாள் நிகழ்வுகள் தொடர்பாக குழப்பம் நிலவியதையும், வழமையாக ஒரு இடத்தில் நடைபெறும் நிகழ்வுகள் 7 இடங்களில் நடைபெற்றதையும் அறிவீர்கள். அப்போது இந்தக்குழப்பங்கள் ஏற்படுவதற்கு காரணம் முன்னைய காலங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகளை நடாத்தியவர்கள் சரியாக வரவு செலவுக்கணக்கை காட்டவில்லை என விளக்கமளிக்கப்பட்டது. மாவீரர் நாளை நடாத்துவதனை திட்டமிடுவதற்காகவே பெரும்செலவில் மண்டபங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் நடாத்தப்பட்டது, வந்தவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது. பெரும் அடுக்கில் நடாத்தப்பட்ட மாவீரர் நாள் வரவு செலவு நட்டக்கணக்காக காட்டபட்டது. துண்டு விழும் தொகை இருபத்தையாயிரம் பவுண்ஸை எட்டியது. இவ்வாறு போட்டி மாவீரர் நாள் நடாத்துபவர்களின் உள்நோக்கம் அறியாது அவரகளுக்கு பின்னால் திரண்டவர்களும் இருக்கிறார்கள். தெரிந்துகொண்டே குழுமியவர்களும் இருக்கிறார்கள்.

மாவீரர்நாள் நடந்தேறியபின்னர் மாவீர்நாள் நாடாத்திய புதிதாக வந்த போட்டிக்குழவினரைப் பற்றிய பேச்சைக் காணவில்லை. இந்தியாவிற்கு பயணம் போயிருக்கிறார்கள் என்றும், இந்தியாவில் தங்கியிருந்த குடும்பத்தினர் வந்து சேர்ந்துள்ளார்கள் அதனால் பிசியாயிருக்கிறார்கள் என்றெல்லாம் கதைக்கப்பட்டது. போட்டிக்குழவினரோடு சேர்ந்து திரிந்த பெருந்தலைகள் சில ஓய்வுக்கு சென்றுவிட்டன. அல்லது வழமையான தரகு வியாபாரத்திற்கு சென்றுவிட்டன. மே18 நெருங்கி வருவதால் இப்போது திரும்பவும் திருவிழாக்களைகட்டத் தொடங்கியுள்ளது. கடந்த இரண்டு வருடமாக பிரித்தானியத் தமிழர் பேரவையால் நடாத்தப்பட்டு வந்த மே18 நினைவு நாளை இந்த முறை தாங்களே நடாத்தப்போகிறோம் எனப்புறப்பட்டுள்ளார்கள். இனி ஒலி ஒளி ஊடகங்களில் இதுபற்றி விவாதிக்க தொடங்குவார்கள். சிலர் வரிந்து கட்டிக்கொண்டு வாய்ச்சவடாலுக்கு தயாரகுவார்கள்.

பிரித்தானியத் தமிழர்பேரவை Trafalgar Square இல் மே18 நினைவு நிகழ்ச்சியினை நடாத்துவதற்கு பதிவு செய்துள்ளது. அதனையே போட்டிக் குழுவும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதில் வேடிக்கை என்னவெனில் பிரித்தானிய தமிழர் பேரவையின் தலைவர் சுகந்தகுமாரும் போட்டிக்குழுவுடன் இணைந்து Trafalgar Square பிரித்தானிய தமிழர் பேரவைக்கு கிடைக்காமல் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறார். சுகந்தகுமார் பிரித்தானிய தமிழர் பேரவையின் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதில்லை என்பது பெயருக்கு தலைவராக இருப்பதும் இரகசியமான விடயமல்ல. ஆனால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாதநிலையில் பிரித்தானியத் தமிழர் பேரவை இருப்பதன் அந்த அமைப்பின் இருப்பையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

போட்டி மாவீரர் நாளை, மாவீர்களின் நினைவுதினங்களை, மே18 நினைவு நாளை நடாத்துபவர்களின் நோக்கம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் செயற்பாடுகளை சீர்குலைப்பதேயன்றி வேறெதுவுமில்லை. அரசியல் நடவடிக்கைகளில், சர்வதேச ஆதரவினைப் பெறும் முயற்சிகளில் இவ்விதமான போட்டிச் செயற்பாடுகளை ஏன் செயற்பாடுகளையே காணவில்லை. சுயாதீன விசாரணையைக் கோரும் இணையவழி விண்ணப்பம் இதுவரை ஏழாயிரத்தை தாண்டவில்லை. இன்னமும் 4 மாதங்களில் தொண்ணூற்றேழாயிரம் ஒப்பம் தேவைப்படுகிறது. இதுபோன்ற விடயங்களில் செயற்படுவதற்கு ஆட்பற்றாக்குறை நிலவுகிறது. மாவீரர்நாளுக்கு இருபத்தையாயிரம் மக்கள் வந்தார்கள் என கணக்குக் காட்டுபவர்கள் இவ்விடயத்தில் ஏன் செயற்படாமல் இருக்கிறார்கள்? புலம்பெயர் நாடுகளில் மக்களுக்கடையில் குழப்பத்தை ஏற்படுத்துபவர்களை இனங்கண்டு ஒதுக்க வேண்டியது மக்களது கடமையாகும்.

*சுகணகுமார்*

## குவேனியிடம் தஞ்சமடையும் கள்ளத்தோணி விஜயன்




1956இல் 'விஜயனின் வருகை' என்ற தலைப்புடன் சிறப்பு தபால் தலை ஒன்றை இலங்கை அரசு வெளியிட்டது. தபால் தலையைப் பார்த்த பெரும்பான்மையினத் தலைவர்கள், 'விஜயன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவன் என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல என்று எதிர்த்ததால் இலங்கை அரசு வாபஸ் பெற்றுக்கொண்டது.

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400




➜ESOL with Citizenship
• British Passport/ Naturalisation
• Indefinite Leave to Remain
➜International ESOL Diploma
• Student Visa / Extension Test
• Spouse Visa / Extension Test
• Work Permit / Extension Test

• Courses from £200
• Successfully trained over 35,000 students
• Certificates within 20 days
• Multilingual staff
• City & Guilds approved centre

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

National Centres

| | | |
|---|---|---|
| BIRMINGHAM<br>7 Washington Street<br>Birmingham<br>B1 1JR<br>01216339919 | SHEFFIELD<br>Sorby House<br>42 Spital Hill, Sheffield<br>S4 7LG<br>01143034303 | LEICESTER<br>Imperial House<br>St Nicholas Circle, Leicester<br>LE1 4LF<br>01163260248 |
| LUTON<br>169 A, Dunstable Road<br>Luton.<br>Beds – LU1 1BW<br>01582723123 | SLOUGH<br>18-24 Stoke Road<br>Slough, Berkshire<br>SL2 5AG<br>01753722056 | NEWCASTLE<br>51-52 Victoria Avenue<br>Whitley Bay, Tyne & Wear<br>Newcastle Upon Tyne – NE26 2BA<br>01912525285 |

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, APRIL 06, 2012, ISSUE 167

## தமிழக மக்கள் போராட்டத்திற்கான ஆதரவு

தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடலோரக் கிராமமான கூடங் குளத்தில் அணு மின் நிலையம் அமைக்கப்படுவதை எதிர்த்து அப்பகுதி மக்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. இந்திய மத்திய அரசினால், மின்சார உற்பத்திக்கென இரஷ்சியாவின் உதவியுடன் உருவாக்கப்பட்டுவரும் அணு மின்நிலையம் மக்களின் உயிர்வாழ்விற்கு அச்சுறுத்தலாக உள்ளமையை உணர்ந்து மக்களின் தன்னெழுச்சியாக ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டத்திற்கு, முதலில் அண்டைய மாவட்டங்களான கன்னியாகுமரி, தூத்துக்குடி மக்கள் தமது ஆதரவினை வழங்கினர். இப்போது இப்போராட்டத்திற்கு தமிழகம் முழுக்க வாழும் மக்கள் தமது ஆதரவினை வழங்கி வருகிறார்கள்.

இப்போரட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது மத்திய மாநில அரசுகள் ஒடுக்கு முறையினை பிரயோகிப்பதுடன், போராட்டத்திற்கு எதிரான பரப்புரைகளையும் மேற்கொண்டு வருகின்றன. ஒரு தருணத்தில் போராட்டம் நடைபெற்றுவரும் 'இடிந்த கரை' பிரதேசம் இன்னொரு முள்ளிவாய்க்கால் போன்று பேரவலத்தைச் சந்திக்கப் போவதாக அச்சம் வெளியிடப்பட்டது. ஆனால் இவ்வாறான போராட்டங்களையிட்டு புலம்பெயர் தமிழ் மக்கள் போதிய அக்கறையினைக் காட்டுவதாகத் தெரியவில்லை.

சில தமிழ் ஊடகங்கள் போராட்டம் பற்றிய செய்திகளை வெளியிட்டு வருகின்ற போதிலும், தமிழக மக்களின் வாழ்வுரிமை போராட்டங்களுக்கு தார்மீக ஆதரவு வழங்கவேண்டிய புலம்பெயர் தமிழ் அமைப்புகள் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. தாம் இவ்வாறான போராட்டங்களை வெளிப்படையாக ஆதரித்தால் இந்திய மத்திய அரசின் கோபத்திற்கு ஆளாகலாம் என சில புலம் பெயர் தமிழ் அமைப்புகள் அச்சப்படுவதாகவும் தெரிகிறது.

அரசியல் அடைமொழிகளுக்கு அப்பால் தமிழக மக்களை தமது தொப்புள்கொடி உறவுகள் என ஈழத்தமிழர்கள் உண்மையிலேயே கருதுவார்களாயின், அவர்களது வாழ்வுரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு பின்நிற்க முடியாது. அதேசமயம் உலகின் இன்னொரு மூலையில் உருவாக்கம்பெறும் செயற்திட்டம் ஒன்றினால் சூழலியல், மனிதவுயிர்கள் பாதிக்கபடுமானால், அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியது மானிடநேயம் கொணடவர்களின் கடமையாகும்.

மேற்படி மக்கள் போராட்டங்களின் நியாயத்தை உலகறியச் செய்து அதற்கான ஆதரவுத் தளத்தை விரிவு படுத்தவேண்டிய பணியினை முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழர் அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் முன்வரவேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*ஒண்டைச் செய்யிறம் எண்டு சொல்லியிட்டு சிலநேரம் செய்யாமல் விட்டுவிடுவோம். ஆனால் சற்று மாறுதலுக்காக சொன்னமாதிரியே செய்யப்போறம். நாங்கள் சொன்ன புத்தக வெளியீடுகள் மே மாதம் 12ம் திகதி சனிக்கிழமை பின்நேரம் ரூற்றிங் பகுதியில் நடைபெறும். விழாவிலை சயந்தனின் 'ஆறாவடு', இரவியண்ணையின் சிறுகதைத் தொகுதி, தமிழ்நாடு சேவ் தமிழ் இயக்கத்தினால் வெளியிடப்பட்ட சோமிதரன் நெறிப்படுத்திய 'வெடித்த நிலத்தில் வேர்களைத் தேடி' விவரணம் ஆகியவை வெளியிட்டு வைக்கப்படும். கண்டிப்பாய் பட்டு சீலைத்துண்டு (பொன்னாடை), பூமாலை என்பன மண்டபத்துக்குள்ள கொண்டரேலாது. இந்த விசயத்தை கேள்விப்பட்ட எங்கடை கூட்டாளியள், விமர்சிக்கிறம் பேர்வழி எண்டு எங்களை வார்ந்து எடுத்தியள், இப்ப உங்கடை புத்தகங்களை விமர்சிக்கிறம் எண்டு துவைச்சு எடுக்கப்போறானுகள் எண்டு சொல்லிச்சினம். நாங்களும் சிரிச்சுப்போட்டு இருந்திட்டம்.*

*மேற்கு லண்டன் Hayes பகுதியில் **ஒரு பேப்பர்** விநியோகிக்கப்படுறதில்லை எண்ட குற்றச் சாட்டிலை உண்மையிருக்கிறது. கூடிய சீக்கிரம் அதனை சரிப்படுத்த முயற்சிக்கிறம். விளம்பரம் குடுக்கிற கடையளுக்கு முன்னுரிமை குடுக்கிற தாலை இப்படியான பிரச்சனைகள் ஏற்படுகுது. எதுக்கும் பத்தாம் பக்கத்திலை இருக்கிற சந்தாப்படிவத்தை நிரப்பி 35 பவுணையும் அனுப்பி வைச்சிங்களெண்டால் பேப்பர் வீடு தேடிவரும் எண்டதையும் சொல்லி வைக்கிறம் இது வெறுமனை தபால் செலவுதான் எண்டது நாங்கள் சொல்லாமலே உங்களுக்கு தெரிந்திருக்கும்.*

*வன்னி இனப்படுகொலைகள் நடந்து அடுத்த மாதம் 18ம் திகதியோடை மூண்டு வருசமாகிறது. மாண்டவர்களை நினைவு கொள்ளத்தக்க மாதிரியும், நடந்த பேரவலத்தை வெளிப்படுத்திற மாதிரியும் உங்கடை ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.*

*யாழ்ப்பாணம் மகாஜனாக் கல்லூரியின்ரை லண்டன் கிளை தங்களின்ரை வெள்ளிவிழாவை கொண்டாடியினமாம். அதுபற்றின விளம்பரத்தை ஒரு பேப்பருக்கு குடுக்கமாட்டியினமாம். ஒரு பேப்பருக்கும் மகாஜனாவிற்கும் என்ன பிரச்சினை எண்டு நீங்கள் நினைப்பியள். அப்பிடி ஒண்டும் கிடையாது, சிலரின்ரை நடவடிக்கைகளை விமர்சிச்சா அவைக்கு கோபம் வருது. சிலவேளை நாங்கள்தான் பிழையாய் எழுதிப்போட்டம் எண்டால் தங்கடை பக்க நியாயத்தை எழுதிறதுதானே? அதை விட்டுட்டு இப்பிடி கோபப்பட்டால் என்ன செய்யிறது? பொது வாழ்க்கைக்கு வாறவை கோபப்படக் கூடாது ஒரு பெரியாள் சொன்னவர்: உண்மைதான் கோபப்படுறவையள் பொது வாழ்க்கைக்கு வரக்கூடாது.*

***ஒரு பேப்பர்**ன் வடிவமைப்பில் கொஞ்சம் மாத்தலாம் எண்டு நினைக்கிறம். அநேகமாக அடுத்தடுத்த பேப்பரில் சில மாற்றங்கள் தெரியும்.*

*வேறை என்ன, இந்த வார இறுதி நீண்டதாக இருப்பதால் மகிழ்ச்சியாகக் கழியுங்கள்.*

*அப்ப சந்திப்பம் என்ன....*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Indian Foreign Policy, US Style



**By Prof. C P Bhambhri**

The real significance of this study lies in the fact that current American foreign and strategic policy concerns are fully articulated by William H Avery, who is not only a former diplomat but also belongs to an elite think thank that plays a crucial role in shaping America's global strategies.

Avery establishes in nine extremely *well-written chapters that America* and India have a mutual interest in forging a "special relationship" to deal with the security challenges of the 21st century. "It should ... be a leading objective of the American and Indian governments that their fraternal association be fully in place by 2020. That is the best way for the people of both nations to prevail in mankind's brutal and, also, never-ending struggle for freedom," he writes.

During the 18th century, he says, India's stage of development was comparable to the European countries". Under-development set in during the long period of colonisation because productive systems were subordinated to the needs of the industrialising colonisers.

The growth story begins after colonial rule. The post-Independence narrative is divided into two periods: 1947 to 1991 and 1991 to 2011. It was only when the Narashima Rao-Manmohan Singh team broke with the model of economic planning and "opened" the economy in 1991 that India arrived on the international stage with faster growth and globally recognised technical talent.

This is a familiar story relayed by many Indian and foreign analysts; only the author does not accept that the 1947-1991 phase was a "dark age" for India. As he observes, "when the License Raj was dismantled after 1991, India enjoyed the best of both worlds. A large number of healthy companies that had grown to critical mass under government largesse, mixed with an open system that fostered free competition, and allowed dynamic new entrants."

Avery has painstakingly worked to substantiate the fact that post-1991 achievements were the result of strong industrial and technological base laid down in the 1947-1991 phase, the idea being to lead up to the question of how an emerging power could be oblivious to its own security concerns. With some prescience, in the light of the current controversy in the defence establishment, he says, "India's armed forces and its foreign service are underfunded and inadequate to the needs of a regional power...."

How to bridge the deficit? First, "it will need a second army, staffed by the Indian multinationals of *tomorrow". This is essential to mark* India's economic presence in Africa, Latin America, even Europe. India should be noticed as an emerging economic power and a global player. Second, India "must abandon its decade-old timidity in foreign affairs and invest in defence and, where necessary, shed blood to prevent emerging threats".

Avery may be right when he says model state systems cannot avoid "security threats from other countries". But his identification of China as India's major adversary is problematic, to say the least. He says that China is extending its foothold in Bangladesh, Nepal, Myanmar and Pakistan to limit the power of confrontation, even postures of threat from India. He has painted an alarmist picture by saying Sri Lanka's Hambantota port is part of China's larger geopolitical strategy to encircle the only country that can threaten its complete dominance of Asia.

The author bemoans that "India, by contrast, does not have a geopolitical strategy. It has, at best, a regional strategy. That strategy ... could be summarised as 'keep Pakistan and China at bay'...".

How should India go about attaining its grand global goals? "Building stronger defence ties with the United States (and its allies) is the only way for India to create the defence industry it needs."

He draws attention to the threat posed by terrorism as dramatised in Mumbai on November 26, 2008 and America's war against terrorism after September 11, 2001 and concludes that those incidents make India and America partners for sharing intelligence against terrorism.

Avery suffers the same disease that policy study experts suffer when they act as self-appointed "friends" of policy makers. India needs, according to Avery, America's help because it has inadequate equipment to collect intelligence and America is well-placed in global intelligence-gathering gadgets and spies. The American author wants to make India the mirror image of America, which is highly militarised because of its threat perceptions.

> "India, by contrast, does not have a geopolitical strategy. It has, at best, a regional strategy. That strategy … could be summarised as 'keep Pakistan and China at bay'…"

This approach is full of pitfalls. If India treats China and Pakistan as its biggest enemies, and is prepared for military solutions, the need for diplomacy is redundant. But India's diplomatic approaches in finding solutions to disputes with China or Pakistan are much more meaningful than getting involved in mindless arms race. America should not be a role model for India; many political parties may be concerned about security but do not support militaristic and jingoistic foreign and defence policies.

India and China are competitors in Asia, but contrary to Avery's diagnosis, these two large Asian neighbours cannot play the role of destabilisers. Their own interests would be hurt if an Asian cold war breaks out.

*Courtesy: Business Standard*

# தந்தை செல்வாவின் அரசியல் கோட்பாட்டின் கீழ் அனைவரும் உரிமைக்குப் போராடுவோம்!

பல்லின மக்கள் வாழும் இலங்கையில் சகல மக்களும் ஐக்கியமாகவும் சமாதானமாகவும் வாழக் கூடிய அரசியல் கோட்பாட்டை (சமஷ்டி அரசியல் அமைப்பு) 1949ல் அறிமுகம் செய்த அரசியல் மேதை மூதறிஞர் எஸ்.ஜே.வி செல்வநாயம் அவர்களின் 114வது பிறந்தநாள் மார்ச் 31 ஆகும்.

ஒற்றை ஆட்சியின்கீழ் இலங்கையில் நிரந்தரமான சமாதானம் ஏற்படாது, பெரும்பான்மை இனத்தவர் சிறுபான்மை இனத்தை நசுக்கும் நிலை ஏற்படும், பதவி ஆசை கொண்ட சிங்களத் தலைவர்கள் இனவாதப் பாதையில் செல்வதால், அவர்கள் ஜனநாயகக் கோட்பாட்டை அனுசரித்து அரசியல் பாரம்பரியத்தைப் பேணுபவர்கள் அல்லர் என்பதை அன்றே உணர்ந்த தீர்க்கரிசித் தலைவர் தந்தை செல்வா.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1921ல் இலங்கைக்குப் பொருத்தமான ஆட்சிமுறை சமஷ்டி அரசியல் ஆட்சிமுறை என்றார். பிற்காலத்தில் அதனை ஒரு தமிழ் அரசியல்வாதி முன்னெடுத்தபோது அது நாட்டைப் பிரிக்கும் சதி என்றார். அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் 30 வருட அகிம்சைப் போராட்டத்தை இராணுவ பலத்தைக் கொண்டு முறியடித்தனர். அதன்பின் 26 வருடங்களாக நடைபெற்ற தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தையும் உலக நாடுகளின் ஆயுத பலத்துடன் முறியடித்தனர். மீண்டும் தந்தை செல்வாவின் அரசியல் கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வு காண வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

### சுயநிர்ணயமுடைய மக்கள்

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி (சமஷ்டிக் கட்சியை) 1949ல் ஆரம்பித்தபோது வடகிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கிய தமிழர் தாயகம், அங்கு இடம்பெறும் குடியேற்றங்கள் யாவற்றிலும் அப்பகுதி மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இது அதன் முதலாவது கோட்பாடு.

குடியுரிமை - வாக்குரிமை இழந்த மலைநாட்டுத் தமிழர்கள் அனைவருக்கும் அவற்றை வழங்குதல், தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம உரிமை வழங்குதல் என்பன பிரதான கொள்கைகளாக இருந்தன. தமிழ் அரசு என்பது தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த நிலத்தில் கூட்டாட்சியின் கீழ் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுதல்

தந்தை செல்வா திர்க்கதரிசனத்துடன் முன்வைத்த அரசியல் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழர்களுக்கு சுயாட்சியைப் பெற்றுக்கொடுக்க 30 வருடங்களாக அகிம்சை வழியில் நடத்திய போராட்டத்தால் தந்தை செல்வாவுடன் இரு ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. பின்னர் அரசாங்கத்தினால் கிழித்தெறியப்பட்டன.

1972ல் புதிய அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டபோது தந்தை செல்வா பின்வரும் ஆறு அம்சத் திட்டத்தை முன்வைத்து இனவாத அரசை பரிசோதனைக்குட்படுத்தினார்.

1. தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து அரசியல் யாப்பில் தரப் படல்வேண்டும்.

2. நாடற்றவர்கள், நெடுங்காலம் வாழந்தவர்கள் எனப்படும் அனைவருக்கும் சட்டப்படி குடியுரிமை தரப்படல் வேண்டும்.

3. மதசார்பு அற்று, சகல மதங்களுக்கும் சம உரிமை உறுதிப்படுத்தல் வேண்டும்

4. சகல இனமக்களும் அவரவர் பண்பாடுகள் அடிப்படையில் அடிப்படை உரிமைகள், சமவாய்ப்பு, சுதந்திரம், அரசியல் சட்ட மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

5. தீண்டாமை சாதி வேறுபாடுகள் ஒழிப்பு.

6. அதிகாரப் பரவலாக்கல் மூலம் மத்திய அரசின் அதிகாரங்கள் மக்கள் அதிகாரங்களாக மாற்றுதல்.

மிகக் குறைந்த இந்தக்கோரிக்கைகள் கூட மறுக்கப்பட்ட பின்னர் தனித் தமிழீழமே மாற்ற முடியாத முடிவு என தந்தை செல்வா பிரகடனப் படுத்தினார். அதை அடைவதற்குப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை இலங்கை அரசு பயங்கரவாதம் என்று பெயர் சூட்டி முள்ளிவாய்க்காலில் 40,000 தமிழர்களைப் படுகொலை செய்து முறியடித்த வரலாறு தெரிந்ததே.

ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ்மக்களையும் 30,000 க்கு மேற்பட்ட போராளிகளையும் பலி கொடுத்தபின்னர் தந்தை செல்வா காட்டிய சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தமிழ்க் கட்சிகள் தள்ளப்பட்டுள்ளன.

அறுபது வருடங்களின் பின் தீர்க்தரிசி தந்தை செல்வாவின் அரசியல் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ்மக்கள் தங்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம் என்பது யதார்த்தம். இதை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வளர்ந்த அரசியல் அனுபவமிக்க தலைவர் திரு. இரா. சம்பந்தனுக்கும் அவர் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அதை அற வழியில் முன்னெடுக்கவேண்டிய கடப்பாடு உண்டு அண்மையில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப் பட தீர்மானம் எமக்குத் தெம்பூட்டும் நல்ல காரியமாக அமைந்துள்ளது. இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் ஆதரவு அதிகரித்து வரும் சூழ் நிலையில் தமிழ்க் கட்சிகள் பகைமைகளை மறந்து ஒன்றுபடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எமது ஒற்றுமை இன்மையாலும், இராஜதந்திரமின்மையாலும் பல சந்தர்ப்பங்களை நழுவவிட்டோம். நாம் கற்றுக்கொண்ட பாடங்களை கருத்தில்கொண்டு இதய சுத்தியுடன் ஒன்றுபட்டுச்செயற்படுவோமாக.

*ஐ.தி.சம்பந்தன் [தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு]*

# India… No Innocent Bystander!

**By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)**

"Today, we meet to launch the 125th anniversary celebrations of the founding our party. Over the next year, we will revisit our glorious past and derive renewed inspiration from it; we will rediscover the well-springs of our resilience that have enabled our party to respond effectively to the challenges India has had to confront from time to time. We will recall those remarkable men and women without whose sacrifices and contributions, we would not be where we are today; we will also mark those events that have defined contemporary India, events shaped by our leaders that have left an indelible imprint on the nation's social, political and economic history".

This is from the address of Hon. Congress President and Chairperson UPA Smt. Sonia Gandhi on Congress Foundation day 125 th annivasary of the party on 28-12-09. Great!

This was just eight months and ten days after the horrible genocide of Eelam Tamils, premeditated and executed by the governments of Sri Lanka and India. Estimated 67 000 innocent civilians were massacred during the week ending on May 18, 2009. UPA-I had secretively lent Colombo substantial defence support needed to smash the LTTE without any safety measure for the Tamil population in the island. The only inference is that; what happened is nothing but genocide

Naturally the Leader / Chairperson of UPA, the United Progressive Alliance, a coalition of centre-left political parties, formed after the general election in 2004, Sonia Gandhi refers to the remarkable men and women who shaped events. She refers to personals Pranab Mukhergee, MKNarayanan, Shiev Shanker Menon, Nambiar and others. There are all alleged war criminals like the Ralapakse Brothers, few diplomats and Army Commanders of Sri Lanka. Why?

A deliberate and orchestrated strategy was pursued by the UPA and Lankan state to "brand" the LTTE as a terrorist organisation. Always the liberal officials and politicians objected to so listing the LTTE, as they perceived it as a liberation organisation. Further, from the 83 pogrom , the Lankan state had to struggle in the international arena to justify the suppression of the Tamil insurrection. At that stage there was public sympathy in India and in most of the Western democracies to the Tamil cause, and the Sinhala were always perceived as the oppressors.

India only put forward the view that Tamil liberation should be separated from the terror campaign. Both claimed that terrorism should be eliminated by armed repression while the liberation aspect should be dealt with a political solution.

With the fair outcome of the UNHCR decision, rare insight into the conflict in Sri Lanka has started coming out. Like a matured and ripe fruit the insight information are very clear, obvious and call for no disputes or counter arguments.

"Wiki leaks" revelations in March, 2011 indicated UPA-I repeatedly deflected all international attempts to bring a ceasefire in the last days of the Eelam War-IV which accompanied the decimation of Tamil civilian population. Thus the government of India cannot fully disown the responsibility of Tamil tragedy that unfurled in the island in the final days of the uncivil war. The recent anti-Sri Lanka vote in the UNHRC is a partial contrition albeit without confession"

This is what the great and true columnist, Priyadarshi Dutta has written in 'Daily Pioneer'.

http://www.dailypioneer.com/home/online-channel/394-letters-to-editor/54912-twisting-fa .

The demonetisation of the LTTE serves actually to scuttle the real debate in Sri Lanka. If most of the Tamils didn't support the basic stand of the LTTE then how was it able to become so powerful without the support of any state, yet challenging all the powers in the world on the question of a nation without state – a universal ideological question the powers manipulate suiting their conveniences, but in the context of Eelam Tamils ditched by all of them.

In a nut shell; LTTE managed to get its goal of a separate homeland for the Tamils. India didn't want Eelam. Let India start from the basic at least now: North and East are the homelands of Tamils of Eelam. The Tamil's struggle, violent and/or non-violent is for their homeland and future generation.

But what cruel irony that the UN resolution was moved by a country which has repeatedly blocked all attempts to confront Israel on its seven decades of crimes against the Palestinians. USA is fair and transparant. Whereas, UK in particular was not only passively complicit but also pro-active in supporting India and Sri Lanka in genocide of Tamils.

In the meantime, it is left to us, the Tamil Diaspora, living in relative comfort and privilege, to continue to fight for our nation, our homeland and our future generation. Let us voice for the rights for those imprisoned in poverty and denied a voice; to demonstrate solidarity and above all, not to remain silent before injustice.

The Tamil Diaspora in Canada and USA have to a good extent have made their governments listen to them and helping to set events in the right directions. Unfortunately in England the government is setting the agenda and most of the Diaspora look as if they are faithfully following their master's voice. Let them where clean and pleated suits. No one envys, They can easily become good sale people and build their fortunes.

One should raise three cheers for the MPs from Tamil Nadu for compelling the Centre to take a fort hright position on Sri Lanka issue. Let us, the Tamils walk towards Eelam..

The UNHRC in Geneva may be a place for the great matters of law; human rights, and justice. The UNHRC is likely to report the intransigence to other UN bodies with more support and enthusiasm.

Also the Geneva vote has emboldened the separatist Diaspora groups to revive their march towards Eelam in a new avtar(Hindi) and under a 'new world order'!

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம். நன்றி.

Name: ORU PAPER
Bank: HSBC
A/C: 61429035
S/C: 40-33-09

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# பொன்.அம்பலத்தார்

கருத்துக்களுக்கு @orupaper

## சூல்கெய்ம் ஐ கண்டால் தூரவிலகு

எரிக் சூல்கெய்ம் என்ற பெயர்தான் உச்சரிக்க சிரமமாக இருந்தாலும், 2002ம் ஆண்டு முதல் தொடர்ந்து வந்த ஆறுவருட காலத்தில் தமிழ் ஊடகங்களில் அடிக்கடி உச்சரிக்கப்பட்ட, எழுதப்பட்ட பெயர். இப்போது இவர் அவரது கட்சியினராலேயே தூக்கியெறியப்பட்டு அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். ஒரு காலத்தில் தமிழ் மக்களின் ஆபத்பாந்தவன் போல் சித்தரிக்கப்பட்ட சூல்கெய்ம் அவரது கட்சியினராலேயே தூக்கியறியப்பட்டது ஒன்றும் ஆச்சரியத்தக்க விடயமில்லை. ஒரு சிறிய இடதுசாரிக்கட்சியொன்றைச் சேர்ந்தவரான சூல்கெய்ம் அக்கட்சிக்கு தொடர்ந்து ஏற்பட்ட தோல்விகளையடுத்து, விடுமுறையைக் கழிப்பதற்காக தொண்ணூறுகளின் இறுதியில் இலங்கைக்கு சென்றிருந்தார். அந்நாட்களில் தோன்றியதுதான் இந்த சமாதான பேச்சுவார்த்தை சிந்தனை. நோர்வே அரசியலில் அதிகம் அறியப்படாதவராக இருந்த அவர் சிறிலங்கா அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானத் தூதராக மாறியதால் பிரபல்யமடைந்தார். நோர்வே அமைச்சரவையில் சூழல்பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த அவர் அடிக்கடி கொழும்பு - வன்னி - டில்லி என விமானப்பயணங்களை மேற்கொண்டார்

போரின் இறுதிக்கட்டத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவான நிலையெடுத்த அவர் விடுதலைப் புலிகளை சரணாகதியடைய வைக்க தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டார்.

தனக்குரிய தொடர்புகளைப் பயன்படுத்தி ஏதாவது ஒரு வெளிநாட்டு தொடர்படால்களைப பேணும் பதவியினை இவர் பெற்றுக்கொள்ளக்கூடும். ஆனால் இன்னொரு நாட்டில் இடம்பெறக்கூடிய சமாதான முயற்சிகளில் தோல்வியின் நாயகனான சூல்கெய்ம் இடம்பெறக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை. தமிழ் அரசியலில் சூல்கெய்ம் பார்வை விழாதிருப்பதற்கு அவரது பதிவிப் பறிக்கப்பட்டமை உதவும். இனி புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சூல்கெய்ம் ஐ கண்டால் தூரவிலகி நிற்கலாம்.

## கழுதை கெட்டால்

சூல்கெய்ம் ஐ போலவே, அந்நாட்களில் தமிழ் ஊடகங்களில் அடிக்கடி இடம்பெற்ற பெயர் இவரது. அப்போதைய ஐபிசி வானொலியில் நிலைய அரசியல் ஆய்வாளர். எல்லா விடயங்கள் பற்றியும் பேசுவார். ஆராய்வார் எதிர்வுகூறுவார். நூல் வெளியிட்டு விழாக்கள், பாராட்டுவிழாக்கள், அரசியல் கூட்டங்கள் என எங்கும் இவரைக் காணலாம். லண்டனிலிருந்து வெளிவந்த 'களத்தில்' பத்திரிகையில் ஆசிரியத் தலையங்கங்களையும் எழுதினார். ஈழமுரசு பத்திரிகையிலும் எழுதினார். மொத்தத்தில் பெரிய புலியாயிருந்தவர் 2009 மே மாதத்திற்கு பின்னர், வரிகளை அழித்து விட்டார்.

கருணாநிதி தனது மகளுக்காக நடாத்திய செம்மொழி மாநாட்டில் அன்னார் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்தியாவுடன் உறவுப்பாலம் ஏற்படுத்த முனைவதாக 'ஜீரிவி' இல் வந்து கதை அளந்தார். அவரது கஸ்ரகாலம் கருணாநிதியின் முதலமைச்சர் காலம் நீடிக்கவில்லை.

தமிழ்த் தேசிய அமைப்புகள் கழட்டிவிட்டதால் இப்போது கூப்பிடுகிற இடத்திற்கு எல்லாம் சென்று விளாசித்தள்ளுகிறார்.

தன்னை தேசியத்தரப்பினர் தடுத்தார்கள் ஆனால் நான் துணிந்து வந்தேன் என்ற வாயச்சவாடால் வேறு. அண்மையில் இராஜபக்சவின் லண்டன் அபிமானிகள், பிராமணிய சஞ்சிகையான காலச்சுவடு இன் நிர்வாக ஆசிரியர் கண்ணனுக்கு வைத்த வரவேற்பு வைபவத்தில். சீட்டு சிவலிங்கத்துக்கும், பவுசருக்கும் நடுவில் மேடையில் அமர்ந்திருந்தார். இந்த வைபவத்தில் சிறிலங்கா தேச பக்தி ததும்பியதாக போய் வந்தவர்கள் சொன்னார்கள்.

தமிழ்த் தேசியம் பேசியவர் இப்போது சிறிலங்கா தேச பக்தியில் நனைகிறார்.

*- சும்மா இருக்கிறதால தொடர்ந்து வருவன்*



*வணக்கம்.*

*ஒரு பேப்பரில் வரும் ஆக்கங்கள், சொல்லாடல்கள், விமர்சனங்கள் ஆகியவற்றினால் ஒரு பேப்பரில் கடுப்பாக இருக்கும் எனக்கு எழுத வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள்.*

*மகிழ்ச்சியாக இருக்கிறது. 'இலக்கணத் தமிழில் எழுதி சொதப்பி போடாதீர்கள்' என்று ஒரு பேப்பர்காரர் கேட்டதால் இயன்றவரை இலகு தமிழில் எழுதுகிறேன். ஆனால் சுத்தி வளைக்கமால் விசயத்துக்கு வருகிறேன்.*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## திட்டமில்லாமல் திண்டாடாதீர்கள்!

வாழ்க்கையில் அலட்டிக் கொள்ளாமல் அதிகம் சாதித்த மனிதர்களை நீங்கள் பார்த்திருக்கலாம். சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அவர்கள் கடுமையாக உழைப்பது போல் பார்வைக்குத் தெரியாது. ஆனாலும் அவர்கள் நிறைய சாதனைகள் புரிந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் வாழ்க்கை முறையைக் கூர்ந்து பார்த்தால் அதற்கு காரணம் கண்டிப்பாக விளங்கும். அவர்கள் திட்டமிட்டு ஒரு ஒழுங்கு முறையுடன் செயல்படுபவர்களாக இருப்பார்கள்.

அந்தோணி ராபின்ஸ் என்ற பிரபல சுயமுன்னேற்ற எழுத்தாளர் திட்டமில்லாமல் வாழ்பவர்கள் நயாகரா சிண்ட்ரம் (*The Niagara Syndrome*) என்ற பிரச்சினையில் கண்டிப்பாக ஒரு நாள் மாட்டிக் கொள்வார்கள் என்று கூறுகிறார். அந்தப் பிரச்சினையில் திட்டமில்லா மனிதர்கள் எப்படி மாட்டிக் கொள்கிறார்கள் என்பதை அவர் வார்த்தைகளிலேயே பார்ப்போம்.

"வாழ்க்கையை ஒரு நதியாகச் சொல்லலாம். பெரும்பாலான மக்கள் எங்கே போய் முடிய வேண்டும் என்ற சிந்தனை இல்லாமலேயே அதில் குதித்து விடுகின்றனர். விரைவிலேயே வாழ்க்கை நதியின் அவ்வப்போதைய நீரோட்டத்தில் சிக்கிக் கொள்கிறார்கள். அப்போதைய நிகழ்வுகள், அப்போதைய பயங்கள், அப்போதைய சவால்களை எதிர்கொள்வதிலேயே அவர்கள் மும்முரமாக இருக்கிறார்கள். வாழ்க்கை நதியில் கிளைகள் வரும் போதும் அவர்கள் எந்தப் பக்கம் போவது என்றோ, எதில் செல்வது இலாபகரமானது என்றோ கவனம் கொடுத்து தீர்மானிப்பதில்லை. தானாக எதில் கொண்டு போய் விடுகிறதோ அதில் பயணிக்கிறார்கள். அதனால் அவர்கள் வாழ்க்கை அவர்கள் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. இப்படி அரை மயக்கத்தில் செல்லும் வாழ்க்கையிலிருந்து அவர்களைத் தட்டி எழுப்புவது தண்ணீர் ஆர்ப்பரித்து விழும் ஓசை தான். விழித்துக் கொள்ளும் போது தான் நயாகரா நீர்வீழ்ச்சிக்கு ஐந்தடி தூரத்தில் துடுப்பில்லாத படகில் வேகமாக வந்து கொண்டு இருப்பது தெரிகிறது. ஆனால் அந்த நேரத்து ஞானோதயம் காலம் கடந்ததாக இருந்து விடுகிறது. அந்த வீழ்ச்சியில் விழுந்தே தீர வேண்டியிருக்கிறது. அது உணர்ச்சிகளின் வீழ்ச்சியாக இருக்கலாம், ஆரோக்கியத்தின் வீழ்ச்சியாக இருக்கலாம், பொருளாதார வீழ்ச்சியாக இருக்கலாம். எதுவாக இருப்பினும் ஆரம்பத்திலேயே புத்திசாலித்தனமாக சரியான முடிவுகளைத் திட்டமிட்டு எடுத்திருந்தால் இதைக் கண்டிப்பாக தடுத்திருக்க முடியும்."

திட்டமிடா விட்டாலும் வாழ்க்கை நகரத்தான் போகிறது. ஆனால் அது போகும் பாதை நமக்கு அனுகூலமாக இருக்கத்தான் வாய்ப்பில்லை. ஒரு சமயத்தில் பிரம்மாண்டமாகத் தெரிகிற வளர்ச்சி இன்னொரு சமயத்தில் கண்ணிற்கே தென்படுவதில்லை.வாழ்க்கை என்ற நீண்ட ஓட்டத்தை விடுங்கள். ஒரு விடுமுறை நாள் என்ற குறுகிய காலம் கூட திட்டம் என்று ஒன்று இல்லா விட்டால் நமக்கு பயன்படும் படி அமைவதில்லை. அந்த நாளில் ஒரு பகுதியை வம்புப் பேச்சு கழித்து விட முடியும். இன்னொரு பகுதியை டிவி திருடிக் கொண்டு விட முடியும். இன்னொரு பகுதியைத் தேவையோ, உபயோகமோ இல்லாத இன்னொரு செயல் இழுத்துச் சென்று விட முடியும். மீதிப்பகுதியை சோம்பலோ, ஊர்சுற்றலோ எடுத்துக் கொண்டு விட முடியும்.

ஆனால் முன்கூட்டியே திட்டம் என்று ஒன்றிருக்குமானால், நாம் செய்ய வேண்டியவை இன்னதெல்லாம் என்று முன்கூட்டியே தீர்மானம் ஒன்று இருக்குமானால் அந்த நாளை மேலே சொன்ன எதுவும் நம்மிடம் இருந்து பிடுங்கிச் சென்று விட முடியாது. அதற்கான அவகாசத்தையே நாம் தந்து விடப் போவதில்லை.

திட்டமிட்டால் மட்டும் அப்படியேவா நடத்தி விட முடிகிறது என்ற நியாயமான கேள்வியைக் கேட்கலாம். நாம் ஒன்று நினைத்தால் நாம் சற்றும் எதிர்பாராத சூழ்நிலை அத்தனை திட்டத்தையும் பாழடிக்கிற மாதிரி வந்து சேரலாம். அது தான் வாழ்க்கையின் யதார்த்தமும். ஆனால் திட்டம் என்று ஒன்று இருக்கையில் அந்த சூழ்நிலையில் இருந்து எவ்வளவு வேகமாக வர முடியுமோ அந்த அளவு வேகமாக வெளியே வந்து விடுகிறோம். முன்னமே திட்டம் இட்ட சில வேலைகளையாவது செய்து முடிக்கிறோம்.

நமக்கு என்னவெல்லாம் ஆகவேண்டி இருக்கிறது, நம் வாழ்க்கை எந்தப்பாதையில் செல்லவேண்டும் என்ற தெளிவு நமக்கு உறுதியாக இருக்குமானால் அது நம் தினசரி வாழ்க்கையிலேயே சிறு சிறு மாற்றங்களை அவ்வப்போது செய்ய வைக்கும். பாதை விலக ஆரம்பிக்கும் போதெல்லாம் ஆரம்பத்திலேயே உணர வைத்து மாற வைக்கும். தேவை இல்லாத, பயனில்லாத செயல்களில் இறங்க ஆரம்பத்திலேயே அனுமதிக்காது. நம் சக்தியையும், காலத்தையும் வீணாக்குவது மிக மிகக் குறையும். ஊர் வம்பில் சேர்வதற்கோ, அடுத்தவர் விஷயத்தில் மூக்கை நுழைப்பதற்கோ நம்மை அது விடாது. இப்படி நமக்கு பயன்படுவதற்கு மட்டுமல்லாமல் அடுத்தவரைத் தொந்திரவு செய்யாமல் இருப்பதற்கும் திட்டமிட்டு செயல்படுவது உதவும்.


திட்டமில்லாத மனிதர்கள் கடைசி நேரத்தில் பரபரப்பு காட்டுவார்கள். என்ன நடக்கிறது என்பதே அவர்களுக்கு கடைசி நேரத்தில் தான் உறைக்கும். நயாகரா சிண்ட்ரம் என்று அந்தோணி ராபின்ஸ் சொன்னது போல என்ன நிலவரம் என்பது வீழ்ச்சிக்கு முன்னால் தான் புரியும். அந்த நேரத்தில் என்ன தான் ஆர்ப்பாட்டம் செய்தாலும், அதிக வேகமும், செயல்திறனும் காட்டினாலும் அது பயன் தருவது மிக அபூர்வமே.

ஒரு நாளை, ஒரு வாரத்தை, ஒரு மாதத்தை, ஒரு வருடத்தை, மொத்த வாழ்க்கையை இப்படி இருக்க வேண்டும், இத்தனை சாதிக்க வேண்டும் என்று திட்டமிடுங்கள். உங்கள் திட்டம் நூறு சதவீதம் நிறைவேறாது. முன்பே சொன்னது போல நாம் நினைத்திராத எத்தனையோ தடைகளும், சூழ்நிலைகளும் வந்து சேரலாம். அதற்கென்று திட்டமே வேண்டாம் என்று முடிவு கட்டி விடாதீர்கள். தடைகளைத் தாண்ட முடியுமா என்றும் சூழ்நிலைகளை மாற்ற முடியுமா என்றும் பாருங்கள். முடிந்தால் செய்யுங்கள். அப்போது தான் நம் திறமைகளே நமக்கு அறிமுகமாகும். செய்ய வேண்டியதைத் தொடர்ந்து செய்யுங்கள்.

திட்டமிடும் வாழ்க்கையில் 100 சதவீத வெற்றி கிடைக்காமல் போனாலும் சுமார் 60 சதவீத வெற்றியாவது கிடைக்கும். ஆனால் திட்டமே இல்லாத வாழ்க்கையில் ஒரு சதவீதம் கூட வெற்றி நமக்கு நிச்சயமல்ல. மேலும் திட்டமிட்டு வாழும் வாழ்க்கையில் எதிர்பார்த்த நன்மைகள் நினைத்த அளவுக்கு கிடைக்கா விட்டாலும் தீமைகள் கண்டிப்பாக விளைய வாய்ப்பே இல்லை. ஆனால் திட்டமிடாத வாழ்க்கையில் தீமையே அதிகம் விளையும். எனவே திட்டமிடுங்கள்.

*- என்.கணேசன்*

# ஜெனிவா தீர்மானம்: ஆதரவும் எதிர்ப்பும்




**கோபி**
ஒரு பேப்பர்

ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் இலங்கைத் தீவு தொடர்பிலான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் எதிரொலிப்புகள் இன்னமும் அடங்கியதாகத் தெரியவில்லை. அத்தீவிலிருந்து வெளியிடப்படும் பெரும்பாலான கருத்துகள் வெறுமனே உணர்ச்சி பூர்வமானவையாக அமைந்துள்ள போதிலும், அவற்றில் உள்ளார்ந்த அச்சமும் குழப்பமும் வெளித் தெரிகிறது. ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் முடிந்தவரை நீர்க்க வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் சிறிலங்கா அரசாங்கத்தின் அத்திவாரத்தை அது உலுப்பியுள்ளது என்பதனை கொழும்பிலிருந்து வரும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. வெளியிலிருந்து வரும் எத்தகைய மிரட்டல்களுக்கும் அஞ்சமாட்டோம் என பயில்வான் போல் மகிந்த இராஜபக்ச வெளியிடும் வீரப்பிரதாபங்களை அவரது தீவிர ஆதரவாளர்களே நம்புவதாகத் தெரியவில்லை.

இத்தீர்மானம் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கம் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் தரப்பில் மட்டுமல்லாது தமிழ்த் தேசிய அரசியல் வட்டாரங்களிலும் கருத்துமோதல்கள் தொடர்ந்து வருகிறது. அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம், தொலை நோக்கில், இலங்கைத் தீவின் அரசியலில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும் என்ற எதிர்வு கூறலின் அடிப்படையிலேயே இத்தீர்மானத்திற்கான எதிர்ப்பும் ஆதரவும் அமைந்துள்ளன. இவ்விடயத்துடன் தொடர்புடைய அனைத்து விடையங்களையும் குறித்த எந்தவொரு தரப்பும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாமையால், ஒரு தெளிவான முடிவினை எட்டுவதில் சிக்கல் இருப்பதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நடைமுறை யதார்த்தத்தை புறந்தள்ளிவிட்டு, கோட்பாட்டுரீதியில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்லது மேற்குலகத்திற்கான ஆதரவு என்ற தளத்தில் வெளியிடப்படும் கருத்துகளையிட்டு நாம் அதிகம் அக்கறைகொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் இலங்கைத்தீவின் அரசியலில், அண்மைக்காலத்தில், கோட்டுபாட்டு ரீதியான முடிவுகள் எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் இல்லை. இன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பதாகையை தமது வசதிக்காக தூக்கிப் பிடிப்பவர்களே, தமிழ் மக்கள் மீதான போருக்கு ஏகாதிபத்தியம் வழங்கிய உதவிகளை எந்தவித மறுப்புமில்லாமல் ஏற்றுக் கொண்டவர்கள் ஆவர்.

முதலில், இத்தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தரப்பினரிடையே உள்ள வேறுபட்ட கருத்துகளை பார்ப்போம். இக்கருத்து வேறுபாடுகள் அரசியல் விளிப்புணர்வினால் ஏற்பட்டவை என்பதனால் இவை தொடர்பான விவாதங்களை நாம் வரவேற்க வேண்டியவர்களாக உள்ளோம். இங்கு தமிழர் தரப்பு எனக் குறிப்பிடும்போது, அடிபணிவு அரசியலில் இணைந்திருப்பவர்களை இதில் இணைத்துக்கொள்ளவில்லை என்பதனையும், தாயகத்திலும் அலைந்துழல்வு சமூகத்திலும் உயிர்ப்பு நிலையில் உள்ள அமைப்புகளையும், இயங்கு திறன்கொண்ட செயற்பாட்டாளர்களையும் மாத்திரம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதனையும் நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

தமிழர் தரப்பினர் மத்தியில் மூன்று விதமான கருத்துகள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று, இத்தீர்மானமானது 2009ம் ஆண்டில் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவின் பின்னர் நம்பிக்கை கொள்ளக்கூடிய ஒரு முன்னோக்கிய நகர்வாக அமைந்துள்ளது என்பது. பொதுவில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில், தமிழ் மக்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவுகிறது. இது அரசியல் வியாக்கியானங்களுக்கு அப்பால், தமிழர் தேசத்தின் கூட்டு உளவியலை வெளிப்படுத்துகிறது.

இரண்டாவது, இத்தீர்மானத்தில் குறித்துச் சொல்லும்படியான விடயங்கள் அடங்காவிட்டாலும், சர்வதேசசுயாதீன விசாரணையின் முதற்படியாக இது அமைந்துள்ளது ஆகவே இதனை ஆதரிக்க வேண்டிய நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். மேற்குலகத்தின் ஈடுபாட்டுடன், அல்லது அவர்களது சம்மதத்துடனேயே ஈழத்தமிழர்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற கருத்து. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, கனேடிய தமிழ்க் காங்கிரஸ், அமெரிக்க தமிழ் அரசியற்பேரவை, பிரித்தானிய தமிழ் இளையோர் அமைப்பு என்பவை வெளியிட்ட அறிக்கைகள் இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டவை.

மூன்றாவது கருத்து, இத்தீர்மானம் சிறிலங்கா அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மாத்திரம் நிறைவேற்றக் கோருவதனால், இதனை ஆதரிப்பது நல்லிணக்க ஆணைக்குழவினை ஏற்றுக் கொள்வதாக அமைந்துவிடும். அதேசமயம் இங்கு அரசியற்தீர்வாக பதின்மூன்றாம் திருத்தச் சட்ட மூலம் குறிப்பிடப்பட்டிருப்பதால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ்தேசியத்திற்கான மக்கள் முன்னணி, மற்றும் பதினான்கு நாடுகளில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக்குழுக்கள், தமிழ்நாடு இளைஞர் அமைப்புகள் என்பவை இத்தகைய கருத்தினை அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருந்தன.

மேற்குறித்த கருத்துகளை கொண்டவர்களுக்கிடையில் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீங்கலாக), ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் விடயத்திலும், இறுதித் தீர்வு விடயத்திலும் ஒருமித்த கருத்து நிலவுவதையும் அவரகளுடான தொடர்ந்த உரையாடல்கள் மூலம் கண்டறியக் கூடியதாகவிருந்தது. இங்கு காணப்படும் கருத்து முரண்பாடுகள் முழுமையாக அரசியல் நிலைப்பாடு சார்ந்து அமைந்துள்ளமையும் அவதானிக்க முடிந்தது.

சிறிலங்காவின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதின்மூன்றாம் திருத்தச்சட்ட மூலத்தின் அமுலாக்கமானது, நடைமுறையில், பிரிக்கப்பட்ட வடமாகாண சபைக்கான தேர்தலை நடாத்துவது தொடர்பானது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் என்ற அளவில் பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலத்தை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, அதனை அரசியல் தீர்வின் அடிப்படையாக ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் வாதிடுகிறார்கள். அதே சமயம், வடமாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட்டால் இராணுவ நெருக்குவாரங்கள் குறைக்கபடுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒன்றினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஒரேயடியதானதாக அமையாமல், பல்வேறு படிநிலைகளில் விரிந்து செல்லும் என்பதனால், நாம் விரும்புகிறபடி உடனடியாக சர்வதேச சுயாதீன விசாரணைக்கான பொறிமுறையை ஏற்படுத்தவது நடைமுறைச் சாத்தியமற்றது என இத்தீர்மானத்தை ஆதரித்து நிற்கும் தமிழ் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இத்தீர்மானத்தை கொண்டு வந்த அமெரிக்கா தமிழர் தரப்பிடம் எத்தைகைய உறுதிமொழிகளை வழங்கினார்கள் எனத் தெரியாவிட்டாலும், சிறிலங்காவின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும், ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் ஆதரவினைப் பெறுவதற்காகவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மையப்படுத்தியதாக தமது தீர்மானம் அமைத்திருப்பதாக அமெரிக்க தரப்பில் குறிப்பிடப்பட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

சிங்களத் தரப்பினரிடையிலும் இத்தீர்மானம் தொடர்பில் மூன்று வகையான நிலைப்பாடுகள் வெளித் தெரிகின்றன. சிறிலங்கா அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் இதனை முழுமையாக நிராகரிக்கவேண்டும் எனக் கோரிவருகிறார்கள். மேற்குலக ஆதரவு சக்திகள், குறிப்பாக மேற்குல நிதியுதவியில் இயங்கும் அரசுசாராநிறுவனங்களைச்சேர்ந்தவர்கள் இத்தீர்மானத்தை கவனத்தில் எடுக்குமாறு வலியுறுத்துகிறார்கள். மூன்றாவது தரப்பினர் தீர்மானத்தில் சிலவற்றையாவது நிறைவேற்றி சர்வதேச நாடுகளை திருப்திப்படுத்தலாம் என ஆலோசனை வழங்குகிறார்கள். தமிழ்த் தரப்பினரைக்காட்டிலும் சிங்களத்தரப்பினர் மத்தியில் காணப்படும் கருத்துமோதல்கள் பாரதூரமானவையாக அமைந்துள்ளன. அவற்றின் விளைவாக சிறிலங்காவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், பிரான்சுக்கான சிறிலங்காத் தூதர் தயான் ஜயதிலக்க ஆகியோரின் பதவி எந்நேரத்திலும் பறிக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

> **சிறிலங்காவில் மேற்குலகத்திற்கு இசைவாகச் செயபடக்கூடிய ஒரு ஆட்சி ஏற்படுமிடத்தில் இத் தீர்மானத்தின் தொடர்ச்சி குறைப்பிரசவமாக மாறிவிடும் அபாயம் உள்ளமையை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியவர்களாக உள்ளோம்.**

இத்தீர்மானத்தை ஒட்டிய தமிழ்த்தரப்பின் நடவடிக்கைகள் எவ்வாறு இருப்பினும், இது தொடர்பில் சிறிலங்கா அரசாங்கமும் சிங்கள மக்களும் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் எனபதிலேயே மேற்குலகின் நடவடிக்கைகள் அமையப் போகின்றன. தமிழர்தரப்பு தனது ஆதரவினை வெளியிட்டதன் மூலம் தாம் கடும்போக்காளர்கள் அல்ல என தெரியப்படுத்தியிருக்கினறனர். அதுவே சிங்கள தரப்பினரை இத்தீர்மானத்தையிட்டு அச்சப்பட வைத்துள்ளது என்பதிலிருந்து இனமுரண்பாடு துருத்திக் கொண்டு வெளித்தெரிகிறது.

தமது அரசினால் நிறுவப்பட்ட ஒரு ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் சிறிலங்கா அரசுக்கு சிக்கல்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால் சிங்கள-பௌத்த பேரினவாதத்தினை அடித்தளமாகக் கொண்ட சிறிலங்கா அரசாங்கத்தினால் அத்தகைய விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இவ்விடயத்தில் ஆட்சி மாற்றங்கள் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்த மாட்டாது என்பதனை மேற்குலகத்தினர் ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. ஆகையால், சிறிலங்காவில் மேற்குலகத்திற்கு இசைவாகச் செயபடக்கூடிய ஒரு ஆட்சி ஏற்படுமிடத்தில் இத் தீர்மானத்தின் தொடர்ச்சி குறைப்பிரசவமாக மாறிவிடும் அபாயம் உள்ளமையை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியவர்களாக உள்ளோம்.

Tweet your views to @orupaper

**ஒரு பேப்பர்**
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............ 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House .......... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............ 020 8540 1500
Suvai Aruvi............ 020 8543 6266
Adchaya ............ 020 8540 8192

**Croydon**
Best Foods............ 020 8684 6269
Haran Bros............ 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video............ 020 8664 8351
Spice Land............ 020 8667 1700

**Lewisham**
Chandra ............ 020 8333 8680
Eelam Shop ............ 020 8690 6545
Katpagam ............ 020 8694 8810
AJ Video ............ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ............ 020 8297 9432

**Eastham**
Seelans ............ 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple.... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............ 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan ............ 020 8514 1744
Angels ............ 020 8553 0490
Sri Supermarket .....

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas............ 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans ............ 020 7609 1912
Prabas ............ 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ............ 020 8863 6160
Prabhas ............ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods............ 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods............ 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835


**Greenford**
Ambiha ............ 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Palm Palace ............ 020 8813 9663
Spicy Palace restaurant 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret......... 020 8571 4434


வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
தமிழ்ப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!!!
opening soon
at 99-103 Ealing road
Wembley
specially for
men wear, boys wear
lehnga choli
punjabi chudithars
SRI VENILAS
தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் விலைச் சலுகைகள்...
Special Offer Exclusive Sarees, Designer Lehnga Suits
Designer Pavadai & Half Sarees, Designer Salwar Suits
Designer Costume Jewellery, Exclusive Kancheepuram Sarees
115-117 Ealing Road, Wembley, Middlesex, HA0 4BP
Tel : 020 8903 3144

# கலங்காத கடன்பட்ட நெஞ்சம்



வடக்கிற்கு அரசாங்கம் ஒன்றுமே செய்ய வில்லை என்று கூறும் எதிர்க் கட்சித் தலைவர், நாட்டை உலகிற்குக் காட்டிக் கொடுத்துவிட்டாரென, நாடாளுமன்ற கேள்விநேரத்தின் போது, துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதிய மைச்சர் நிர்மல் கொத்தலாவல பேருண்மை ஒன்றினை வெளியிட்டுள்ளார்

தமிழ்ப் பிரதேசங்களில் வசந்தம் வீசவில்லை என்று சொன்னால், சிங்கள தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் பட்டியலில் ரணிலை யும் இணைப்பதற்குத் தயங்காது இந்த மகிந்த அரசு.

**நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும் பொறிமுறை ஒன்றினை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக உருவாக்க முயல்வது போல் சர்வதேசத்தை ஏமாற்ற எத்தணிக்கும் அரசிற்கு, கூட்டமைப்பை அதற்குள் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவையும் இருக்கிறது.**

மேள தாளங்களோடு ஊர்வலம் போகும் தமிழ் அமைச்சர்கள், வடகிழக்கில் அபிவிருத்திப் பணிகள் பூத்துக் குலுங்குகின்றனவென்று கூறும் பொய்களை, நிஜமென்று நம்ப வேண்டுமென தமிழ் மக்களை நிர்ப்பந்திக்கின்றார்கள்.

உருத்திரபுர சைவக் கோவிலில் புத்தர் சிலை நடுவது அபிவிருத்திப் பணியின் ஒரு முக்கிய மான அம்சமென அரசு கூறினால், அதனை ஆமோதிப்பதே தமது தேசிய பணியென மகிந்தரின் தமிழ் நண்பர்கள் உளற ஆரம்பித்து விடுவார்கள்.

இனப் படுகொலை புரியும் சிங்கள இராணுவத்தைக் காட்டிக் கொடுத்தால் அது தேசத் துரோகம். வடக்கில் அபிவிருத்தி நடைபெற வில்லை என்று வாய் தடுமாறி உண்மையைக் கூறினால் அது சி.ஐ.ஏ.யின் சதி வேலை .

இவ்வாறுதான் பேரினவாத சிங்களத்தின் மகாவம்சப் பரப்புரைகளை, தென் இலங்கையின் சனநாயக ஊடகங்கள் காவிச் செல்கின்றன.

அமெரிக்கத் தீர்மானத்துக்குப் பின்னர், மகிந்த ஆட்சியாளர்கள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கும் தமிழின விரோதப் பரப்புரைகள் இன்னும் தீவிரமடையலாம்.

எமது அதிகார நாற்காலி ஆட்டங்காணாமல் இருப்பதற்கு, அமெரிக்க -இந்திய எதிர்ப்பு வாதங்களை முன்னிலைப் படுத்துவதும், கூட்டமைப்பை பலவீனப் படுத்த முயற்சிப்பதும் எதிர்க் கட்சிகளை உடைப்பதற்கு எத்தணிப்பது என்பன அரசால் மேற்கொள்ளப்படும் முக்கிய மான நிகழ்ச்சி நிரலாகும்.

இதில் கூட்டமைப்பைக் கவனிப்பதற்கு, அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடம் அப் பொறுப்பினை ஒப்படைத்துள்ளார் மகிந்தர்.

அமெரிக்காவுடன் இணைந்து இலங்கைக்கு எதிராக சதி செயலில் ஈடுபடுவதால், அரசியலமைப்பின் 157 வது சரத்தின் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் சம்பிக்க ரணவக்க.

கூட்டமைப்பின் தலைவர்கள் அமெரிக்கா சென்று திரும்பியபோது, இதே விதமான ஆரவாரங்கள் எழுந்தன. ஆனால் ஒன்றுமே நடைபெறவில்லை.

அச்சுறுத்தல்கள் ஊடாக, எவ்வாறாயினும் கூட்டமைப்பை நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்குள் கொண்டுவந்துவிட வேண்டும் என்பதன் அடிப்படையில், காய்களை நகர்த்துகிறது அரசு.

அதாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும் பொறிமுறை ஒன்றினை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக உருவாக்க முயல்வது போல் சர்வதேசத்தை ஏமாற்ற எத்தணிக்கும் அரசிற்கு, கூட்டமைப்பை அதற்குள் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவையும் இருக்கிறது.

தமிழர் தரப்பை நாடாளுமன்ற தெரிவுக் குழு என்கின்ற பொறிக்குள் வீழ்த்தி விட்டால், தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி உள் நுழைய முயலும் மேற்குலகின் நகர்வினை இலகுவில் முறியடித்து விடலாம் என்பதே சிங்களத்தின் தற்போதைய தந்திரோபாய உத்தியாக இருக்கப் போகிறது.

அதனடிப்படையிலேயே, கூட்டமைப்பை அச்சுறுத்தும் வகையில் தமது வசை பாடல்களை அரசின் பேரினவாத அமைச்சர்கள் முன்னெடுக்கின்றார்கள்.

அடிக்கடி நிகழும் வெள்ளை வான் கடத்தல்கள், உளவியல் ரீதியாக, கூட்டமைப்பினரை செயற்பாட்டளவில் பலவீனப் படுத்துமென சிங்கள புலனாய்வுப் பெருமக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

இவை தவிர, வாக்கு வங்கி அடிப்படையில் பெரிய எதிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்துவதற்கு, அதன் உள் முரண்பாடுகளை ஊதிப் பெருப்பிப்பதற்கு, அமைச்சர் விமல் வீரவன்சாவை களமிறக்கியுள்ளார் மகிந்தர்.

ஏகாதிபத்தியங்களின் அழுத்தங்களுக்கேதிராகப் போராடக் கூடிய ஒரே ஒரு சிங்கள தேசியவாதியான, மறைந்த பிரேமதாசாவின் மகன் சஜித் தலைமையில் அணிதிரளுமாறு, ஐ.தே. கட்சியினருக்கு அண்மையில் அழைப்பு விடுத்திருந்தார் விமல் வீரவன்சா.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

அதாவது பொருளாதாரப் பாதிப்புகளுக்கெதிராக, மக்களை அணிதிரட்டிப் போராட முற்படும் எதிர்க் கட்சிகளை, ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராட முன்வருமாறு அழைக்கின்றார்கள் அதிகார வாசிகள்.

தமது இருப்பையும், அதிலிருந்து பெறப்படும் நலன்களையும் இழப்பதற்கு இந்த அமைச்சர் பெருமக்கள் தயாரில்லை என்பதையே இந்த உடைப்பு வேலைகள் வெளிப்படுத்துகின்றன.

ஆகவே ஜெனீவா தீர்மானத்தை முன்வைத்து, ஏகாதிபத்திய எதிர்ப்பு என்கிற பிரமாண்டத்தை கட்டமைத்து, தமது வாக்கு வங்கியைத் தக்க வைப்பதோடு, மக்கள் போராட்டங்களையும் நிர்மூலமாக்கி விடலாம் அல்லது திசை திருப்பி விடலாம் என்பதே அரசின் திட்டம்

அதேவேளை சரிந்து வரும் இலங்கைப் பொருளாதாரத்துக்கு அவசர சிகிச்சை அளிப்பது போன்று, ஏழாவது கொடுப்பனவான 426.8 மில்லியன் டொலர்களை கடனாக வழங்க முன் வந்துள்ளது அனைத்துலக நாணய நிதியம்.

அத்தோடு வரிகள் உயர்த்தப் படுவது, எரிபொருளின் விலை உயர்வது, ரூபாய் நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைவது போன்றவை அனைத்துலக நாணய நித்தியத்துக்கு மகிழ்ச்சியான செய்தி எனத் தெரிவிக்கின்றார் அந் நிலையத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி கலாநிதி கோஷி மத்தாய்.

**அரசின் நிதிக் கொள்கை வெற்றி கண்டுள்ளது என்கின்ற பூசி மெழுகும் சொல்லாடல்களை முன்வைத்து மீதமுள்ள கடனை வழங்கும் இந்த நாணய நிதியம் இச் செய்தியை உயர்த்திப் பிடித்தவாறு, நாடு முன்னேறுகிறது என்று மக்களை ஏமாற்ற முயல்வார் மகிந்தர்.**

கொடுத்தகடனை மீளப் பெறவேண்டுமாயின், மக்கள் மீது வரிச்சுமை அதிகரிக்க வேண்டுமென்கிற கோட்பாட்டில், நாணய நிதியம் தெளிவாகத் தான் இருக்கின்றது.

அடுத்த கொடுப்பனவுக்கான பொருளாதார நிலை குறித்த மீளாய்வு வருகிற ஜூலை 23 ஆம் திகதி நடைபெறப் போகிறது.

அரசின் நிதிக் கொள்கை வெற்றி கண்டுள்ளது என்கின்ற பூசி மெழுகும் சொல்லாடல்களை முன்வைத்து மீதமுள்ள கடனை வழங்கும் இந்த நாணய நிதியம் இச் செய்தியை உயர்த்திப் பிடித்தவாறு, நாடு முன்னேறுகிறது என்று மக்களை ஏமாற்ற முயல்வார் மகிந்தர்.

**தமிழர் தரப்பை நாடாளுமன்ற தெரிவுக் குழு என்கின்ற பொறிக்குள் வீழ்த்தி விட்டால், தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி உள் நுழைய முயலும் மேற்குலகின் நகர்வினை இலகுவில் முறியடித்து விடலாம் என்பதே சிங்களத்தின் தற்போதைய தந்திரோபாய உத்தியாக இருக்கப் போகிறது.**

நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறைக்கு முண்டு கொடுக்கும், அனைத்துலக நாணய நிதியத்தின் கடன் நிறுத்தப்பட்டால், அந்த வெற்றிடத்தை நிரப்ப ஆசிய பொருளாதார ஜாம்பவான் முன் வருவார்.

ஆகவே ஒரேயடியாக வெட்டிவிட மேற்குலகம் இன்னமும் விரும்பவில்லை என்பதையே, நிதியங்களின் கடன் வழங்கல்கள் உணர்த்துகின்றன

தமிழ் தொலைக்காட்சி புதிய இணைப்புக்கள்!! VIJAY TV பார்க்க...

Sky Channelகள் மலிவான விலையில் பொருத்தித் தரப்படும்

அனைத்து விதமான தமிழ் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் சிறப்பான முறையில்...

ஏரியல் பொருத்தித் தரப்படும்-சட்டலைட் இணைப்பு இல்லாமல் டிஜிடல் தரத்தில் தமிழ் தொலைக்காட்சிகள்

CCTV cameraக்களும் பொருத்தித் தரப்படும்

திருத்த வேலைகளுடன் DIGITAL, MPEG-4 தொழில்நுட்பத்துடன்!!

உடன் அழையுங்கள்....

எமது விசேட கழிவு

VIJAY TV பார்க்க ஒரு வருட சந்தா மற்றும் பொருத்தும் செலவு உட்பட £149 மட்டுமே

முக்கிய அறிவித்தல் நேரடியாகத் தொடர்பு கொண்டால் LNP £35க்கு மாற்றித்தரப்படும்

Computer Repair, Computer Assembling வீடுகளுக்கு வந்து செய்து தரப்படும்

DOUBLE LNP குறைந்த கட்டணத்தில் பொருத்திக் கொடுக்கப்படும்

இலவச சானல்களைப் பார்ப்பதற்கு சந்தா அட்டையுடன் மலிவான விலையில் RECEIVER பொருத்திக் கொடுக்கப்படும்.

NANTHAN SATELLITE ☎ 07581 423 532 / 07440 056 339

# வரும் ஆனால் வராது...



சுகி
*(ஒருபேப்பருக்காக)*

எங்கையோ கேட்ட வசனம் மாதிரியில்லை என்று யோசிக்கிறீர்களா? கொஞ்சம் புரிந்த மொழியில் பேசுவோம் என்பதற்கான ஒரு தலைப்பு, இனி விடயத்திற்கு வருவோம், நீங்கள் என்ன நாட்டில் நடக்கவேணும் என்று விரும்புகிறீர்கள் என்று எம்மவர்களைக் கேட்டீர்கள் என்று வைத்தால், "நாட்டில் வாழும் எம் மக்களுக்கு ஒரு நல்ல தீர்வு வந்து, எமக்கு நடந்த அநியாயங்களுக்கெல்லாம் விசாரணை நடந்து, அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்" என்று பலர் சொல்வார்கள். இன்னும் சிலர் "அங்கையிருக்கிற எங்கட people எல்லாம், fight பண்ணாம (எதோ காலையில் எழுந்ததும் யாருடன் சண்டைபிடிக்கலாம் என்று கொடுக்கு கட்டிக்கொண்டு திரிகிறமாதிரி) Okயா, Happyயா இருக்கனும்' என்றும் சொல்வார்கள். மிகக்குறைந்த பகுதியினர், இந்த முறை எங்கட கோயில் திருவிழா வைரவ மடைக்கு நான் அங்கு நிற்கவேணும் என்பர்!

இப்பிடியாக பலவிதமான அபிலாசைகள் இருந்தாலும், மொத்தத்தில் எல்லா தமிழ் மக்களும் வேண்டுவது தமக்கு நடந்த அநியாயமான படுகொலைகளுக்கும், இன்னும் நடந்து கொண்டிருக்கும் ஆள்கடத்தல்களுக்கும், விசாரணைகள் எதுவுமின்றி வருடக்கணக்கில் அடைபட்டிருக்கும் எம் மக்களுக்கும் சரியான விசாரணைகளும், நீதியும்தான். நீதி என்பது ஏதோ மந்திரத்தால் மாங்காய் விழுத்துவது போன்றதொன்றல்ல. நாம் கொஞ்சமும் ஒத்துழைப்பின்றி இருக்க யாரோ எங்களுக்காக குரல் எழுப்பி, யாரோ எங்களுக்காக நடந்த கொடுமைகளுக்கான ஆவணங்களைச் சேகரித்து, யாரோ எங்களுக்காக, போர் குற்ற விசாரணைக்குக் கையெழுத்து போட்டு எல்லாம் நடக்க, நாம் தமிழ் சினிமாவை எமது தொலைக்காட்சியில் பார்ப்பது போன்று பார்த்து, நல்லா செய்திருக்கிறார்கள். முடிவு அருமையிலும் அருமை என்று சொல்லி விட்டு போவது போன்றதொன்றல்ல இது.

ஆங்கிலத்தில் விளம்பரம் போடுவார்கள், "Do your Bit" என்று, ஒவ்வொருவரும் அவரவர் பங்கை செய்தால், எல்லோரும் நினைப்பது நிறைவேறும். எப்படி எமது பங்கை செய்யலாம். எமது பங்கை நாம் சரியாக, தூரப்பார்வையுடன் சிந்தித்துச் செய்கிறோமா? என்று யோசிக்கவேண்டும். சில பேருடன் கதைத்தால் அல்லது சில தன்னார்வதொண்டர்நிறுவனங்களுடன் கதைத்தால் நீங்கள் அரசியல் கதைக்கிறீர்கள் எமக்கு இது சரிவராது என்கிறார்கள். இது 21ம் நூற்றாண்டு இங்கு சகலதும் அரசியல் தான். அவதியுறும் மக்களுக்கு உதவுவது, உதவி மறுப்பது, அகதிகள் வரவிடுவது, அகதிகள் வருகையை தடை செய்வது, Diversity பற்றிக்கதைப்பது, அத்தோடு BNP அரசியல் கட்சியையும் பதிவு செய்ய விடுவது, உதவி நிறுவனங்களுக்கு நிதி கொடுப்பது, நிதி மறுப்பது எல்லாமே அரசியல் தான். மனிதவுரிமை கூட அரசியல் லாபம் இல்லை என்றால் கதைக்கப்படுவது இல்லை. எனவே நாம் எல்லோருமே இந்த பெரிய உலகம் தொடங்கி உள்ளூர் அரசியல் வரை, அவர்களது அரசியல் விளையாட்டில் எமது நிலைகளில் செயல்படுகிறோமோ இல்லையோ பேசும் பொருள் ஆகுகிறோம். நாம் செயல்படாத நிலையில் நாம் இப்படி நினைக்கிறோம், அப்படி நினைக்கிறோம் என்று நாம் நினைக்காத ஒன்றுக்காக, நாம் செயல்படாது இருப்பதாக உருவகிக்கப்பட்டு, பேசும் பொருள் ஆகுகிறோம். எப்படியாவது மற்றவர்கள், எமது ஜடநிலையை தமது அரசியலுக்கு உபயோகிப்பதற்கு வழிசமைத்துக் கொடுப்பதை விட, நாம் கொஞ்சம் எமது உறைநிலையில் இருந்து வெளிவந்து நாம் நினைப்பதை வெளிப்படையாக சொல்லுவோமேயானல், நாம் மற்றவர்களால், மற்ற நாடுகளால், அவர்களது அரசியல் விளையாட்டில் பகடைகாய்களாக நகர்த்தப்படுவதை இல்லாமல் செய்து, எமது நினைப்பையும் செயலையும் ஒரு நேர் கோட்டில் பயணிக்க வைக்கலாம்.

இதற்கு பெரிதாக உங்கள் உயிரைக் கொடுக்கத் தேவையில்லை. உங்கள் வீட்டை ஈடு வைக்கத்தேவையில்லை கஷ்டப்படுகிற சனத்திற்கென 10, 20 பவுண்சைக் கொடுத்தால் சரியா என்றால், அது கூட அவர்களுக்கு நாளாந்தம் வெந்ததை உண்பதற்கும், விதிவந்த போது சாவதற்கும் ஆக தற்காலிக தீர்வுக்கு உதவுமே தவிர, நிரந்தர விடிவையோ, நிரந்தரமான உழைப்பையோ, தமிழனாக தலைநிமிர்ந்து வாழ்வதற்கோ வழி சமைக்காது. ஆகவே அந்த உதவியை செய்வதோடு, நிரந்தர தீர்வுக்கு எம்மால் ஆன பங்களிப்பில் எதைச்செய்யலாம் என்று சிந்தித்து செயல்பட வேண்டும். வேலையை செய்தோமா, மோட்கேச் பணத்தைக் கட்டினோமா? வருடம் ஒரு விடுமுறை போனோமா? அப்படத்தை பேஸ்புக்கில் போட்டோமா? என்று எல்லோரும் இருந்துவிட்டுபோர் குற்ற விசாரணை எந்தளவில் உள்ளது. எங்களுக்கு அநியாயம் செய்தவங்களை சும்மா விடக்கூடாது என்றால், உங்களின் பங்களிப்பு என்ன? அதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று மனதார சிந்திக்க வேண்டும். சுயாதீன விசாரணையை கோரி விண்ணப்பத்தில் கையொழுத்திடலாம்.

**போர்க்குற்ற விசாரணை எந்தளவில் உள்ளது. எங்களுக்கு அநியாயம் செய்தவங்களை சும்மா விடக் கூடாது என்றால், உங்களின் பங்களிப்பு என்ன?
அதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று மனதார சிந்திக்க வேண்டும்.**

http://epetitions.direct.gov.uk/petitions/14586 மற்றும் இனப் படுகொலைக்கான சாட்சிளை ஒழுங்கு படுத்தி அச்சாட்சிகள் பதிவுசெய்யப்பட உதவலாம். போர்குற்ற விசாரணை வருமா? இனப்படுகொலைக்கு தீர்வு வருமா? என்றால், வரும், கட்டாயம் வரும். ஆனால் வராது எப்போது என்றால் எங்கள் ஒத்துழைப்பு ஒரு முழுமையாக இல்லாவிட்டால். ஆகவே விரைந்து, இணைந்து, முழு மனதுடன் செயல்படுவோம்.

சுயாதீன விசாரணையை கோரி விண்ணப்பத்தில் கையெழுத்து இடுவதற்கு QR App வருடியூடக Scan செய்யவும்






# அல்லாவின் இராணுவமும் சனி துரத்தும் சார்கோசியும்

சாத்திரி
(ஒரு பேப்பர்)

பிரான்சில் தேர்தல் இந்த மே மாதம் நடக்கவுள்ள நிலையில் தேர்தல்களம் சூடு பிடித்துள்ளது. இரண்டு தடவை வலது சாரிக்கட்சி ஆட்சியில் இருந்து விட்டது இரண்டாவது தடவை வலது சாரிக்கட்சியில் நிக்கலோலா சார்க்கோசி பிரான்சின் அதிபராகியிருந்தார். எனவே இந்தத் தடவை சோசலிசக்கட்சியிடம் பிரான்ஸ் மக்கள் ஆட்சியை ஒப்படைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதைப்போலவே கருத்துக்கணிப்புக்களும் ஊடகசெய்திகளும் வெளியாகிக்கொண்டிருந்தது. சோசலிசக் கட்சியின் வேட்பாளர் françois hollande கருத்துக் கணிப்புக்களில் முதலிடத்தில் இருந்தார். சார்க்கோசி இந்தத் தடவை போட்டியிடமாட்டார் என்பது போல போக்கு காட்டிக்கொண்டிருந்தவர் திடீரென தேர்தல் களத்தில் குதித்தார். தேர்தலில் குதித்த எல்லாக்கட்சிகளுமே முன்வைத்த முக்கியமான விடையங்கள் பொருளாதார சரிவு. வேலையில்லா திண்டாட்டம். வெளிநாட்டவர்களின் வருகை எனபதே பேசு பொருளாகியிருக்கின்றது. அதிதீவிர வலது சாரிக்கட்சியோ (F.N) வழமை போல வெளிநாட்டவர் வருகையை தடுக்கவேண்டும் என்றும் பிரான்ஸ் ஐரோப்பிய ஒன்றித்திலிருந்து வெளியேறவேண்டும் என்பதே அதன் தலைவி marine lepen அவர்களின் முக்கிய பிரச்சாரம்.

நான் ஆட்சிக்கு வந்தால் முதலாவது வேலையாக ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரான்சை நீக்கி பொருளாதார கொள்கைளில் மாற்றம் கொண்டு வருவேன். அதோடு வெளிநாட்டவர் வருகை அதோடு ஆசிய ஆபிரிக்க அகதிகளின் வருகையையும் கட்டுப்படுத்துவேன் என்று அதிரடி வாக்குறுதிகளை அள்ளிவிட்படி சார்க்கோசி களத்தில் குதித்ததும் மற்றைய கட்சிகள் வாயடைக்க கருத்துக்கணிப்பில் சார்க்கோசியின் புள்ளிகள் மளமளவென மேலேறி சோசலிச கட்சி வேட்பாளரை தொட்டுநின்றது. இப்படி தேர்தல் களம் சூடு பிடித்துக்கொண்டிருக்கும் போது ஒரு துப்பாக்கிச்சூடு அத்தனை யையும் புரட்டிப்போட்டது.

11ந்திகதி மார்ச் மாதம் பிரான்சின் துலூஸ் நகரப் பகுதியில் வசிக்கும் ஒரு இராணுவ வீரர் தன்னுடைய ஸ்கூட்டர் விற்பனைக்குள்ளதாக இணையத்தில் ஒரு விளம்பரத்தை போடுகிறார். விளம்பரத்தை போட்டவர் ஸ்கூட்டர் பற்றிய விபரத்தை மட்டும் போட்டிருக்கலாம். ஆனால் அவரிற்கு வேண்டாத வேலை தான் ஒரு இராணுவவீரன் என்று அடைப்புக் குறிக்குள் போட்டிருக்கிறார். இங்குதான் வினையே ஆரம்பமானது. அவரது ஸ்கூட்டரை வாங்க விரும்புவதாகவும் அவர் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு அன்று மாலை நேரம் அந்த நகரத்தின் ஒரு பொதுவாகனத் தரிப்பிடத்திற்கு வருமாறும் ஒரு தொலைபேசி அழைப்பு அவரிற்கு வந்திருந்தது. ஸ்கூட்டர் விற்ற பணத்தை காசாக வாங்கலாமா? காசோலையாக வாங்கலாமா ? என்று நினைத்த படி வாகனத்தரிப்பிடத்தில் போய் காத்திருந்தவரை நோக்கி இன்னொரு ஸ்கூட்டரில் இருவர் வருகிறார்கள். வந்தவர்களில் ஒருவன் அவர் அருகில் வந்ததும் திடீரென துப்பாக்கியை எடுத்து அவரது நெற்றியில் பொட்டென்று போட்டவன் .அவரது ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு தலைமறைவாகிவிடுகிறான்.

அப்பொழுதான் சனிபகவான் ஏழாம் வீட்டிலிருந்து சார்கோசியை பார்த்து புன்னகைக்கிறார். 15.03.12 அன்று அதே நகரத்தில் இன்னொரு பகுதியில் ஸ்கூட்டரில் வந்த இருவர் இயந்திர தப்பாக்கியால் சரமாரியாக சுடுகிறார்கள். இறந்தவர்கள் மூன்று பிரெஞ்சு இராணுவத்தினர். ஆனாலும் வேற்று இனத்தவர்கள். இப்பொழுது இரண்டாவது தடைவையாக சனி பகவான் சார்கோசியை பார்த்து சிரிக்கிறார். 20.03.12 அதே நகரத்தின். இன்னொரு பகுதியில் யூத இனத்தவர்களின் மத பாடசாலையின் முன்னால் ஒரு ஸ்கூட்டரில் வந்த இருவர் சரமாரியாக சுடுகிறார்கள் மூன்று யூத குழந்தைகள் சுருண்டு விழுகிறார்கள். இப்பொழுது சனி பகவான் சார்கோசியை பார்த்து விழுந்து விழுந்து சிரிக்கிறார். இதுவரை உள்நாட்டு பிரச்சனையாக இருந்த விடயம் சர்வதேச பிரச்சனையாகின்றது. இஸ்ரேலிய பிரதமர் கண்டிக்கிறார். வெளிநாட்டு ஊடகங்கள் எல்லாம் தங்கள் கமராவை பிரான்ஸ் நோக்கி திருப்புகின்றனர். பரபரப்பாக நடந்து கொண்டிருந்த அனைத்து தேர்தல் பிரச்சாரங்களும் இரத்துச் செய்யப்படுகின்றது. பிரான்சில் சார்க்கோசியின் நிருவாகத்தில் பொதுமக்களிற்கு மட்டுமல்ல குழந்தைகளிற்கும் பாதுகாப்பில்லை என்கிற குற்றச்சாட்டை சோசலிச கட்சி பிரமுகர் வீசுகிறார். அமைச்சரவை கூடுகின்றது. உளவுத்துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்துகின்றார்கள். காவல்த்துறை கொலையாளியை கண்டு பிடிக்க தனிப்படைகளை அமைக்கின்றது. அப்பொழுதான் கொலையாளி பற்றிய முதலாவது ஆதாரம் சிக்குகின்றது. முதலாவதாக சுட்டுக்கொல்லப் பட்டவனின் ஸ்கூட்டர் இலக்கத்தை எடுத்த காவல்துறை அதில் பொருத்தப் பட்டிருக்கும் எலெக்றோனிக் தகட்டினை GPS முறைமூலம் தேடிய பொழுது அது காட்டிய புள்ளியில் போய் பார்க்கின்றார்கள். அது ஒரு வாகனத் திருத்துமிடம் ஸ்கூட்டரின் எலெக்றோனிக் தகடு தனியாக கழற்றிப் போடப்பட்டிருந்தது. அடுத்ததான கொலையாளியின் தொ:பே இலக்கத்தை கண்டு பிடித்த காவல் துறையினரின் இன்னொரு பிரிவினர் அதனை ஒட்டுக்கேட்கத் தொடங்கியிருந்தனர். கொலையாளி அடையாளம் காணப்படுகிறான் முகமட் மேரா வயது23 அல்ஜீரிய இனத்தை சேர்ந்தவன். அவனது விலாசத்தை அறிந்து கொண்ட காவல் துறையினர் அதன் அமைவிடம் பற்றியும் அவனது குடும்பம் பற்றிய விபரங்களை உடனடியாக சேகரித்து முடித்தனர்.

*21.03-அதிகாலை 03.10 மணி*

கொலையாளி தனியாக வசித்து வந்த வீடு காவல்த்துறையால் சுற்றிவளைக்கப்படுகின்றது. ஆட்களின் நடமாட்டத்தை அறிந்த கொலையாளி யன்னலை திறந்து பார்த்து காவல்துறை சுற்றி வளைத்ததை அறிந்தது தானியங்கி துப்பாக்கியால் சுடுகிறான். இரண்டு காவல்த் துறையினர் காயமடைகின்றனர்.

*அதிகாலை 03.30*

காவல்துறையினர் கொலையாளியுடன் பேச்சு வார்த்தை நடத்துவதெனவும் அதே நேரம் அந்த குடியிருப்பில் உள்ளவர்களை பத்திரமாக வெளியேற்றுவதெனவும் முடிவு செய்து பேச்சு நடத்துவதற்காக ஒரு negotiator வைவழைக்கப் பட்டதோடு குடியிருப்பிலிருந்தவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

*காலை 5.00 மணி*

பேச்சு வார்தை நடத்துவதற்கு இலகுவாக கொலையாளிக்கு ஒரு நடைபேசி(வோக்கி ரோக்கி) கொடுப்பதெனவும் அதற்கு பதிலாக அவன் தன்னிடமிருக்கும் ஆயுதங்களில் ஒன்றை வெளியில் எறியவேண்டும் என கோரிக்கை வைக்கப்படுகின்றது அதற்கு கொலையாளியும் இணங்குகிறான். அவர்களது பேச்சு வார்தையை பிரான்ஸ் அதிபர் சார்க்கோசியிலிருந்து முக்கிய அதிகாரிகள் புலனாய்வுதுறையினர் அனைவருமே கேட்பதற்கு வசதி செய்யப் படுகின்றது

*காலை 5.30 மணி*

கொலையாளியின் குடும்பத்தில் தாயார் அவரது சகோதரி இரண்டு மூத்த சகோதரர்கள் அனைவரும் வெவ்வேறு வீட்டில் கைதுசெய்யப் படுகின்றனர்

*காலை 7.20 மணி*

கொலையாளிக்கு வோக்கி ரோக்கியொன்று யன்னலால் எறியப்படுகின்றது அவனும் colt 45 ரக துப்பாக்கியை ஜன்னலால் எறிகின்றான். பேச்சு வார்தை தொடங்குகின்றது அவனும் தன்னை அல்லாவின் இராணுவம் என்று அறிவித்தபடி பேசத் தொடங்குகிறான். ஆப்கானிலும் ஈராக்கிலும் பொது மக்களை கொன்றதற்காக பிரெஞ்சு இராணுவத்தினரை கொன்றதாகவும் பாலஸ்தீனத்தில் குழந்தைகளை இஸ்ரவேல் கொலை செய்ததற்காக அதன் வலி யூதர்களிற்கும் தெரியவேண்டும் என்பதற்காக யூதக் குழந்தைகளை கொன்றதாக தெரிவித்தவன் நிறையவே பேசினான்.

*காலை 9.15 மணி*

அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காரில் மேலும் பல ஆயுதங்களை காவல்துறையினரால் கைப்பற்றப்படுகின்றது. கொலையாளியின் வீட்டில் பயங்கர வெடிபொருட்கள் இருக்கலாமென நினைத்து அந்தப் பகுதியின் மின்சாரம் தண்ணீர்.மற்றும் காஸ் இணைப்புக்கள் துண்டிக்கப்படுகின்றது.

*காலை 11.00*

பத்திரிகையாளர்கள் பொதுமக்கள் அனைவரும் ஒரு கி.மீற்றர் தூரத்திற்கு அப்பால் நகர்த்தப்பட்டு தடை போடப்படுகின்றது பத்திரிகையாளர்களிற்கு செய்தி கொடுப்பதற்கு ஒரு அதிகாரி நியமிக்கப்படுகிறார். இனி அவர் சொல்வது தான் செய்தி

*மதியம் 12.05*

கொலையாளி மீண்டும் தொடர்பு கொள்கிறான் நாட்டின் அதிபரிலிருந்து அனைத்து அதிகாரிகளும் உசாராகின்றனர். தொடர்பு கொண்டவன் தனக்கு பசிக்கின்றது ஒரு KEBAB sandwuch நல்ல உறைப்பு சோஸ் harisa போட்டு உடனே வேணும் என்கிறான். அதனை கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் ஒருத்தரையொருத்தர் பாரக்கிறார்கள். ஒரு போலிஸ் அதிகாரி சைரனை சுழல விட்டபடி KEBAB வாங்க விரைகிறார்

*பி.பகல் 13.20*

கொலையாளியை உயிருடன் பிடிப்பதே எமது நோக்கம் என சார்க்கோசி அறிவிக்கிறார். கொலையாளியும் மாலை சரணடைய இருப்பதாக தகவலை வெளியிடுகிறார். இப்படியாக போய்க்கொண்டிருக்கும் போது தீவிர வலது சாரிக்கட்சி தலைவி மரின்லூப்பன் பிரான்சில் வெளிநாட்டவர்களின் தொல்ல அதிகரித்து விட்டது சார்க்கோசி என்ன செய்கிறார் கர்சிக்கிறார். கொலையாளியை உடைனேயே கொன்றுவிட்டால் பிரான்சில் பெரும்பான்மை முஸ்லிம்களின் வாக்கை இழக்கவேண்டிவரும். அதே நேரம் அவனை பிடித்து அரசாங்க செலவில் வைத்து பராமரிக்கவேண்டுமா என யூதர்கள் மட்டுமல்ல பிரெஞ்சுக்காரர்களும் கேள்வி எழுப்பினார்கள். கொலையாளி தனியாகத் தானே இருக்கிறான் ஏன் அதிரடி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென ஊடகங்களும் குடையத் தொடங்கியிருந்தன.

## மீண்டும் தேர்தல் பிரச்சாரங்கள் சூடு பிடித்துள்ள நிலையில் சார்க்கோசிக்கு பொங்கு சனியா மங்கு சனியா என்று பொறுத்திருந்து தான் பாரக்க வேண்டும்.

தேர்தல் நெருங்கும் நேரத்திலையா இப்பிடி ஒருத்தன் பிரச்சனை செய்யவேண்டும் என நினைத்த சார்க்கோசி அவர்கள் உள்துறை அமைச்சரையே சம்பவ இடத்திற்கு அனுப்பகிறார். மறுநாள் காலை11.30 கொலையாளி துப்பாக்கியால் சுட்டபடி யன்னலால் பாய்ந்த பொழுது சுட்டுக்கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகின்றது.

வலையமைப்பில் பிரான்சில் இயங்கிய பலர் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனை வைத்துப் பார்க்கும் போது கொலையாளி உணவு கேட்ட தருணத்திலேயே பிரான்சின் விசேட கொமாண்டோ படையணியினர் உள்நுளைந்து கொலையாளியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விசாரணைகளை நடத்தி அவனிடமிருந்து சகல விபரங்களையும் கறந்த பின்னர் அவனை சுட்டுக்கொன்றுவிட்டு. பின்னர் சாதாரண காவல்த்துறையினர் துப்பாக்கி சூடு நடத்துவதுபோல் ஒரு நாடகத்தை ஆடிவிட்டு கொலையாளி கொல்லப்பட்டான் என அறிவித்திருக்கலாம். ஏனெனில் இது போன்ற பயங்கர ஆயுதங்களுடன் இருக்கும் தீவிரவாதிகள் மீது விசேட கொமாண்டோ படையினரின் நடவடிக்கைகள் ஒன்றும் புதியது அல்ல. ஆனால் மீண்டும் தேர்தல் பிரச்சாரங்கள் சூடு பிடித்துள்ள நிலையில் சாரக்ககோசிக்கு பொங்கு சனியா மங்கு சனியா என்று பொறுத்திருந்து தான் பாரக்கவேண்டும்.

**கடன் சுமையால் கஷ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN




BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

R3

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

# ஜெனீவாத் தீர்மானமும் மஹிந்தவின் எதிர்காலமும்



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

உலகத்திலேயே அதிக அதிகாரம் கொண்ட மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரச தலைவர் மஹிந்த ராஜபக்ச. தனது மக்களிடம் அசைக்க முடியாத செல்வாக்குப் பெற்றிருந்தார். இவரது செல்வாக்கு நேர்மை நியாயத்தின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்டதல்ல. சந்திரிக்கா பண்டாரநாயக்க இலங்கைக் குடியரசுத் தலைவராக இருந்த போது பிரதம மந்திரியாக யாரை நியமிப்பது என்ற கேள்வி வந்த போது அவரின் அரசியல் செல்வாக்கிற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருந்த சிங்கள தீவிரவாதக் கட்சியான ஜனதா விமுக்திப் பெரமுனையைத் திருப்திப் படுத்த அவர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த மஹிந்த ராஜபக்ச பிரதம மந்திரியாக்கப் பட்டார். அதில் இருந்து அவர் தனது செல்வாக்கைக் கட்டி எழுப்பி தொடர்ந்து வந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று சந்திரிக்கா பண்டார நாயக்காவை ஓரம் கட்டி தனது கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியைத் தன் குடும்பவசமாக்கினார். பின்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்று தனது செல்வாக்கை உச்சத்திற்கு கொண்டு சென்றார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் மஹிந்தவிற்கு பல நாடுகள் உதவின. முக்கய உதவிகள் இந்தியாவிடமிருந்தும் சீனாவிடமிருந்தும் கிடைத்தன. இதில் இந்தியாவிற்கு விடுதலைப் புலிகளை ஒழிக்க வேண்டும் என்ற தேவை இருந்தது. மஹ்ந்த ராஜபக்ச பகிரங்கமாக அறிவித்தார் இந்தியாவின் போரை தான் நடத்தி முடித்ததாக.

## சமாதானப் பங்கிலாபம் (Peace Dividends) சரியாகப் பங்கிடப்படவில்லை.

போருக்கு பின்னரான 'அபிவிருத்திப் பணி' எனப்படும் பொருளாதாரச் சுரண்டலில் இலங்கை சீனாவிற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தது. போருக்குப் பின்னர் நடந்த இலங்கைக் குடியரசுத் தேர்தலில் அமெரிக்கா சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாகச் செயற்பட்டமை மஹிந்த ராஜபக்சவை அதிகம் சீனாபக்கம் நகர்த்தியது. தமிழர்களுக்கு எதிரான போர் முடிந்த பின்னர் 2011இல் இலங்கைக்கு அமெரிக்க மக்களவை உறுப்பினர் சிலர் ஒரு பயணத்தை மேற்கொண்டனர். இலங்கை சீனாபக்கம் சாராமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்குடன் அவர்கள் பயணம் அமைந்தது. அவர்கள் தம் நோக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டனர்:

- இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளமை அதிகம் கவலையை ஏற்படுத்துகிறது.
- இலங்கையுடனான அரசியல், படைத்துறை மற்றும் வர்த்தக ரீதியிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதன் ஊடாகவே இலங்கையில் சீனாவின் தலையீட்டைக் குறைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. புவியியல் ரீதியாக இலங்கையில் அமைவிடம் மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததுஎன்பதால், இலங்கைமீதானகவனத்தை அமெரிக்கா இழக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ச இதைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இந்தியாவின் கையாலாகத் தனம் அமெரிக்காவைக் களமிறக்கியது.

இலங்கையில் தமிழர்களின் ஆயுத போராட்டத்தை ஒழிப்பதே தனது பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட இந்திய ஆட்சியாளர்கள் இந்தியாவின் பிராந்திய நலன்களைக் கோட்டை விட்டனர். இதனால் இலங்கையில் சீன ஆதிக்கம் அதிகரித்தது. இலங்கை இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்துக்குள் உட்பட்ட நாடு என்று இந்தியாவின் போக்கிற்கு விட்டால் இலங்கை இன்னொரு கியூபா ஆகிவிடும் என்று உணர்ந்த அமெரிக்கா இலங்கை விவகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டது. இலங்கைக்கு எதிராக செயற்படத் தொடங்கிய அமெரிக்கா பல தடைகளை இந்தியாவிடமிருந்து எதிர் கொள்ள வேண்டியிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கழகத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக இந்தியா பல வகைகளிலும் செயற்பட்டது. பல சிரமங்களுக்கு மத்தியில் இந்தியாவின் ஆதரவை அமெரிக்கா பெற்றுக் கொண்டது. தீர்மானத்திற்கு எதிராக இந்தியா வாக்களித்த பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை அதிபர் ராஜபக்சவிற்கு ஒரு கடிதம் எழுதினார். இலங்கையை இந்தியா அக்கடிதத்தில் மன்றாடியிருந்தது என்று இலங்கை அரசியல்வாதிகள் தெரிவித்தனர். இந்திய அரசறிவியலாளர் சூரியநாராயணன் அப்படி ஒரு கடிதம் இந்தியா எழுதியிருந்திருக்கத் தேவையில்லை என்றார். இலங்கையின் கையில் இந்தியா தொடர்பான ஒரு பிடி இருந்தபடியால்தான் அப்படி ஒருகடிதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். அது இலங்கையில் நடந்த போர்க்குற்றதில் இந்தியாவின் பங்களிப்பைத் தவிர வேறு என்ன?

## ஜெனீவாத் தீர்மானத்தின் பின்னர் ராஜபக்ச

ஐநா மனித உரிமைக் கழகத்தில் இலங்கைகு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்னர் ராஜபக்ச தனது அரசியல் சகாக்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை. கொழும்பில் உரையாற்ற விருந்த அமெரிக்கர்களை தடை செய்தார். இந்தியா கஷ்மீரில் செய்யும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தப் போவதாகச் சொன்னார். அமெரிக்காவிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை அரங்கேற்றினார். தனது சகாவான விமல் வீரவனசவை அமெரிக்கப் பொருட்களைப் புறக்கணிக்க அறைகூவல் விடுக்கச் செய்தார். தான் என்ன செய்ய வேண்டும் என்று தனக்கு யாரும் சொல்லத் தேவையில்லை என்றார். அவரது அடியாள் மேர்வின் சில்வா ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கருத்துத் தெரிவித்த ஊடகவியலாளர்களின் கை கால்களை முறிப்பேன் என்றார். பசில் ராஜபக்ச சகல வெளிநாட்டுப் பொருட்களையும் புறக்கணிக்க வேண்டுமென்றார். ஆக மொத்தத்தில் ராஜபக்ச ஜெனீவாத் தீர்மானத்தை ஏற்கும் நிலையில் இல்லை. நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாயின் இலங்கைப் படையினரின் போர்க்கால அத்துமீறல்களை விசாரித்துத் தண்டிக்க வேண்டும். இது 'மஹிந்த சிந்தனைக்கு' முற்றிலும் முரணானது.

## மூன்று மாதங்களின் பின்னர் அமெரிக்கா மேலும் தீவிரமாகும்

இலங்கையின் அடுத்த நகர்வுகளை அமெரிக்கா உன்னிப்பாகக் கவனிக்கும். மூன்று மாதங்களின் பின்னர் அமெரிக்கா தனது காய்களை தீவிரமக நகர்த்தும். கியூபா போன்ற இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்ட நாடுகளுக்கு இலங்கையின் உண்மையான அடைகுமுறை பற்றி உணர்த்தப்படும். அதற்குரிய வேலைகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. பன்னாட்டு அறிஞர்கள் குழு ஜெனீவாத் தீர்மானம் வெளிவந்தவுடன் இலங்கை இன்னும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிக்கை விட்டது. இது அமெரிக்காவின் வேண்டுதலின் பேரில் நடந்திருக்கலாம். ஜெனீவாத் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரை அது அமெரிக்காவின் தீர்மானம். அது நிறைவேற்றப்பட்ட பின்னர் அது ஐநா மனித உரிமைக் கழகத்தின் தீர்மானம். இனி அந்த தீர்மானம் தொடர்பாக இலங்கை என்ன செய்கிறது என்பதை மனித உரிமைக் கழகம் அவதானிக்கும். இலங்கைக்கு ஆலோசனைகள் வழங்க முன்வரும். அவற்றை மஹிந்த நிராகரிப்பார். ஜெனீவாத் தீர்மானத்தின் முக்கிய அம்சம் இலங்கை மனித உரிமைக் கழகத்தின் ஆலோசனையைப் பெற வேண்டும் என்பதும் மனித உரிமைக் கழகம் அது தொடர்பாக 2014 செப்டம்பரில் நடக்கவிருக்கும் மனித உரிமைக் கழகக் கூட்டத் தொடரில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதே.

## இந்தியாவின் போர்க்குற்றம் அம்பலத்துக்கு வருமா?

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்களில் இந்தியாவின் பங்களிப்பு அம்பலத்திற்கு வரும். எத்தனை இந்தியப் படையினர் நேரடியாக ஈடுபட்டிருந்தனர் என்பதும் உண்மையிலேயே மூவாயிரத்திற்கு மேற்பட்ட இந்தியப் படையினர் கொல்லப்பட்டனரா என்பதும் சிவ சங்கர மேனனின் திருவிளையாடல்கள் நாராயணின் லீலைகள் கருணாநிதியும் சிதம்பரமும் சேர்ந்து ஆடிய நாடகங்கள் கனிமொழி, ஜகத் கஸ்பர் போன்றோரின் "இறுதிக் கட்டச் சதிகள் போன்றவை அம்பலமாகும். அமெரிக்கா எந்நேரமும் இலங்கைப் போர்க்குற்றம் தொடர்ப்பாக ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்க விருக்கிறது. அதில் போர்க்குற்ற ஆதாரங்கள் அடங்கிய பல படங்கள் வெளியாகலாம். அமெரிக்காவிடமும் இந்தியாவிடமும் இலங்கையின் இறுதிப் போரின்போது நடந்த கொடூரங்களுக்கான ஆதார செய்மதிப் படப் பதிவுகள் எப்படியாவது இனி அம்பலத்திற்கு வரும். அது பெரிய போர்க்குற்ற சாட்சியாக அமையும்.

## ஜீ.எல் பீரிஸ் மீண்டும் தாவுவார்.

ஜெனீவாவில் நடந்த 19வது மனித உரிமைக் கழகக் கூட்டத் தொடரில் பெரும் சோதனைக்கும் வேதனைக்கும் உள்ளானவர் மஹிந்தவின் வெளிநாட்டு அமைச்சர் ஜீ எல் பீரிஸ். இவர் மஹிந்தவால் ஜெனீவாவில் வைத்துக் கடுமையாகத் கண்டிக்கப் பட்டுள்ளார். மஹிந்த தனது வெளிநாட்டமைச்சர் பீரிஸை கடுமையான தூஷண வார்த்தைகளால் திட்டியதாகவும் அதனால் அவர் அமர்ந்திருந்த ஆசனத்தயே ஈரமாக்கி விட்டதாகவும் கொழும்பில் கதைகள் அடிபடுகின்றனவாம். பீரிஸ் கட்சி தாவுவதில் பிரபலமானவர். விரைவில் ஜீ எல் பீரிஸ் மஹிந்தவை விட்டு விலகலாம். ஜீ எல் பீரிஸ் உள் இருந்து கொண்டே அமெரிக்காவின் உளவாளியாகச் செயற்படலாம். அதனால் அவரை மஹிந்த பதவியில் இருந்து தூக்கி எறியலாம். இந்த இரண்டு முறையில் எந்த முறையில் பீரிஸ் பதவி விலகினாலும் அப்போது மஹிந்தவின் முடிவு ஆரம்பமாகிவிட்டது என உறுதியாக்கூறலாம். இந்த வரியை எழுதும் வரை பீரிஸ் மஹிந்தவுடன் இருக்கிறார். ஆனால் இதை நீங்கள் வாசிக்கும் போது இருப்பாரா?


## 2014 செப்டம்பர் ராஜபக்சவிற்கு பெரும் திருப்பு முனையாக அமையும்

2013இல் இருந்து ஐநா மனித உரிமைக் கழகத்தில் இலங்கை பற்றி மிக அதிகமாகப் பேசப்படும். 2014 செப்டம்பரில் நடக்க இருக்கும் மனித உரிமைக் கழகக் கூட்டத் தொடரில் ராஜபக்ச தான் முக்கியத்துவம் பெறுவார். அதில் அல்லது 2015 மார்ச்சில் ராஜபக்சவிற்கு எதிராக கடுமையான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அப்போது அவர் மும்மர் கடாஃபி போல் பன்னாட்டு அரங்கில் தனிமைப் படுத்தப் பட்டு விடுவார். இந்தியாவுடன் மஹிந்த வளர்க்கும் பகைமை அவரிடம் இருந்து இரசியாவைப் பிரிக்க உதவும். ஈராக்கிலும் சூடானிலும் லிபியாவிலும் சீனா எதுவும் செய்ய முடியாது போனது போல் இலங்கையிலும் நடக்கும் மஹிந்தவும் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்சவும் மேலும் பல இலங்கைப் படைத் துறையினரும் பன்னாட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தப் படுவர். 2016இற்கும் 2017இற்கும் இடையில் அவர்கள் தண்டிக்கப்படலாம். அப்போது பான் கீ மூனோ இந்தியாவின் விஜய் நம்பியாரோ ஐக்கிய நாடுகள் சபையில் இருக்க மாட்டார்கள். இந்தியாவில் நிலைமை தலை கீழாக மாறியிருக்கும். நேரு-கான் குடும்பம் இத்தாலியில் குடியேறி இருக்கும். திருப்பதிக் கோவிலில் பரிகாரம் தேட முடியாமல் இருக்கும்.






# Sri Lanka: A Regime Floundering Like A Headless Chicken



By Dr. Kumar David

It is quite usual to employ the name of a country when referring to its government; for example, "China criticised India at such and such a forum." However sometimes, as in this piece, it is important to avoid this usage to forestall confusion. Hence I will use 'government' or more precisely 'regime' in my analysis today. The resolution adopted at the UNHCR in Geneva on 22 March does not condemn the nation or people of Sri Lanka; no, it is clearly targeted at the Sri Lankan regime; the wording, the last paragraph which implies distrust, and the hammering that the government got in the conference hall and in the lobbies make that plain.

The regime finds itself in a very tight corner after the Geneva resolution was carried by an absolute majority. It lost India, the US, Western Europe and the majority of African and Latin American votes; the Middle Eastern Muslim votes are fair-weather friends. The Lankan regime is suddenly very isolated, adrift from the international community. Whichever way it turns, and there are three to choose from, it encounters a yawning abyss; there is a fourth 'make the best of it' option that it is unlikely to favour and I will come to that at the end.

## Option 1 or option 2?

The two more obvious ways to go are either, comply with the resolution and work to mend fences with the international community, or defy it and march in step with the Sinhala extremists in and outside government. Of course even under option 1 the government can and will say 'No we are not bowing down to the dirty imperialist dogs', but it can execute a large number of LLRC's recommendations, hold provincial elections in the Northern Province, have a go at implementing the 13-th Amendment, and get serious about accountability and start prosecutions. To go before the UNHRC in six months, having defied the Human Rights Commissioner and with an F on its report card, will be to court dire consequences. The UNHRC is likely to report the intransigence to other UN bodies with more teeth. Thus option 1 seeks to avoid this outcome.But this entails defying the military and chauvinist ministers (Weerawansa and Champika), the likelihood of the JHU quitting government, and enraging the extremists. Sinhala chauvinism was nurtured by this regime which pandered to it for long; it has become strong. Mahinda Rajapakse, if he has the guts can still force the chauvinists out of government and lean on others to form a national government, but he does not have the backbone (Manmohan Singh is not the only invertebrate leader in South Asia!). Having been a mild racist all his life and a fellow traveller of chauvinists in his ruling alliance, President Rajapakse will see option 1 as enormously risky. The second option is what the government seems to be doing now, though how far down this perilous road it can travel is moot. Foreign Minister GL Peries has been instructed to declare that the government of Sri Lanka rejects the UNHRC resolution and defies its injunctions. To supplement this, the regime is allowing extremists to scream and rant on the streets of Colombo, surround embassies and heighten xenophobic tensions. Indian readers know from the experiences of Gujarat, Babri Masjid and many others how dangerous it is to let the sorcerer's apprentices run lose. Havoc can turn into communal pogroms and the regime will be unable to reign in the pandemonium. I grant this is a worst case scenario, but even short of that, President Rajapakse and his regime will thereafter become prisoners of the chauvinist camp. If this is the chosen path, it is not possible to foresee just what the precise state of affairs will be in a few months, but one can say with some certainty that this abyss is deeper, darker and more frightening than the previous one.

## Sri Lanka versus India

Pakistan's Nation newspaper carried a report on 27 March to the effect (could be wishful thinking) that the Lankan government had decided to confront India and expose its crimes and human rights violations in Kashmir. Well, I am not averse to exposing Sri Lankan or Indian human rights violations, but that's not the matter at issue. The pitch is that Colombo should set off on confrontation course against Delhi. Frankly I am inclined to say 'serves the South Block and Prime Minister Singh right for mollycoddling and swallowing lies and insults for so long', but that too is another matter. The point is what will happen to Sri Lanka if its regime sets off on an out-and-out confrontation course with India?

This will be attractive to the anti-Indian forces in the Sinhalese community including the JVP, and make no mistake about it, once let lose this rabble can rouse much rancour. It is one way to divert attention into another channel and the regime is surely considering it. The consequences for the country will be dire, economically, and India could start meddling and destabilising Lanka's politics once again. I doubt if Delhi will again try the old failed route of the last three years and send plane loads of diplomatic supplicants bearing gifts of gold and myrrh and frankincense!

CWC leader Thondaman's resignation from Cabinet at this moment is intriguing; maybe it's pique in a low level tiff with the president over the appointment of an official, or it may be political. If Thondaman reverses his decision soon it would point to the former, or if the latter it would signal that the president has promised to tone down anti-Indian rhetoric. Anti-Indian rhetoric, if it runs out of control, can turn to violence against plantation worker Tamils and Tamils of upcountry origin in cities.What about the China card? There is not the slightest doubt that irrespective of all else the regime will do its best to woo additional Chinese support and thumb its nose at India. The Chinese will provide more economic assistance, but they are too astute to get involved strategically beyond what is in their own interests. Knowing Sri Lanka falls in a sensitive zone of Indian strategic concern I doubt if China will let itself be drawn into a situation where it will have to back-off in humiliation. The world has learnt the lessons of the 1962 Cuban missile crisis well. What I am not so sure of is whether Delhi has spelt out the strategic bottom line clearly to Colombo. Knowing the woolly headedness of the current Indian Administration, probably not.

My fear is that if a mad regime in Colombo sets off on a 'Confront India' path it could drive public opinion in greater India into a Tamil Nadu syndrome. If irritation with this country becomes widespread in India it will not be at all good for this small island. No rational and intelligent regime in Colombo should provoke that, but is the current regime rational or intelligent? I ask in all seriousness; was it not foreseeable from January what the consequences of a knock-out blow in Geneva would be? Was it not obvious from early March that the regime was heading for a big setback? Why on earth not deal with the Americans (and the Indians) and work on a compromise resolution that Colombo could live with and sell to the extremists at home? A leadership that gets itself into such a clearly foreseeable snarl can't be very smart; the much touted cunning of the sibling cabal seems to have deserted it.

I have kept watch on the Indian media, this website included, and am astonished by the naiveté of commentators over there, oblivious to the seriousness of the crisis on this side of the Palk Straits. It is quaint that Indian writers are drooling over rationalisations that the resolution is really not so bad, it is warm and friendly, it does not intend to target the government of Sri Lanka, and so on. Honestly, when were these analysts and professors born-yesterday? Why bother to move a controversial and stern resolution at an important international forum if it is all milk and honey?

## The least worst option

It is no part of my brief to provide advice to the regime in Colombo, and if it is in hot water my inclination is to say: "You asked for it". That however is not the way to finish an article. One has to conclude with an, if I were in their shoes what's the best thing to do, statement. Here goes: In order to keep a lid on Sinhala extremists the regime has to broadcast the 'We will defy the UNHRC" message while actually implementing as many of the LLRC proposals as possible. It has to hold provincial elections in the north and let the TNA from a provincial government, and it has to implement a goody part of the Thirteenth Amendment. This way it can get a C-grade on its report card. What the regime cannot do is honour the accountability demands included in the Geneva resolution. Now this is where, if I was President Rajapakse (heaven forbid!), I would cut a deal. Look the Americans are adults; they know the Rajapakses can't prosecute themselves and their top military brass for war crimes. So the deal is this: "Hush, hush on the accountability part, we'll do a goodly bit of the house keeping part". I think this deal will sell. Still both sides will have a price to pay. The regime will still have a fight on its hands against recalcitrant Sinhala extremists, and the Americans will have their hands full pacifying human rights crusaders and vengeance seeking Tamils in the diaspora. Still, for the Rajapakse regime, this deal is now the best of all possible worlds.

*(Edited for lack of space)*

*Courtesy: South Asian Analysis Group*

AN INTRODUCTION TO GLOBAL "CURRENCY TRADING"

Currency Trading - gives you the Financial Freedom – a job for life.
Make "TAX FREE" money from the comfort of your own home.

**Interested?** Then book by email or telephone to attend our FREE introduction...

**Thursday 08:00**. Places are limited.

Venue:
Knights of Harrow
Seminar Room
164 Pinner Road,
Harrow, HA1 4JJ.

Contact details are below:
Email – admin@knightsofharrow.com. Tel: 0208 424 2002
Tel: Nthiran 0781 221 1663 s2pnet@yahoo.co.uk
Para 0795 850 7010



# Distressingly for Rajapaksa administration 'Accountability' will be the elephant in the room



By Gibson Bateman

Sri Lanka's Minister of External Affairs, G.L. Peiris, has recently given one additional reason for the passage of a resolution on Sri Lanka at the UN's Human Rights Council (HRC) in Geneva: "collective commitments."

Evidently, Mr. Peiris had been informed by one of his European counterparts that certain members of the European Union (EU) were unsupportive of the resolution, but were compelled to vote in favour of it, since a group decision had been taken by the EU.

Mr. Peiris went on to say that even some US Congressman did not view the HRC in a positive light, due to the fact that the body is "politicized." (It is unclear to this writer how a United Nations forum where nation states meet to discuss human rights could be apolitical, but I will not belabor that point).

In addition, Mr. Peiris also announced in Parliament that the government would not tolerate foreign intervention of any kind.

If this is post-Geneva government policy, what does all of this mean?

The Sri Lankan government mismanaged its time and resources in Geneva. Besides, it was never really clear who was leading the delegation anyway. Was it G.L Peiris or was it Plantation Minister and Special Human Rights Envoy Mahinda Samarasinghe?

It will be interesting to see how Rajapaksa's administration handles questions related to the resolution, national reconciliation and international diplomacy moving forward. Having just been embarrassed in Geneva, now would be an appropriate time to show more political maturity and to craft a practicable strategy that the government can act upon over the next twelve months.

### What Next?

The recent remarks made by G.L. Peiris miss the point: irrespective of "collective commitments," the flaws of the HRC and the seemingly contradictory stance of some Western nations on this matter, the resolution on Sri Lanka has been passed. The Rajapaksa administration should spend more time talking about how it is going to comply with the resolution and less time making excuses for its feckless diplomacy and failed policies, both domestic and foreign. Instead, President Rajapaksa is busy talking about how his country has been "victimized" as a result of biased media coverage.

The president forgot to mention that, when it comes to media, Sri Lanka is one of the least free places in the world. And, particularly when it comes to print media, there are virtually no strident critics of government policy.

Unfortunately, these are all early indications that Rajapaksa's insecure government is still unable to face reality. The merits of the resolution on Sri Lanka can be debated endlessly, but the fact that 40 nations signed on as co-sponsors is telling. It appears that Sri Lanka's shoddy human rights record will continue to garner attention, at least until March 2013. At that time, the HRC will reconvene for its 22nd session and the UN's Office of the High Commissioner for Human Rights (OHCHR) will present a report as to how it has worked with the Sri Lankan government to implement the LLRC recommendations.

Now, according to the resolution, OHCHR can only "assist" the government with the regime's consent. But, just a few days after the passage of this resolution, the government is still talking about Western conspiracies, lamenting the faults of the HRC and making it clear that it wants and needs no foreign assistance.

It is unfortunate that the appetite for a stronger resolution in Geneva did not materialize this time around. However, what will happen if the government continues to prevaricate when it comes to implementing the LLRC recommendations and responds tepidly to offers of international support?

### The Endgame

If the Rajapaksa administration does not take this resolution seriously, it is obviously making the following political calculation: Nothing will happen (except inertia and empty rhetoric) at the 22nd session of the HRC.

Relatedly, political grandstanding and intransigence on this issue, while concurrently extolling the virtues of Sinhala nationalism, will continue to resonate with the masses in Sri Lanka; so the Rajapaksa administration will keep those exhortations alive.

If the government is right about the HRC, President Rajapaksa will have played his hand brilliantly and would further consolidate his power. Yet, if he is wrong, Sri Lanka will again be embarrassed at a United Nations multilateral forum and may face consequences (like another (tougher) resolution or perhaps economic sanctions) at that time.

And, most distressingly for the Rajapaksa administration, that dreaded "A" word, accountability, will be the elephant in the room. The continued deterioration of the rule of law, the lack of respect for minority rights and, most importantly, the government's refusal to act upon the recommendations outlined in its own presidentially-appointed commission are what (hopefully) give the words "independent investigation" meaning nearly three years after the end of the civil war

*Courtesy: Foreign Policy Journal*

sarasas

நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!

South Indian & Sri Lankan Restaurant

Dosa specialist

தரமும் சுவையும் எப்போதும்

* We cater for special occasions
* We come and make fresh dosa in your garden or your Selected venue.
* We do out door Catering for wedding & other par

Come and try our South Indian, Chetinard, North Indian, Indo Chinese & Sri Lankan Dishes.

Opening a function room

Book for a Special birthday, Wedding and all other parties




When you spend £50.00 get 10% off discount

Mob: 07939246552

Tel: 0208 561 8188

630-634 Uxbridge road
Hayes, Middlesex, UB4 0RY
www.sarasasrestaurant.com

We make 30 different Types of dosa.


# KIDS பேப்பர்

## My Trip to America


I went to America in the holiday and we went on a plane for 2 hours and half way I fell asleep.Finally we reached America,my cousin came to pick me up.Since the house was not near to the airport,so it took quite a long time to reach their house.And when we reached the house my uncle booked a booking to stay in a hotel and he said there was a swimming pool.And we stayed in the hotel for a few days.And when we went in the pool but it was too deep to swim.Cousin called me but I was scared,so I did not go in the pool.And my cousin bought me a lunch box as a present.And after that it was time to go.



*By : S.Jasicka*




*By : S.Krishni*
*(Age 7)*




This fundamental scene has many creative ideas,from just colouring to create an exquisitive background.I have dipped in some unnaturalness and that is the orange in the centre of the background.The descending blossoms give contentment also the adorable boy has a kaleidoscopic overall and he is pirouting on the log.the amiable sun is gleaming to give brightness and merrument.The boy's endearing dog is absentminded,staring at the alluring sky.

I hope you take this since I have put all my utmost into this piece of work.




*By : S.Jasicka*


### Easter Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| e | w | m | s | b | u | n | n | y | s |
| a | u | f | l | o | w | e | r | e | b |
| s | s | g | c | y | x | z | d | l | i |
| t | p | e | h | b | a | s | k | e | t |
| e | r | y | i | r | b | w | j | b | b |
| r | l | v | c | d | o | c | g | m | h |
| c | n | d | k | x | n | e | g | g | l |
| l | g | y | s | o | n | v | a | z | s |
| a | y | h | p | p | e | q | j | f | w |
| a | z | z | g | f | t | p | m | q | d |

basket bonnet bunny chicks

easter egg flower spring

## Colouring - 167



## - Winner-



Showmia

**Dear Kids...**

Do you like to draw? Send in a picture with description to ORU PAPER and you could be the lucky winner Gift from KALAI KILI...

தம்பி தங்கைகளே.....

நீங்களும் கலைக்கிளி வழங்கும் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற மேலேயுள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி எமக்கு அனுப்பி வையுங்கள்..



**By: Varnan**



**By:Venuja**



**By: Vithushika**



**By: Mazneen**



**By:Rehashan**



**By: Piriyanga**






**By: Vigaashan**

# ஜெனிவா தீர்மானத்தினை ஆரம்பப்புள்ளி எனக் கூறுவது மிக ஆபத்தானது..



**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீரமானம் மற்றும் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீரகேசரி வாரமலருக்கு வழங்கிய செவ்வியின் சுருக்கத்தினை அதன் முக்கியத்தவம் கருதி இங்கு பிரசுரிக்கிறோம்.

*நிறைவேறியுள்ள ஜெனிவா தீர்மானத்தில் தமிழ் மக்களின் நிலை*

சிறிலங்கா அரசாங்கம் தானாகவே உருவாக்கிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோருகின்ற ஒரு விடயமாகவே ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அமைந்துள்ளது. இதில் இறுதி யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறும் வகையில் உள்ளக விசாரணை ஒன்றினை இலங்கை அரசே நடாத்த வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. மேலும், இந்த விடயங்கள் தொடர்பாக ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான செயலகம் ஆலோசனைகளையும், தொழினுட்ப உதவிகளையும் இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து அரசாங்கத்துடன் இணைந்து வழங்குமெனவும் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது எத்தகைய ஆலோசனைகளாயினும், தொழினுட்ப உதவிகளாயினும் இலங்கை அரசாங்கத்தின் சம்மதத்துடனேயே வழங்க முடியும்.

**குற்றம் சாட்டப்பட்டுள்ள ஓர் தரப்பை, அந்தக் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்து தீர்ப்பு வழங்குமாறே ஜெனிவா தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.**

சர்வதேச அளவில் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் அதிகரித்துச் சென்ற நிலையில் அந்த நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்கும் நெருக்கடிகளைத் திசை திருப்புவதற்குமே இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவினை அமைத்தது. இந்த ஆணைக்குழுவுக்கு முன் தோன்றி தங்களுடைய கருத்துக்களை முன்வைக்குமாறு சர்வதேச மனிதாபிமான அமைப்புக்கள் பலவற்றிடம் சிறீலங்கா அரசு கோரிக்கை விடுத்திருந்தபோதும், அந்த அமைப்புக்கள் இவ் நல்லிணக்க ஆணைக்குழுவின் நோக்கம் மற்றும் விசாரிக்கக் கோரியிருக்கின்ற முறைமை போன்றன எல்லாம் தவறு என்றும், இவ் ஆணைக்குழுவுடன் தாம் சம்பந்தப்பட விரும்பவில்லை எனவும் கூறி நிராகரித்தார்கள். இப்படிப்பட்ட ஓர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே இன்று நடைமுறைப்படுத்த கோரப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில் பார்க்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஓர் தரப்பை, அந்தக் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்து தீர்ப்பு வழங்குமாறே ஜெனிவா தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது. இவ்வாறான விடயங்களை நோக்குகையில் பாதிக்கப்பட்ட தரப்பு என்ற வகையிலே தமிழ்த் தேசத்திற்கு எந்த விதமான நன்மையும் இவ் ஜெனிவா தீர்மானத்தின் வாயிலாக கிடைக்கப்போவதில்லை. இதுவே உண்மையாக இருக்கையில் இப்படிப்பட்ட ஓர் தீர்மானத்தை, தமிழ் மக்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் ஆரம்பப் புள்ளி எனக் கூறுவது எம்மைப் பொறுத்தவரையிலே மிகவும் ஆபத்தான ஒரு விடயமாகும். இந்தத் தீர்மானத்தினை வைத்துக்கொண்டு முன்நகரமுடியாது என்பதே எமது அபிப்பிராயம்.

*அறிக்கையில் சில முன்னேற்றகரமான பரிந்துரைகளும் காணப்படுகின்றனவா?*

இதனை ஓர் போலியான நம்பிக்கையூட்டும் கருத்துக்களாகவே நாம் பார்க்கின்றோம். எமது அடிப்படைப் பிரச்சினை இனப்பிரச்சினையாகும். அதாவது தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது செய்யவேண்டுமென்ற நோக்கில் சிங்கள தேசம் செயற்படுகின்ற காரணத்தினாலேயே, எமது மக்கள் இந்த அடக்குமுறைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நடைபெறும் மனித உரிமை மீறல்கள், இராணுவ மயமாக்கல், சிங்கள பௌத்த மயமாக்கல், பொருளாதாரத்தினை சிங்கள மயமாக்கல், நில ஆக்கிரமிப்பு, காலச்சார அழிப்பு, நீதிக்குப் புறம்பான கொலைகள், போன்ற அனைத்தும், தமிழர்கள் ஒரு தேசமாக இருப்பதை இல்லாமல் செய்கின்ற வேலைத்திட்டங்களின் அங்கங்களே.

இராணுவம் வெளியேற்றப்படல் வேண்டும் என்று எந்தத் தீர்மானத்திலும் கூறப்படவில்லை. மாறாக இராணுவம் குறைக்கப்படல் வேண்டுமென்றே (Demilitaraization) கூறப்பட்டுள்ளது. இதனை வைத்துக்கொண்டு இராணுவ முகாம்கள் அகற்றப்படுமென்றோ, இராணுவம் முற்றாக வெளியேறும் என்றோ நாம் கருத முடியாது. அதாவது சமாதான காலப்பகுதியில் தற்காலிகமாக முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருந்தது போன்று, இன்றுள்ள சர்வதேச நெருக்கடி நிலையில் இருந்து மீளும்வரை இராணுவம் தற்காலிகமாக முகாம்களுக்குள் முடக்கப்படுவதாக மட்டுமே அமையும்.

அதேபோன்று நல்லிணக்க ஆணைக்குழு அரசியல் தீர்வு வழங்கப்படல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் ஏற்கனவே உள்ள 13 ஆம் திருத்தச் சட்டம் தான் தீர்வெனக் கூறியுள்ளது. ஆகவே வட மாகாண சபைக்குரிய தேர்தலை நடாத்தி மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுவழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் வெளிஉலகிற்குக் காட்டிக் கொள்ளும்.

ஆகவே இங்கு எமக்குச் சார்பான பரிந்துரைகள் எனக் கூறுகின்ற விடயங்கள் உண்மையிலேயே முன்னேற்றத்தினைக் கொடுக்கப் போகின்ற விடயங்களல்ல. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் முன்னேற்றம் அளிக்கக் கூடியதெனக் கூறப்படுகின்ற விடயங்கள் தமிழ்த் தரப்புக்களை ஏமாற்றுகின்ற விடயங்களாகவே இருக்கின்றன. ஆகவே இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோருவதன் ஊடாக எமது அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்படப் போவதில்லை.

*சர்வதேச நாடுகளால் இலங்கைக்கு எதாவது சமிக்ஞைகளைக் கொடுத்திருக்கப்பட்டுள்ளதா?*

ஐ.நா. வில் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானம் ஊடாக உண்மையில் எந்தவிதமான அழுத்தமும் இலங்கைக்கு பிரயோகிக்கப்படவில்லை. மாறாக வெறுமனே ஓர் செய்தி மட்டுமே இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது தமது நலன்களைப் புறக்கணித்து இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால், இலங்கை மீது உண்மையான அழுத்தங்களை ஏற்படுத்தும் வகையில் சர்வதேச மட்டத்தில் செயற்படுவதற்கு தாம் தயங்கப் போதில்லை என்பதே அச் செய்தியாகும். அதே சமயம் இலங்கை அரசாங்கம் இது தமது இருப்புக்கு அழுத்தம் எனவும் இது ஓர் சர்வதேச சதி எனவும் கூறுவது வேறு நோக்கங்களைக் கொண்டது. அதாவது அன்றாட வாழ்க்கையில் மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதாரச் சுமைகளினால் மக்களிடத்தில் அதிகரித்துவரும் எதிர்ப்புணர்வினை திசை திருப்புவதற்கானதாகும்.

*ஜெனீவா மாநாட்டை தமிழ்த் தரப்பு எவ்வாறு பயன்படுத்தியிருக்க முடியும்?*

ஐ.நாவில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டவுள்ளதாக செய்திகள் வெளியானதுமே, தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் முழு வேலைத்திட்டத்தினையும் முன்னெடுத்திருக்க வேண்டும். அதாவது எமது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நபர்கள் ஐ.நா.வுக்குச் சென்று எங்கள் மக்களின் எதிர்பார்ப்பு என்னவென்பதனை ஆணித்தரமாகக் கூறியிருந்தால் தீர்மானத்தினைக் கொண்டு வரும் அமெரிக்கா போன்ற தரப்புக்கள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டிருக்கக்கூடிய கோரிக்கையினை முற்று முழுதாகவே நிராகரித்து, வேறொரு தீர்மானத்தினை கொண்டுவருவதனை நியாயப்படுத்துவது கடினமானதாக இருந்திருக்கும். ஏனெனில் குறித்த தீர்மானம் தமிழர்களின் பெயரிலேயே கொண்டுவரப்பட்டது.

மிகவும் துரதிஸ்டவசமாக சர்வதேச மட்டத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் தமிழத் தரப்பினரே அந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தாது விரும்பி நழுவ விட்டோம். அது மட்டுமல்ல வேறு வேறு தரப்புக்களின் நிகழ்ச்சி நிரல்களை எங்களுடைய மக்களிடம் விற்பனை செய்கின்ற செயற்பாடே தமிழ் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

முக்கியமானதொரு வரலாற்றுச் சந்தாப்பத்தினை தவறவிட்டிருந்தாலும், எதிர்காலத்தில் இலங்கைத் தீவினை மையப்படுத்தியவாறு இடம்பெறும், பூகோள நலன்சார் போட்டிகளுடாக எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களையாவது நாம் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பிறிதொரு தரப்பு விண்ணப்பிக்க முடியாத வகையில் 25 ஆம் திகதியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் ஜெனிவா செல்வதில்லை என்பதனை அறிவித்திருந்தது.**

*சர்வதேச சட்டம் மற்றும் நகர்வுகள். தெரிந்தவர் என்ற வகையில் நீங்கள் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள்?*

இதில் இரண்டு விடயங்களை கூறிக்கொள்ள வேண்டும். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்வதில்லையென அறிவித்த நிலையில் நாங்கள் புலம்பெயர்ந்த மக்களுடன் தொடர்புகொண்டு ஜெனிவா செல்வதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தோம். இவ்வாறாக நாம் ஜெனிவா சென்று அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினூடாக நாம் பேசுவதென்றால், பெப்ரவரி 24 ஆம் திகதிக்கு முன்பதாக நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்காக விண்ணப்பித்திருக்க வேண்டும். ஆனால் பிறிதொரு தரப்பு விண்ணப்பிக்க முடியாத வகையில் 25 ஆம் திகதியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் ஜெனிவா செல்வதில்லை என்பதனை அறிவித்திருந்தது. இதன் பின்னர் எம்மால் நடவடிக்கைகளைத் தொடர முடியாது காலம் கடந்து விட்டது. இதனால் நாமும் அந்த சந்தர்ப்பத்தினை இழக்க நேரிட்டது.

மேலும், சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்திருந்தாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தரப்பு ஜெனிவா செல்வதில்லையென முடிவெடுத்து அதனை அறிவித்திருந்த நிலையில், மக்களால் தெரிவு செய்யப்படாத தரப்பாகிய நாம் அங்கு சென்று எவ்வளவு தூரத்திற்குத் தாக்கத்தினை ஏற்படுத்த முடியும் என்பது கேள்விக் குறியாகும்.








Lebara
mobile
Sri Lanka
landlines & mobiles
5p
/min
Low-cost international & UK calls direct from your mobile
www.lebara.co.uk
Offer valid until 30/04/12. For all our rates and full terms and conditions, visit www.lebara.co.uk

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்..!

# Techcube Ltd

**Call us: 020 8123 7990**
**www.techcube.co.uk**

## Complete EPOS system
**Only £999 exc.**
**(limited offer)**




*Package Includes:*

**15 "Touch Screen Monitor | Receipt Printer | Cash Drawer |Customer Display | Single line Scanner | Modular base CPU |Till Software and stock control**



## Consumable Products

Thermal Till Rolls | Price Guns | Self edge labelling Products
Free delivery (5 or more Boxes)



Epos Systems | CCTV Installation & Maintenance | consumable products | Security alarms

**988 Eastern Avenue, Newbury park, Essex IG2 7JD.**

காவல் துறையினரைத் தொடர்பு கொள்ள

# 101

# அழைக்கவும்

**101 –** லண்டனில் இருக்கும் உள்ளூர் காவல்துறையினரைத் தொடர்பு கொள்வதற்குரிய புதிய இலக்கம்.

ஒரு குற்றத்தை அறிவிப்பதற்கோ அறிவுரை பெறுவதற்கோ அல்லது உள்ளூர் பாதுகாப்புப் பற்றிய பிரச்சனைகளைத் தெரியப்படுத்துவதற்கோ 101 இனை அழைக்கவும். அவசரகாலத்தில் எப்போதும் 999 இனை அழைக்கவும்.

உங்களுக்கு ஆங்கிலம் பேச இயலாமல் அல்லது பேசுவது சிரமமாக இருந்தால் நீங்கள் எங்களை அழைக்கும்போது நாங்கள் உங்களுடன் உங்கள் சொந்த மொழியில் பேச முடியும்.

மேலும் விவரங்களுக்கு **www.met.police.uk/101** என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

வீட்டுத்தொலைபேசி அல்லது கைத்தொலைபேசியில் இருந்து 101 இலக்கத்தைத் தொடர்புகொள்ளும்போது எந்த நேரமாக இருந்தாலும் எவ்வளவு நேரம் பேசினாலும் அழைப்பு ஒன்றிற்கு 15 பென்ஸ் செலவாகும்.

METROPOLITAN POLICE

TOTAL POLICING

NEW SCOTLAND YARD

# ஜெனீவாத் தீர்மானம்:

## ஆனந்தக் கூத்தாடுவோரும் ஒப்பாரி வைப்போரும்

*மௌலி*

*(ஒரு பேப்பருக்காக)*

ஜெனீவாத் தீர்மானம் தமிழர்களின் உரிமைப் போராட்டப் பாதையை சர்வதேச அந்தஸ்த்துக்கு உயர்த்தியுள்ளது என ஒருசாரரும், அதில் எதுவுமே இல்லை மேற்குலக சதிக்குள் வீழ்ந்துவிடக் கூடாது என இன்னொருசாராரும் எதிரும்புதிருமான கருத்துகள் கடந்த சில நாட்களாக செய்திகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.

சிறிலங்கா அரசால் முன்வைக்கப்பட்ட LLRC எனப் படும் நல்லிணக்க ஆணைக்குழு முன் வைத்த பரிந்துரை களையும் அது கையாளத் தவறிய பொறுப்புக் கூறல் விட யங்களையும் அமுல்படுத்த சிறீலங்காவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் நடைபெற உள்ள ஐ.நா மனித உரிமைப்பேரவைக் கூட்டத் தில் இந்த அமுலாக்கல் எவ்வளவு தூரம் நடைபெற்றுள்ளது என்பது தொடர்பான மீளாய்வு நடைபெற உள்ளது.

இந்த சந்திப்புப் புள்ளி நோக்கி நான் மேலே குறிப்பிட்ட "ஆனந்தக் கூத்தாடிகளும்" "ஐயோ மேற்குலக சதி ஒப்பாரி" என்போரும் கவனம் செலுத்த வேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் சிறீலங்கா உறுப்பு உரிமை நாடல்ல என்வே நேரடியாக அங்கு சிறிலங்கா மீது அல்லது சிறீலங்கா பிரசை மீது வழக்கு தாக்கல் செய்ய முடியாது. என்வே ஐ.நா வின் ஏதாவது ஒரு அங்கம் ஊடாகவே அது நடைபெற முடியும்.

விடயங்களை சரியாக புரிந்து கொள்ள சர்வதேச விசார ணைக்கான நியமம் என்பது எமக்குத் தெரிந்தாக வேண்டும். எமக்கு எது விருப்பம் என்ற அடிப்படையில் நாம் எகிறிக் குதிக்கக் கூடாது. சர்வதேசத்தின் அனுசர ணையை நாடிநிற்கும் நாம், சர்வதேச நியமங்களின் புரித லின் அடிப்படையிலேயே எமது அரசியல் முன்னெடுப் புக்களை வழி நடாத்தமுடியும். அந்த வகையில்எமது அடுத்த நகர்வுக்கு சர்வதேச குற்ற வியல் நீதிமன்ற இணை யத்தில் உள்ள பின்வரும் பகுதி முக்கியமானது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்(ICC) தேசிய நீதி மன்றங்களை பிரதியீடு செய்யுமா? என்ற கேள்விக்கான பதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இல்லை, ICC தேசிய நீதிமன்றங்களை பிரதியீடு செய் யாது. அது தேசிய நீதிமன்றங்களுக்கு உறுதுணையா கவே செயற்படும். தொடர்புடைய தேசிய அரசு விசார ணைகளை நடாத்தவில்லை அல்லது தொடர்புடைய அரசு விசாரணைகளை நடத்த முடியாததாக உள்ளது அல்லது விசாரணைகளை நடாத்த மனப்பூர்வமாக விரும்பவில்லை என்பது நிரூபிக்கப்படும்பொழுது மட்டுமே ICC விசா ரணைகளை ஆரம்பிக்கும். இதனை "Complementarity" கொள்கை என்பார்கள். இதன் அடிப்படையில் தேசிய நீதி மன்றங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தேசிய அரசுக்கு தான் குற்றவாளிகளை விசாரிக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த இடத்தில் தான் நாம் இப்பொழுது நிற்கின்றோம் . இதில் இருந்து நாம் சர்வதேச விசாரணை கட்டத்தை அடைந்து இனப்படுகொலை நடைபெறுகின்றது என் பதை நிரூபிப்பதை நோக்கி நகரவேண்டும். அது தான் தமிழீழம் என்ற தேசம் உருவாக வழி சமைக்கும். இந்த பணி ஜெனீவா தீர்மானம் தொடர்ப்பாக ஆனந்தக் கூத்தாடிகளும் ''ஐயோ மேற்குலக சதி ஒப்பாரி' என்ற இரு கோஷ்டிகளும் செயலாற்ற வேண்டிய இடமாகும். இருவ ருமே இந்த புள்ளியில் தான் சந்திக்கின்றார்கள்.

அதற்காக என்ன செய்யவேண்டும்?

- இனப்படுகொலை தொடர்கின்றது என்பதை ஆவ ணப்படுத்த வேண்டும் .
- நியாயமான விசாரணை நடத்தப்படவில்லை என் பதை நிரூபிக்க மேலும் ஆதாரங்களைத் திரட்ட வேண்டும்.
- எல்லாவற்றுக்கும் மேலாக சுயாதீன சர்வதேச விசா ரணைக்கு ஆதரவாக வாக்களிக்க கூடியவாறு நாடு களை தீர்மானம் இயற்ற வைக்கவேண்டும்.

முதல் இரண்டும் அமைப்புக்களின் முக்கியமான பணி என்றால் சாதாரண மக்களின் பணி சுயாதீன விசார ணைக்கு ஆதரவாக அரசுகளைத் தீர்மானம் இயற்ற வைக்க ஜனநாயக வழிகளைக் நாடவேண்டும். அமைப்புக் கள் மக்களுக்கு இந்த விழிப்புணர்வை ஊட்டவேண்டும். ஊடகங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் .

பிரித்தானியாவில் சுயாதீன சர்வதேச விசாரணை கோரும் மனுவுக்கு வெறும் 7000 மக்கள் மட்டுமே ஒப்பமிட் டுள்ள நிலையில் எமது வாய் வீரங்கள் அதிகமாக உள் ளனவே அன்றி அமைப்புக்களோ மக்களோ மனப் பூர்வ மாக செயற்படவில்லை என்றே தோன்றுகின்றது.

பிரித்தானியாவில் சமர்பிக்கப்பட்ட மனுவில் பொது மக்கள் ஒப்பமிடுவது , வேற்றின மக்களையும் அதற்காக ஒப்பமிட வைப்பது பிரித்தானியாவில் உள்ள சர்வதேச விசாரணையை விரும்பும் எல்லா சக்திகளினதும் முக்கிய மான பணியாகும். இது பேச்சளவில் இருக்கின்றதே அன்றி செயலில் பூரணம் அடையவில்லை.

மே 18 நினைவு தினத்துக்கு கூட்டம் நடத்துவோரும், இலண்டன் நகர தேர்தலுக்கு கூட்டம் நடத்துவோரும் அதே ஆர்வத்துடன் சர்வதேச விசாரணை மனுவுக்கு செயற்படவில்லை. உண்மையில் அதிக கவனம் செலுத்த வேண்டிய விடயம் இதுதான்.

தமிழர்கள் எத்தனை மாவீரர் தினம் நடாத்தினார்கள், எத் தனை விளையாட்டுப் போட்டி நடாத்தினார்கள், எத்தனை நினைவு தினம் நடாத்தினார்கள் என்பதை உலகம் பார்க்கப் போவதில்லை. அதனை செய்யத்தான் வேண் டும் ஆனால் அது எமது பிரச்சனைகளுக்கு தீர்வு நோக்கி நகர மன உறுதியை தரவேண்டும். அந்த உறுதியுடன் நாம் செயலாற்றவேண்டும்.

அதை விடுத்து,

'நடிப்பு சுதேசிகள்' என்ற தலைப்பில் பாரதியார் பாடிய

*'நெஞ்சில் உரமும் இன்றி....*

*கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்ற லன்றி,......*

*அச்சமும் பேடி மையும் அடிமைச் சிறு மதியும்.....*

*மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென் றெண்ணும்..'*

இவ்வரிகள் எமக்கும் பொருந்துமோ என்றென்னும் நிலை தான் சுயாதீன சர்வதேச விசாரணை மனுவுக்கு பிரித் தானியா வாழ்மக்கள் வழங்கும் ஆதரவையும் , அமைப்புக் கள் எடுக்கும் முயற்சிகளையும் பார்க்கும் பொழுது ஏற் படுகின்றது.

பிரித்தானிய மனுவில் கையெழுத்து இட.....
http://epetitions.direct.gov.uk/petitions/14586

# பரதேசியின்....

## பதில்கள்....!

கேள்வி : ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் பற்றி என்ன கூற விரும்புகின்றீர் பரதேசியாரே?

*ஸ்ரீகுமார், ரூட்டிங்*

பரதேசி : இது என்ன நீதிமன்றமா என்ன கூற விரும்புகின்றீர் என்று கேட்க. காலம் கூட எங்கள் காயத்தை மாற்றாது. இத்தீர்மானமா மாற்றப்போகிறது. அந்தக்காயத்தை ஒன்றுதான் மாற்ற அல்ல மறக்க வைக்கும். அது தமிழீழம்.

கேள்வி : வரவர ஒரு பேப்பர் சிறுபேப்பர் ஆகின்றதே. பரதேசியார் இதனைக் கவனித்ததில்லையா?

*எஸ்.கே.நாதன், என்பீல்ட்*

பரதேசி : கவனித்தேன் நாதா. பரதேசியார் இப்பொழுதுதானே களத்தில் கால் வைத்திருக்கிறார். பொறுத்திருந்து பாருங்கள்.

கேள்வி : கோவிலுக்கு போனதும் மெய்மறந்து போயிடுறோம் என்கிறார் களே அதன் அர்த்தம் என்ன?

*எல்ராட்*

பரதேசி : கோயிலுக்கு போனதும் கும்புடுறமாதிரியே பிகருகளை சைட் அடிக்கிறது பத்து நாள் பட்டினி கிடந்தவன் மாதிரியே அன்னதானத்தை தேடி அலையிறது சாப்பிட்டது போதாது எண்டு வீட்டுக்கும் கட்டிக்கொண்டு போறது. கோயிலை விட்டு வெளியாலை வந்ததும் விபூதி பொட்டை அழிக்கிறது இப்படி எல்லாமே பொய்யான வேலைகளை செய்வதால்தான் கோயிலுக்கு போனதும் மெய் மறந்து போய் விடுகின்றது

கேள்வி : மயிர்கூச்செறியும் கதை எண்டு சொல்கிறார்களே அப்படியென்றால் என்ன ??

*நமசிவாயம்*

பரதேசி : யாராவது மொட்டைத்தலை உள்ளவர்வர்களிடம் சொல்லிப் பாருங் கள் அப்பொழுது தெரியும்...

கேள்வி : எனக்கு ஒரு சின்ன வீடு உள்ளது அதனை மனைவி கண்டு பிடித்து விட்டாள் அதனை எப்படி சமாளிப்பது.

*எஸ்.சிறீஸ்கந்தராஜன்*

பரதேசி : வெரி சிம்பிள் உங்கள் மனைவியிடம் உங்களிற்கு மட்டும் பிறந்த வீடு புகுந்த வீடு எண்டு இரண்டு வீடு இருக்கும்போது எங்களிற்கு மட்டும் பெரிய வீடு சின்னவீடு எண்டு இரண்டு வீடு இருக்கக்கூடாதா ?? எண்டு கேளுங் கள். ஆனால் வீடே இல்லாமல் வீதியில் நிண்டால் நான் பொறுப்பு அல்ல.

கேள்வி : இலங்கையில் அமெரிக்கத் தலையீடு எதுவரை போகும்?

*நர்த்தனன்*

பரதேசி : வடக்குக் கிழக்கில் MacDonaldகளும் KFCகளும் திறக்கும் வரை.

கேள்வி :மனிதன் இதுவரை கண்டு பிடிச்சதில பெஸ்ட் எது வேர்ஸ்ட் எது ?

பரதேசி : ஏனைய்யா உங்களுக்கு வேற கேள்வியளே கேட்கத் தெரியாதா இல்லாட்டி என்னாப் பாத்தா அப்படிக் கேள்வி கேட்கத் தோணுதா .... நல்லாக் கேக்கிறீங்க கேள்வி...

*அருமைராஜா*

கேள்வி :மன்மோகன் சிங்கை வைத்து ஒரு சினிமாப்படம் எடுக்கவிருக்கிறேன் கதை வசனம் எழுதித் தருகிறீர்களா பரதேசியாரே ?

பரதேசி : மன்மோகன் சிங்கை வைத்தா..... என்னை விட ம(ப)னிரத் தினம்தான் சூப்பர்...( அவருக்கும் கஸ்ரமாகத் தான் இருக்கும் )

Maths Tution (Home Visit)

For 11+, KS2, KS3, GCSE, AS and AS2 level

Conducted By 11 year qualified & experienced Teacher



மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்

Ganesh - 07552 345 459

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!


Jey satellite

Digital Aerial and free view Installation




No call out charge
Same day service
Full uk coverage

Contact: 07932251851


Bringing
Great food
to
Life...
FALUDA
BRAND
Niru
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# சரித்திரம் திரும்புகிறது

பாகம் 108

ஐ.நா மனிதவுரிமைப் பேரவையில் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை நிறைவேற்ற வேண்டுமென்னும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுவிட்டது. இந்தியாவும் வேண்டா வெறுப்போடு அதனைச் சில திருத்தங்களுடன் ஆதரித்தும் விட்டது. **சரி! இனி நடக்கப் போவது என்ன? என்ற கேள்விதான் நம்மில்** பலரிடையே நிலவுகின்றது.

இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டிய கடப்பாட்டை உலகம் இன்று இலங்கையிடம் வலியுறுத்தி நிற்கின்ற அதேவேளை நடந்து முடிந்த அராஜகங்களுக்கான பொறுப்புக் கூறலையும் இலங்கை செய்தேயாக வேண்டுமென்னும் வேண்டுகோள் குறித்த பிரேரணையில் அடங்கியிருப்பதாற்தான் இலங்கை பிரேரணையின் எல்லா அம்சங்களையும் நடைமுறைப்படுத்த முடியாது என்று தப்பப் பார்க்கிறது. எப்படியிருந்த போதிலும் எதிர்வரும் 22 ஆவது கூட்டத் தொடரின் போது மனிதவுரிமைப் பேரவை இலங்கையுடன் ஒத்துழைத்துச் செயற்பட்டதால் கிடைத்த பெறுபேறுகளை ஓர் அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்னும் காலக்கெடு, இலங்கையை ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளதை மறுக்க முடியாது.

ஒன்றில் இலங்கை ஐநா மனிதவுரிமைப் பேரவையுடன் பிரேரணை தொடர்பாக ஒத்துழைக்க வேண்டும். அல்லது எந்த நிபந்தனைகளுக்கும் கட்டுப்படமாட்டோமென்று பேரவையிலிருந்தே விலகிவிடவேண்டும். இதில் எது நடைமுறைச் சாத்தியமானது என்பது இலங்கையரசுக்குத்தான் வெளிச்சம். ஆகக் குறைந்தது பொறுப்புக்கூறலை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயலலாமென்றாலும், அரசுடன் சேர்ந்தியங்கும் சிஹெல உறுமய, விமல் வீரவன்ச போன்ற இனவாதிகள் இலங்கையில் பௌத்த சிங்கள மேலாதிக்கத்துக்கு இடையூறுவருவதை அனுமதிக்கமாட்டார்கள். தாயகக் கோரிக்கையை முன்வைத்துப் போராடும் தமிழீழ மக்களின் அதிகுறைந்த எதிர்பார்ப்பான சமஷ்டி அரசியலமைப்பையோ அல்லது சுயாட்சிப் பிரதேசமொன்றையோ அல்லது அதிலும் குறைந்த காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கொண்ட மாகாணசபையினையோ வழங்கி இனங்களுக்கிடையே நல்லுறவைப் பேண இந்த இனவாதிகள் கடைசி வரை விடப்போவதில்லை. இந்த நிலையில் அரசுக்கு ஏற்பட்டுள்ள சங்கட நிலையை இலங்கையரசு எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பது பெரும் கேள்விக்குறியுடனேயே காணப்படுகின்றது. மொத்தத்தில் சர்வதேசம் இலங்கையைப் பெருத்த சங்கடத்தில் மாட்டிவிட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது.

இந்தச் சோதனையிலிருந்து ஓரளவுக்காவது நிவர்த்தி கிடைக்கக் கூடியவகையில் இந்தியா பிரேரணையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அதாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதிலும், பொறுப்புக் கூறல் தொடர்பான பொறிமுறைகளை அமைப்பதிலும் இலங்கையின் ஒத்துழைப்புடனும் ஏற்புடனும் ஐநா மனிதவுரிமைப் பேரவை செயலாற்ற வேண்டுமென்பதே அந்த நிவர்த்தியாகும். இதனால் இலங்கை, ஐநா மனிதவுரிமைப் பேரவையின் வற்புறுத்தல்களுக்குக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் குறைக்கப்பட்டிருந்தாலும் இணைந்து செயலாற்றியே ஆகவேண்டிய கடமைப்பாடு குறைக்கப்படவில்லை. எனினும், பலர் இந்தப் பிரேரணையையும் இந்தியா அதில் கொண்டுவந்த திருத்தத்தையும் பலவிதமாக விமர்சிக்கிறார்கள். இவற்றில் எது சரியான அணுகுமுறை என்பதைக் காலம்தான் நிச்சயிக்கவேண்டும்.

எது எவ்வாறிருந்த போதிலும் இலங்கையும் அதில் வாழும் ஈழத்தமிழர்களும் சர்வதேசத்தின் ஸ்தாபன ரீதியான அவதானிப்புக்கும் கரிசனைக்கும் முதன்முறையாக உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதுவரை உள்நாட்டு விவகாரம், அதை அவர்களே பார்த்துக் கொள்ளட்டும் என்று இருந்த ஈழத்தமிழர் பிரச்சனையை சர்வதேசம் தன் கைகளில் எடுத்திருக்கிறது. இந்தியாவும் தனது பிராந்திய நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு கடைப்பிடித்த தனது மென்மைப் போக்கிலிருந்து சற்று விலகி இலங்கைக்கு அறிவுறுத்தும் ஓர் வெளிப்புறத் தீர்மானத்தை ஆதரித்திருக்கிறது. தனது ஆதிக்கப் பிராந்தியத்தில் உள்ளவோர் நாட்டின் பிரச்சனை தொடர்பாக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்ததன் மூலம் இலங்கையின் இனப்பிரச்சனை தனது பிடியை மீறிவிட்டது என்ற உண்மையை ஒத்துக்கொண்டு அதனைச் சர்வதேசத்திடம் கையளித்திருக்கிறது. இது வரை இது எங்கள் நாடு, எங்கள் மக்கள் என்று உலகத்திடம் பாசாங்கு செய்தவாறு ஈழத்தமிழரைக் கொடுமைப்படுத்தி வந்த இலங்கையின் பேரினவாதத்திற்கு விழுந்திருக்கும் முதல் அடி இது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

அமெரிக்காவின் தலைமையில் நிகழ்ச்சி நிரலுக்குள் உட்படுத்தப்பட்டுவிட்ட இலங்கைப் பிரச்சனையை ஓர் சுமுகமான தீர்வை நோக்கி முன் நகர்த்த வேண்டிய பொறுப்பைச் சர்வதேசம் தனது கைக்குள் எடுத்திருந்தாலும், அது கிடப்பில் போடப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு ஈழத்தமிழர்களாகிய எமக்கேயுரியது. சர்வதேசத்தின் வெறுப்பைச் சம்பாதித்துவிடாமல் அதேவளை எமது தாயகக் கோட்பாட்டை முன்நிறுத்தி புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்ச்சியாக நடத்தும் அரசியல் ராஜதந்திரப் போராட்டங்களின் மூலம் மட்டுமே இன்றைய காலகட்டத்தில் எமது பிரச்சனைக்கான தீர்வை நோக்கி முன்செல்ல முடியும்.

அடக்குமுறைக்குட்பட்டுக் கிடக்கும் எமது தாயகத்து உறவுகளிடம் ஓர் ஜனநாயகரீதியான மக்களெழுச்சியை தற்போதைக்கு நாம் எதிர்பார்க்க முடியாது. காலப்போக்கில் தற்போதைய அடக்குமுறை அரசும் அதன் பேரினவாதக் கூட்டாளிகளும் தோற்கடிக்கப்பட்டு இலங்கையில் ஓர் மனிதவுரிமைகளை மதிக்கும் அரசு உருவானாலொழிய எமது நீதியான கோரிக்கைகளை ஜனநாயக வழிகளில் வெளிப்படையாக முன்வைத்துப் போராடக்கூடிய சூழ்நிலை அங்கு உருவாகப்போவதில்லை. எமது தாயக உறவுகள் அடக்குமுறையின் காரணமாக அமைதி காத்தாலும், அரசியல் ரீதியான இன நல்லிணக்கமும், தவறுகளுக்கான பொறுப்புக்கூறலும் நடைபெறாதவரை அபிவிருத்தி எந்தப் பலனையும் தரப்போவதில்லையென்ற கருத்து மனிதவுரிமைவாதிகளிடம் காணப்படுவதால், இலங்கையின் பேரினவாதம் அபிவிருத்தியைக் காரணம்காட்டி, கொடுக்கப்பட வேண்டிய தமிழரின் அரசியல் உரிமைகளை மூடிமறைத்துவிட முடியாது.

இலங்கை ஓர் சிறிய நாடு அதில் எண்பது வீதமானோர் சிங்களவர்கள், தமிழர்கள் மிகச் சிறுபான்மையினர் என்ற வாதத்தைக் காரணங் காட்டியே எமது பிரச்சனையை ஓர் உள்நாட்டுப் பிரச்சனையாக்கி உலகின்முன் மூடிமறைத்தது பேரினவாதம். நாங்கள் சிறுபான்மையினரல்ல குறித்தவோர் தாயகப் பிரதேசத்தில் தொடர்ச்சியானதும் ஒழுங்கானதுமான குடியியல் பரம்பலில் செறிந்துவாழும் தேசிய இனத்தவர்கள் என்ற வாதத்தை முன்வைத்துத் தந்தை செல்வா என்ற தூரநோக்குள்ள அரசியல் அறிஞன் தனது தள்ளாத வயதிலும் எமது பிரச்சனையை உலகின்முன் கொண்டு சென்றார். தற்போது தான் உலகம் எம்மை இலங்கையென்னும் தீவில் உள்ளவோர் அடக்கியொடுக்கப்பட்டு இனக் கொலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் சமூகமாகக் கருத்திலெடுத்திருக்கிறது. நாம் ஓர் வேறுபட்ட இனக் குழுமம் என்னும் புரிதல் சர்வதேசத்திற்கு ஏற்படுவதற்கு முன்னதாகவே ஆயுதப் போராட்ட வழிமுறைகளைக் கையிலெடுத்து அதில் தோற்றும் போய்விட்டோம். முன்னுக்குப் பின்முரணாக அதாவது வண்டிலின் முன்னே கட்டவேண்டிய மாட்டைப் பின்னே கட்டியது போல எமது செயற்பாடுகள் அமைந்து போனதால் எமது இமாலயப் பிரயத்தனம் பலத்த இழப்புகளோடு முடிவுக்கு வந்தது. உலகின் முன் பயங்கரவாதிகளென்ற பெயரைவேறு சம்பாதிக்க வேண்டியேற்பட்டுவிட்டது. அவசரக் குடுக்கைகளாகி எமது பாரம்பரியத்தின் ஊற்றுக்கண்ணான இந்தியாவின்...

(தொடர்ச்சி 28ம் பக்கம்)


# Wine Tower விற்பனைக்கு (For Sale)



எங்கள் நிறுவனத்தில் 4 பாரமான தட்டுக்களை கொண்டதுவும், 172 - 180 Bottleகளை கொள்ளளவு (capacity) கொண்டதுமான, சிறந்த வியாபார உத்திகளுக்கு (Great promotional display) உகந்ததுமான பழரச கோபுரம் (Wine tower) மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு உள்ளது. இது உங்களின் wine விற்பனை வேகத்தினை அதிகரிக்கும் முகமாக எமது நிறுவனத்தினால் (Nisha trading Limited) மிகக் குறைந்த விலையுடன், தரமானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**விலை : £199.00 மட்டுமே (We Beat All UK Prices)**

Item description:
360 degree wine tower black colour
Size: 770mm x 770mm x 550mm

CHEAP AND QUALITY PRODUCT

கிடைக்கும் இடங்கள்:

**Nisha Wine**
Unit 05,
Roseberry Avenue
Tottenham, N17 9SR

**Shakthi Cash & Carry**
Unit 04,
681, Mitcham Road,
Croydon, CR0 3YH

**Hi-Line Cash & Carry**
Unit 02,
40, Purley way
Croydon, CR0 3JP

மேலதிக தொடர்புகளுக்கு: (தொலைபேசி) - 0208 443 7058

E Mail : info@nishatrading.com

# தமிழர்கள் எருமைகள்!!-சேரன்

## எருமை ஆட்டம் மட்டுமல்ல, நாய் ஆட்டம் நரி ஆட்டமாக இருப்பினும் நாம் ஆடியே ஆகவேண்டும - ஜெயபாலன்

ஐ.நா.மனிதவுரிமைச் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மகிழ்ச்சியில் அமெரிக்க இராசங்கத் திணைக்களத் திற்கும், ஹ்லரி கிளிண்டனுக்கும் நன்றி தெரிவித்த தமிழர் களை காட்டமாகச சாடி கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார் கவிஞர் சேரன். இந்தியசார்பு இணையதளமொன்றில் பிர சுரிக்கப்பட்டிருந்த இக்கட்டுரையில் சாரத்தையும், அக் கட்டுரைக்கு கவிஞர். வ.ஐ.ச. ஜெயபாலன் யாழ் கழத் தில் எழுதிய பதிலையும் இங்கு தருகிறோம்.

ஐ.நா அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிற்பாடு ஒரு கூட்டம் தமிழர்கள் வாஷிங்டனில் வெள்ளை மாளி கைக்கு முன்னால் திரண்டு அமெரிக்காவுக்கும் ஹிலரி கிளிண்டனுக்கும் நன்றி தெரிவித்தார்கள். இன்னொரு கூட்டம் தமிழர்கள் கனடாவிலுள்ள அமெரிக்கக் கொன்ச லேற்றுக்கு முன்னால்கூடி நன்றிக் கண்ணீர் வடித்தார் கள். இன்னொரு கூட்டம் தமிழர்களே இந்தத் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்குப் பின்நின்று உழைத்த கனடிய அரசுக்கு நன்றி கூறுவதற்காகக் கனடியத் தலை நகரான ஒட்டாவாவில் அமைந்திருக்கும் நாடாளுமன் றத்துக்கு முன்னால் அடுத்த வாரம் கூடப் போகிறார்கள். 1987 இல் இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்ததும் அதன் பின்னர் நடந்தவையும் நாம் மறந்து விடலாம்! சிட்டுக் குருவிகளுக்குக் கூட அற்புதமான மூளை இருக்கிறது.

கனடாவைப் பொறுத்தவரை இத்தகைய செயற்பாடு களுக்கு அமைப்பு சார்ந்து பின்னணியில் இருக்கின்றவர் கள் முன்னாள் விடுதலைப் புலிகளும் அவர்களது சார்பில் முன்பு இயங்கிய நிறுவனங்களும் என்பது ஒரு கேலிக் குரிய முரண்நகையாகும். கனடிய வரலாற்றிலேயே மி கவும் மோமான பிற்போக்குவாத பழமை பேணும், மக்களுக்கு எதிரான ஒரு அரசாங்கத்தின் வெளிப்படை யான ஆதரவாளர்களாக இருப்பதிலும் இந்த நிறுவனங்க ளுக்கு நாணம் கிடையாது. இது நாணயம் சம்பந்தப்பட்ட விடயம்.

இவ்வாறு தொடர்கிறது சேரனின் கட்டுரை. இக்கட்டு ரைக்கு ஜெயபாலன் எழுதிய பதிலை இங்கு முழுமை யாகத் தருகிறோம்.

தோழர் சேரனுக்கு, உங்கள் கருத்துடன் முரண்பட நேர்ந் தமைக்கு வருந்துகிறேன். இன்று 0 மட்டத்தில் (groundzero) வீழ்ந்துகிடக்கும் களத்தில் உள்ள எமது மக்களின் விடிவுக் காக புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகள் சூரியனின் கீழ் அவசியமான சகல ஆட்டங்களையும் ஆடியே ஆக வேண்டும். அது எருமை ஆட்டம் மட்டுமல்ல அதற்க்குக் கீழேபோய் நாய் ஆட்டம் நரி ஆட்டமாக இருப்பினும் நாம் ஆடியே ஆகவேண்டும் என்பது என்று வலியுறுத்துகிறேன்.

நீங்கள் எங்களுக்கு பல தெரிவுகள் இருக்கின்றது என்று கருதுகிறீர்களா? நாம் வெறென்ன செய்யலாம். செய்ய வேண்டும்? நமக்கு இதைவிட வலுவான மாற்று வழிகள் இருந்தால் மட்டுமே நீங்கள் சொல்வதில் ஏதாவது உண்மை இருக்கலாம்.

நான் ஒருசமூகவிஞ்ஞானியோ அறிஞனோ இல்லை. ஆனா லும் நாம் ஒரு இன்மாகத் தப்பிப் பிழைத்தல் மேம்பட்டு உய்தல் தொடர்பாக எனக்குத் தெரிந்த வரைக்கும் நமக்கு இதைவிட அடுத்த தெரிவுகள் இல்லை. தெரிவை உருவாக்கக்கூடிய பலத்தை உருவாக்க பெரிதாக அரசி யல் வெளியும் இல்லை. இருக்கிற சிறிய அரசியல் வெளிக் குள் நுளைந்து அதைப் பெருப்பிக்க வேண்டிய அவசரத் தேவை நமக்கு உள்ளது. அந்த பணிகளின் சரியான ஆரம் பமே கூட்டமைப்பும் புலம்பெயர்ந்த தமிழர்கலது அமைப் புகளும் அமரிக்காவுக்கும், கனடாவுக்கும் மேற்கு நாடுக ளுக்கும் இந்தியாவுக்கும் நன்றி கூறும் நிகழ்வுகள். இது காலத்தின் அவசியமாகும்.

ஆனாலும் இதுதொடர்பாக நீங்கள் வைக்கக்கூடிய ஒரே ஒரு காத்திரமான விமர்சனம் உள்ளது. தமிழர்களே நீங்கள் பெரிய நாடுகளோடு நிறுத்திக்கொள்கிறீர்கள் அது தப்பு. அது தொடர்பாக எனக்கு விமர்சனம் இருக்கு. பெரிய நாடுகளோடு நின்றுவிடாமல் தீர்மானத்தை ஆதரித்த அத்தனை சின்ன நாடுகளுக்கும் நன்றி கூறுங்கள். அவற் றுட் சில கொள்கைரீயாகவும் எம்மை ஆதரிக்கும் நிலை பாடு எடுத்தவை. அத்தகைய நாடுகள் எமக்கு அமரிக்கா போல முக்கியமானவையாகும். ஆதரித்த அத்தனை நாடு களுக்கும் நாம் நன்றிகூறவும் அவற்றுடனான தமிழர் நட் புறவுச் சங்கங்களை அமைத்துத் தொடர்ந்து செயல் படவும் கடமைப் பட்டிருக்கிறோம். தமிழர் மெச்சிக்கோ நட்புறவு சங்கம் தமிழர் இந்தியா நட்புறவுச் சங்கம், தமி ழர் மொறீசியஸ் நட்புறவுச் சங்கமென புலம் பெயர்ந்த நாடுகளில் நூறு நட்புறவு மலர்கள் மலரட்டும். நடு நிலை வகித்த நாடுகளில் மலேசியா முக்கியமானது. இலங் கைக்கு ஆதரவான அந்த நாட்டை மலேசிய தமிழர்களின் போராட்டங்களே அசைத்தது. மலேசிய தமிழருக்கு நாம் நன்றி சொன்னோமா என உரத்துக் கேட்க்க வேண்டி உள்ளது. தமிழர் மலேசிய நட்புறவு நடவடிக்கைகள் மிக முக்கியமானவை. இத்தகைய விமர்சனங்களுக்கே இடம் இருந்தது. அத்தகைய விமர்சனத்தையே உங்களிடம் இருந்து எதிர்பார்த்தேன்.

### உயிரைப்பணயம் வைத்து யுத்தக்குற்ற தகவல்களை சர்வதேச அரங்கிற்க்கு கடத்திவந்த நாயகர்கள் நாயகிகள் பலரை நாம் ஏற்கனவே மறந்துபோனது கொடுமை.

மேலும் நீங்கள் ஆதரித்த அல்லது நடுநிலை வகித்த நாடுகளுக்கும் நன்றி கூறுங்கள். உலக மனித உரிமை அமைப்புகள், ஊடகவியலாளர் பாஷன, தமிழ்நெற் லோகீ சன், அமரர் மரி கொல்வின் போன்ற சிங்கள தமிழ் சர்வ தேசபத்திரிகையாளர்களையும் கௌரவியுங்கள் அது அடிப் படையில் முக்கியமானது என்பதை அழுத்திச் சொல்லியி ருக்கலாம். அதனை நானும் ஆதரித்திருப்பேன்.

ஏனேனில் பிரபலமான ஒருசிலநாடுகளை வாழ்த்தி விட்டு முக்கியமான பல நாடுகலையும் நபர்களையும் மறந்து விடுவோம். இத்தகைய தவறுகள்தான் நாம் திரும் பத் திரும்ப இளைக்கிற தவறுகள் சிங்கள பத்தீரிகை யாளர் பாசன தமிழ்வாணி லோகீசன் போன்ற உயிரைப் பணயம் வைத்து இனக்கொலை யுத்தக்குற்ற தகவல் களை சர்வதேச அரங்கிற்கு கடத்திவந்த நம் காலத்து நாயகர்கள் நாயகிகள் பல்ரை நாம் ஏற்கனவே மறந்து போனது கொடுமை. இதற்காக நம்மவரை எருமைக்கடா என்றால் நானும் ஆமோதிதிருப்பேன். நானும் உங்க ளோடு சேர்ந்து குரல் கொடுக்கவே விரும்புகிறேன் எனவே நம்மினத்தை இன்னும் பாதாளத்துக்குள் தள்ளிவிடக்கூடிய தங்கள் anarchistic அணுகுமுறையை விட்டு விட்டு. தோழரே தயவு செய்து மாற்றி யோசியுங்கள்.

## காசி ஆனந்தன் நறுக்குகள்!

- பாடம்-



புரட்சியாவது வெங்காயமாவது என்கிறாய்.....
தெரிந்து பேசு

காயப்படுத்தியவன் கண்ணீரை வாங்கும்
வெங்காயம்.
செந்நீரை வாங்கும் புரட்சி......

## நேரம் உறைகின்ற காலம்......

இரவென்ற ஓர் நிலையும்
இருட்டறுந்து கிழிந்து விழும்
ஒளி வண்ணம் போற்
தோன்றும்
ஓர் பகலும் அது படர்ந்து
ஆயிரம் சந்ததியைக் கடந்தும்
ஆழ் மனதில் அழியாமற் படிந்து
மயக்கம் வழிகின்ற
மாலை சாய்ந்து விழும்
மருள் நிலையும் என் வாழ்வின்
காலக் கணக்கின் கண்களுக்கு
எந்த விதக்
காட்சிகளும் அதன்
கலங்கல் நிறமுமற்று
சாச் சொரியும் போது விழும்
சாயை மட்டும் தெரிகிறது

நிமிடங்கள் அறுந்து
மணி நாட்கள் அறுந்தறுந்து
மாதம், வருடங்கள் அறுந்து விழ
என் வாழ்வு
நேரங்கள் அற்ற
நிலை உறைந்து போயுள்ள
காலங்கள் நோக்கிக் கடக்கிறது

ஏனெனிலோ
உணவுண்ண வருவாயா
உறங்கி எழுந்தாயா
ஏனிரெண்டு நாளாக
எழும்பாமல் படுத்திருந்தாய்
நாளைக்குப் பின்னேரம்
நாலரைக்கு மேலாக
நானுன்னை வந்து பார்க்கட்டா
இல்லையெனில்
நீ என்னைப் பார்க்க வருவாயா
இப்படியாய்
எனை நோக்கிச் சும்மா
ஏதேனும் ஓர் வார்த்தை
ஏறெடுத்தும் கேட்பதற்கு
இங்கே யாருமில்லை
எல்லோரும் தூங்குகையில்
என் கண்கள் விழிக்கிறது

அவர் விழித்தெழுகையிலே
அயர்ந்துறங்கிப் போகின்றேன்
உணவுண்ணல் மற்றும்
எல்லாமே இப்படித் தான்
என்னோடிருக்கின்ற மனிதர்கள்
இயங்குகிற இயல்பு வழமைக்கு
எதிர்மாறாய் என் போக்கு
தலை கீழாய் நடந்து செல்கிறது

தினந்தினமும்
அடித்துடைந்த கால்கள்
அணு அணுவாய்க் கொதித்தாலும்
உடைந்துத் தெறிப்பது போல்
உள் நெஞ்சுள் வலித்தாலும்
எனக்கிங்கு துணையாக நானே தான்
அதனாலே
எனைச் சுற்றி இருப்பவைகள்
எனக்குத் தெரிவதில்லை
காலக் கணக்கெல்லாம்
மனக் கண்ணில் புரிவதில்லை
காட்டில் வளர்கின்ற மரம் போல
என் வாழ்க்கை
நாட்டில் நடந்து திரிகிறது

இப்படியே
எல்லைகள் ஏதுமற்று
இயல்பாய்க் கிடக்கின்ற
பிரபஞ்சப் பெருவெளியின்
பெயரற்ற வீதிகளில்
மனிதர்கள் தங்களது
மனம் கொண்டு போட்டிருக்கும்
புறத் தடையை எந்தன்
புறங்கையால்த் தட்டி விட்டு
நேரம் காலமற்ற
நிகழ்கால வெளி நெடுக
மூளை மனம் நின்றுவிடக்
கால் நடந்து செல்கிறது....

திரு.திருக்குமரன்



# கலாசார நிகழ்வுகள்



சட்டன் தமிழ் நிலையத்தின் (Sutton Tamil Welfare Centre) ஐந்தாவது ஆண்டு கலாச்சார நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. பெரியவர்கள் சிறுவர்கள் என இரு தரப்பினரிரும் பங்குபற்றிய நடன நிகழ்வுகள் வில்லுப்பாட்டு நடனம் போன்ற பல் கலாச்சார நிகழ்வுகள் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன.

நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**APRIL 14 SATURDAY**

இன்னிசை நிகழ்வு

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் (ஐ.இ) கிளை வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காக நடாத்தும் மாபெரும் இன்னிசை நிகழ்வு

இடம்: The Ridgeway Center. Featherstone Rd, Wolverton Mill, MK 125TH

நேரம்: மாலை 5.00 மணி முதல்

தொடர்புகளுக்கு: 07791495933 / 07886890552

**APRIL 28 SATURDAY**

இலக்கிய நூல் வெளியீட்டு நிகழ்வு

வித்துவான் வேலன் இலக்கிய வட்டம் நடாத்தும் திருமிகு அலஸ்ரயர் உறொபின்சன் மக்ளாஷன் மற்றும் திரு செல்லத்தம்பி சிறீஸ்கந்தராஜா ஆகியோரது நூல் வெளியீட்டு நிகழ்வு

நேரம்: மாலை 06:00 மணி

இடம்: 301, Ley Street, Ilford, IG1 4BN

**MAY 12 SATURDAY**

நூல் வெளியீட்டு நிகழ்வுகள்

ஒரு பேப்பர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த அ.இரவி மற்றும் சயந்தன் ஆகியோர் எழுதிய முறையே 'பாலைகள் நூறு', 'ஆறா வடு' புத்தக வெளியீடு

நேரம்: மாலை 05:00 மணி முதல்

இடம்: ரூட்டிங் அம்மன் கோவில் சிவயோகம் மண்டபம் 180 – 186 UPPER TOOTING ROAD, SW17 7EJ

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

ஒரு பேப்பர்

# துணையற்றவர்களுக்கு நம்பிக்கையும் வெற்றியும் பெற்றுத்தரும் ஆன்மீக, சோதிட அறிஞர் குருஜீ

ஆன்மீக குணப்படுத்தலிலும் சோதிடத்திலும் விசேட திறமையுள்ள பரம்பரை வழிவந்த குருஜீ இவ்வகையான சித்து ஞானமும் விஞ்ஞான அறிவும் தனது உடலில் ஊறியுள்ளதை சிறுவயதிலிருந்தே உணர்ந்திருந்தார்.

அவருடைய சொந்தக் கிராமத்தில் இளவயதினராக இருக்கும்போதே வெள்ளை உடை அணிந்த ஞானி ஒருவர் இவரை அணுகுவது போன்று அடிக்கடி இவரது கனவில் தோன்றினார்.

சிறந்த அருளினால் சூழப்பட்டது போன்ற இவ்வுருவம் குருஜீயிடம் அதிவிசேட குணாதிசயங்கள் அமைந்திருப்பதை சைகைகள் மூலம் தெரியப்படுத்தினார்.

இவர் இளவயதிலேயே தம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் தம்மிடமுள்ள விசேட ஆற்றல்மூலம் மற்றவர்களுக்கு உதவுவதே தமது கடமையெனவும் உணர்ந்து கொண்டார்.

எதிர்காலத்தை உணரும் ஆற்றலுடன் ஆன்மீகப் பாதையில் செல்ல விரும்புவோருக்கு மகிழ்வும் வெற்றியும் பெற்றுக் கொடுக்கத் தேவையான கருவிகளைத் தாம் பெறல் வேண்டும் என்பதை உணர்ந்தார்.

இவருடைய 19 ஆவது வயதில் இவருக்கு அறிவுரைகூறி ஏற்ற பாதையில் நடத்திச் செல்லக்கூடிய ஆசான்கள் இருவர் கிடைத்தது இவரது அதிஷ்டமாகும். இவ்விருவரும் இவருக்கு கணித சாஸ்திரம், கைரேகை, சோதிடம், வழிபாடு, தியானம் பற்றிய அறிவை ஊட்டினர். அத்துடன் அதிஷ்டப் பொருட்கள், நிறங்கள் ஆகியவற்றை முன்கூட்டியே சொல்லக்கூடிய ஆற்றலையும் அடைந்தார்.

'மக்கள் துன்பம் காரணமாக என்னிடம் வரும்போது எனது ஆற்றலை உபயோகித்து அவர்களுக்கு ஒரு தீர்வைக் கூறுவேன்'

இவரை நம்பி இவரைப் பின்பற்றுவோர் பலருண்டு. கடவுளின் அருளினாலேயே அவர்களுக்கு என்னால் உதவமுடிகிறது.

என்னிடம் உள்ள ஆற்றலை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அதற்காக அவர்கள் எனக்கும் பணம் கொடுக்கவேண்டியதில்லை. எனது செய்கை அவர்களுக்கு உதவியாக இருப்பின் மீண்டும் வந்து அவர்களுடைய பாராட்டின் பிரதிபலிப்பாக ஏதாவது சன்மானம் அளிப்பார்கள், அல்லது அவர்களது குடும்பத்தவரையோ நண்பர்களையோ என்னிடம் அனுப்புவார்கள். பலதரப்பட்ட சவால்களை ஏற்று அவற்றிற்குத் தீர்வு காண்பதில் உள்ள தனது நேர்மையையிட்டு இவர் பெருமிதம் அடைகிறார்.

**நான் உதவுவதற்கே இங்குள்ளேன். அதற்காக எந்தவித பிரதி உபகாரத்தையும் நான் எதிர்பார்ப்பதில்லை.**

இவரிடம் பலதரப்பட்ட பிரச்சனைகளுடன் மக்கள் வருகிறார்கள். திருமணம், குழந்தை பெறாமை, வேலையில்லாமை, வியாபார நட்டம் ஆகியவற்றிற்குத் தீர்வுகளும், உதவிகளும் வெற்றியும் தேடி மக்கள் வருகிறார்கள்.

'நான் உதவுவதற்கே இங்குள்ளேன். அதற்காக எந்தவித பிரதி உபகாரத்தையும் நான் எதிர்பார்ப்பதில்லை. என்னால் முடிந்தவரை முயற்சிப்பேன். நான் வழிபாட்டின் ஆற்றலை நம்புகிறேன். அத்துடன் எனது பார்வை வெற்றியை நோக்கியதாகும்' என்கிறார் குருஜீ.

குருஜீ - 07965559918

**SPIRITUAL HEALING & ASTROLOGY**

FREE ABSOLUTELY FREE FREE

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார். இவரை ஒருமுறைசந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி,வியாபாரம், திருமணம், குழந்தை பாக்கியம், கணவன், மனைவி ஒற்றுமையின்மை, காதல் கலியாணம் மற்றும் விசா தொடர்பான விடயங்கள் பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம், அதிஸ்ட நம்பர்கள், கோர்ட் வழக்குகள், கண்திருட்டி பரிகாரம் செய்வார். சாந்தி செய்து தரப்படும்.

உடன் சந்தியுங்கள்.....

People ask as to how he got such spiritual powers at such a young age. It is just one of God's miracles.

Please Take Prior Appointment

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

**GURU JI [Spiritual Healer & Astrologer]**

**07965 559 918 | Hounslow, Middlesex**

All matters will be kept confidently.



உணர்வுகள் உறவுகள்

# அம்மம்மா...

காலைச்சூரியன் எழும்போதே சேர்ந்து எழுந்து முற்றம் கூட்டி தண்ணீர் தெளிக்கும் போது அந்தத் தண்ணியை கொஞ்சம் அவன் மீதும் தெளித்து எழுப்பிட்டு குளித்து நெற்றி நீழத்திற்கும் இழுத்த விபூதிக்குறியோடு மாட்டில் பால்கறந்து போட்ட தேனீர் பித்தளை மூக்குப் பேணிகளில் ஊற்றி ஒன்றை அவனிடம் கொடுத்து இதை கொண்டுபோய் தாத்தாட்டை குடு என்று நீட்டி விட்டு காலைச்சாப்பாடு தயாரிப்பில் இறங்கி விடுவார். அவனிற்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அம்மம்மாவும் தாத்தாவும் நேருக்கு நேர் கதைத்ததை அவன் பார்ததேயில்லை ஏதாவது அவர்கள் கதைப்பதென்றாலும் இதை போய் அங்கை சொல்லு என்று அவன்தான் இடையில் மாறி மாறி கதை காவி. இவங்களிற்குள்ளை ஏதும் சண்டையாயிருக்குமோ??என்றும் அவன் நினைத்துப் பார்த்ததுண்டு. ஆனால் சண்டை பிடித்ததையும் அவன் காணவில்லை. மத்தியானமானதும் தாத்தா கள்ளடிக்கப் போய விட்டு வருவார். அவர் தூரத்தில் வரும்பொழுதே முற்றத்தில் படுத்திருக்கும் வாதாபி வாலையாட்டியபடி மெதுவாய் முனகியபடி சந்தோசத்திலை நிலத்திலை விழுந்து புரளும்.. குசினிக்குள் நின்றபடியே டேய் செம்பிலை தண்ணி எடுத்து வை தாத்தா வாறார் என்று குரல் கொடுப்பார். தூரத்தில் தாத்தா வந்து கொண்டிருப்பார். அவர் வாறது எப்பிடி வாதாபிக்கும் உள்ளை நிக்கிற அம்மம்மாவிற்கும் தெரியும் ?? வாதாபி மணத்திலை கண்டு பிடிச்சிருக்கும். அம்மமாவுக்கும் மணக்கிற சக்தி இருக்கோ எண்டு மண்டையை போட்டு குழப்பி ஒருநாள் அவாவிடமே கேட்டும் பார்த்தான். சின்னப்பெடியன் உனக்கு விளங்காது எண்டு சொல்லி சிரிச்சார். தாத்தா நேரடியாக கிணத்தடிக்குப்போய் கைகால் கழுவி விட்டு வந்து செம்புத்தண்ணியை ஒரு முறடு குடித்து விட்டு அதை கொண்டுவந்து சாப்பிட சப்பாணி கட்டியமர்ந்ததும் அவன் கொண்டுபோய் வாழையிலையை குடுப்பான். பெரும்பாலும் வாழையிலை தான் சாப்பிடுவார். வாழையிலை இல்லாத காலத்திலை அம்மம்மா ஒரு ஓலைப் பெட்டியை கவித்துப்போட்டு அதில் பெரியபூவரசம் இலைகளை மெதுவாய் நெருப்பில் வாட்டி கோப்பை போல வட்ட வடிவமாய் அடுக்கி தருவார் அதிலை என்னதான் சொதி குளம்பு ஊத்தி சாப்பிட்டாலும் சாப்பிட்டு முடியும்வரை கொஞ்சம்கூட கீழே ஒழுகாது .

அது மட்டுமில்லை தாத்தா செருமினால் பிடரியை சொறிந்தால். உச்சந்தலையை சொறிந்தால். நெஞ்சை தடவினால் அதற்கெல்லாம் ஒவ்வொரு அர்த்தம் இருக்கும் அது அம்மம்மாவிற்கு மட்டுமே புரியும். அதே நேரம் அம்மம்மாவின் ஒவ்வொரு பார்வைக்குமான அர்த்தங்கள் தாத்தாவிற்கு மட்டுமே புரிந்தவை. பால் குடித்து முடித்துவிட்டதொரு குழந்தைக்கு முதுகில் தட்டி அது ஏவறை (ஏப்பம்) விட்டதும் ஆனந்தப்படும் ஒரு தாயைப்போல் தாத்தாவும் சாப்பிட்டு முடித்த பின்னர் தானது வயிற்றை தடவி ஒரு ஏவறை விட்டால்தான் அவாவின் முகத்தில் ஒரு மகிழ்ச்சியை காணலாம்.இரவில் சாப்பிட்டு முடிந்ததும் காலை நீட்டி சுவரில் சாய்ந்தபடி வெற்றிலைப் பெட்டியை எடுத்து வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை. எல்லாத்தையும் அளவாய் சேர்த்து பாக்குஉரலில் போட்டு இடித்து அதை ஒரு முழு வெள்ளிலையில் கொட்டி சுருட்டி அதனை இரண்டாகப்பிரித்து பாதியை தாத்தாவிடம் கொடுக்கச்சொல்லி அவனிடம் நீட்டிவிட்டு பாதியை அவர் வாயில் போட்டுமென்றுவிட்டுவாய்கொப்பளித்துவிட்டு படுக்கப் போவார். அவர்களின் வாழ்க்கையின் சுக துக்கங்கள் அனைத்தையும் சரிபாதியாய் பகிர்ந்து கொண்டதன் முழு அர்த்தமுமே அவர்கள் இரவில் பகிர்ந்து கொள்ளும் அந்த வெற்றிலையில் ததத்துவமாய் பொதிந்திருந்தது அப்பொழுது அவனிற்கு புரிந்திருக்கவில்லை. அப்படியானதொரு நாளில்தான் தாத்தா நோய்வாயப்பட்டு படுக்கையில் வீழ்ந்தார். அவரது இறுதிக்கணங்கள் நெருங்கிக் கொண்டிருந்தது. அன்றிரவு தாத்தா மயங்கிய நிலைக்கு போய்விட்டிருந்தார். அவன்தான் அவசரமாக ஓடிப்போய் நடராசா பரியாரியை அழைத்து வந்தான். வந்தவர் எல்லாம் பரிசோதித்துவிட்டு சொந்தபந்தங்களிற்கு சொல்லியனுப்பிட்டு பால் ஊத்துறவை ஊத்துங்கோ எண்டு சொல்லிவிட்டு அவரின்ரை பங்கிற்கு அவரும் பால் ஊத்திவிட்டு போய்விட்டார். பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எண்டு எல்லாரும் வரிசையாய் நிண்டு பால் ஊத்தியாச்சு. ஆனால் இன்னமும் சேடம் இழுத்துக் கொண்டுதானிருந்தது. பலர் சொல்லியும் அவர் விரும்பினபடி விதம் விதமாய் சமைச்சு போட்ட கையாலை பால் ஊத்தமாட்டன் எண்டிட்டார் அம்மம்மா மண் பொன் எல்லாம் உரசி ஊத்தியாச்சு நேரம் போய்க் கொண்டேயிருந்தது சேடம் இழுத்துக் கொண்டேயிருந்தது. பிள்ளை உயிர் கிடந்து தவிக்கிது இப்பிடி தவிக்கவிடாதை அடம்பிடிக்காமல் பாலை ஊத்து எண்டு ஊர்பெருசுகள் எல்லாரும் வற்புறுத்திய பிறகு தான் விசும்பியபடி ஒரு கறண்டியில் பாலை எடுத்து அவரது வாயில் ஊற்றினார் தாத்தாவின் மார்பு சில அங்குலம் கட்டிலில் இருந்து மேலே எழும்பி கீழே இங்க மெல்லிய தாய் ஒரு கொட்டாவியோடு அவரது உயிர் பிரிந்து போனது. வீடு முழுதும் ஒரே ஓலம்.

• • • • •

அதிகாலையே சினேகிதங்களோடை சேர்ந்து ஊர் முழுக்க இழவு சொல்லிவிட்டு விடியமுதலேயே சுன்னாகம் இரத்தினன் வீட்டிற்கு ஓடினான். காரணம் செத்த வீட்டிற்கு வெள்ளை கட்டிறவன். ஐயர் இவையளிற்கு முதல் முக்கியமான ஒருவன் இரத்தினன். அந்த நேரத்திலை நாடகத்திற்கு வைரமுத்து . தவிலிற்கு தட்சணாமூர்த்தி மாதிரி பறையடிக்கிறதுக்கு இரத்தினன். இரத்தினின்ரை நாள் சரிவாராமல் பிணம் எடுக்கிறதை தள்ளிப் போட்ட சம்பவங்களும் நடந்திருக்கு. கறுத்த மெலிஞ்ச வலிச்ச உடம்பு வெத்திலை போட்டு சிவந்தவாய் இதுதான் இரத்தினன். இரத்தினன் தொழில் திறமை. பக்தி இதுக்கு அடுத்ததாய் சாதியத்திற்கு எதிரானதொரு போராளியும். யார் செத்தவீட்டிற்கு கூப்பிடப் போனாலும் அவனின்ரை முதல் உத்தரவு தனக்கோ தன்னோடை வாறவைக்கோ சிரட்டையிலை தேத்தண்ணி தரக்கூடாது எண்டு கண்டிப்பாய் சொல்லிவிடுவான். அவனிற்காக கிளாசுகள் வாங்கித்தான் தேத்தண்ணி குடுக்கவேணும். செத்த வீட்டிற்கு வந்ததும் வெறும் தேத்தண்ணியை குடிச்சபடி வெற்றிலையை போட்டு சப்பித் துப்பினபடியே இருப்பான் அவனின்ரை உதவியாளர் அல்லது அவனிட்டை தொழில்பழகிறவர்தான் இடைக்கிடை மேளத்தை அடிச்சபடி இருப்பினம்.கடைசி பொற்சுண்ணப்பாடல் முடிஞ்சு எல்லாரும் பந்தம் பிடித்துக் கொண்டிருக்கும் போதுதான். தேத்தண்ணி இருந்த இரத்தினன்ரை கிளாசிலை சாராயம் நிரம்பியிருக்கும். ஒரு சுருட்டை பற்றவைத்துவிட்டு மேளத்தை தூக்குவான். அதுக்கு பிறகு சத்தத்தை வைச்சே இரத்தினன் அடிக்கத் தொங்கிட்டான் எண்டு எல்லாருக்கும் தெரியும்.

தாத்தா செத்த நேரம் அவரின்ரை ஆம்பிளை பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டிலை உடனை வரமுடியாத நிலைமை அதலை அவன்தான் கொள்ளி வைக்கவேணும் தாத்தாவேறை தண்ணியடிச்சிட்டு டேய் நீ தானடா எனக்கு கொள்ளி வைக்கவேணும் எண்டு அடிக்கடி சொல்லுவார். கொள்ளி வைக்கிறதெண்டு முடிவாகிட்டுது அதுக்கு கட்டாயம் மொட்டையடிக்கவேணும். மொட்டையடிச்சால் பிறகு பள்ளிக்கூடத்திலை எல்லாரும் அவனை மொட்டைப் பாப்பா சட்டியுடைச்சான் மூண்டுபானை கூழ் குடிச்சான் எண்டு நக்கலடிப்பினம் .அதாலை மொட்டையடிக்காமல் தலைமயிரை ஒட்ட வெட்டச் சொல்லி கேக்கலாமெண்டு தம்பிஐயாவை தேடிப் போனான். தம்பி ஐயாவோ பின்வளவு பூவரசிலை தோல்வாரை கட்டிப்போட்டு சவரக்கத்தியை இழுத்துத் தீட்டிக்கொண்டிருந்தான். தம்பி ஐயா மொட்டையடிக்காமல் கொஞ்சம் ஒட்டவெட்டினால் காணும்தானே?. தம்பி இது சடங்கு சம்பிரதாயம் இதுகளை மீறக்கூடாது எண்டபடி அவன் தலையில் தண்ணியை தெளித்து வழிக்கத் தொடங்கினான். ஒருநாள் அவனின்ரை சலூனிலை பலவருசமாய் வைத்து தம்பிஐயா தேய்த்தக்கொண்டிருந்த சீனாக்காரத்தை எடுத்து கீழைபோட்டு உடைத்து விட்டான் அதற்கு எப்பிடியும் பழிவாங்கியே தீருவான் என்பது அவனிற்கு தெரியும்.மொட்டையடித்து முடித்தவன் தம்பின்ரை மண்டை வடிவான உருண்டை மண்டையெண்டு பழிவாங்கி விட்ட திருப்தியில் சொல்லிச் சிரித்தான்.

எல்லாரது அழுகுரல்களோடையும்.வேலியை வெட்டி பிணம் வீதியில் இறங்கியது வேட்டி கட்டியபடி மொட்டைத்லை தோளில் கொள்ளிக் குடத்துடன் அவனும் ஊர் ஆண்களும் சுடலை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். பட்டினத்தார் பாடலும் ஒவ்வொரு சந்தியிலும் இரத்தினனின் மேளச்சமாவுமாக சுடலைக்கு போய் சேர்ந்ததும் அடுக்கியிருந்த மரக்குற்றிகளில் பிணத்தை கிடத்தி பெட்டியை பிரித்தார்கள். அவனை பிணத்தை சுற்றி வலம்வரச்சொன்ன தம்பிஐயா கொடுவாக்கத்தியால் கொள்ளிக் குடத்தில் கொத்தி அதிலிரந்து வழிந்த நீரை பிணத்தை நோக்கி தட்டிவிட்டுக் கொண்டிருந்தான். தம்பிஐயா நல்லா தண்ணியடிச்சிருந்தான் வெறிவளத்திலை அவனின்ரை மொட்டந்தலைக்கும் கொள்ளிக்குடத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் கொடுவாக்கத்தியாலை பிடரியிலை கொத்திப்போடுவானோ எண்டும் பயமாக இருந்தது.கடைசியாய் தாத்தாவின் தலைமாட்டில் கொள்ளியை செருகியபோதுதான் அவனால் அடக்கமுடியாமல் அழுகை விம்மி வெடித்தது. அப்பிடியே திரும்பிப் பாக்காமல் வீட்டிற்கு போகச்சொன்னார்கள்.

எட்டுச்செலவு வரைக்கும் ஒவ்வொருநாளும் ஒப்பாரிபெண்டுகள் சொந்தக்காரரின் பட்டிணி பண்டம் எண்டு நாட்கள் போய் எட்டச்செலவும் முடிந்து அடுத்நாள். டேய் செம்பிலை தண்ணியெடுத்து வாசல்லை வையடா எண்டு வழைமைபோல குசினிக்குள் இருந்து அம்மம்மா குரல் குடுத்தார். என்ன இது மனிசி பழக்கதோசத்திலை சொல்லுதோ எண்டு நினைக்க வாதாபியும் மெதுவாய் முனகியபடி வாலை ஆட்டியபடி நிலத்தில் கிடந்து புரண்டது. அவனிற்கு பயம் வரவே செம்பில் தண்ணியை எடுத்து வைத்துவிட்டு வீட்டிற்குள் ஓடினான். தாத்தாவின் படத்திற்கு முன்னாள் ஓலைப்பெட்டியை கவிழ்த்துப் போட்டுவிட்டு வாட்டிய பூவரசம் இலைகளை வட்டமாய் அடுக்கிக் கொண்டிருந்தார் அம்மம்மா....

*சாத்திரி (ஒரு பேப்பருக்காக)*






# மருத்துவம் மகத்தானது

அனுபவம் புதுமை. நெஞ்சுவலி, இருதயக் கோளாறு, அறுவை சிகிச்சை என்றெல்லாம் நாளாந்தம் கேள்விப்பட்டாலும், அவரவர் இதை அனுபவிக்கும்போதுதான் இதன் உண்மையான தாக்கத்தை உணரமுடியும். அந்த அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது நன்மைகளும் உண்டு. தீமைகளும் உண்டு. நன்மைகளை மாத்திரம் தெரிவு செய்யுங்கள். நெஞ்சுவலி ஆரம்பிக்குமுன்னர், அவை முன்கூட்டியே சில அறிகுறிகளை உடலின் அசைவுகளில் தெரியப்படுத்துவதாக British Heart Foundation வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரங்களில் காணலாம். இப்பதிப்புக்கள் இலவசமாக ஒவ்வொரு பொதுமருத்துவ சிகிச்சை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

நெஞ்சில் உண்டாகும் ஒருவிதமான பிடிப்பு அல்லது சுமை, படிப்படியாக கைகளுக்கும் கழுத்துக்கும், வாயில் அலகுக்கும், முதுகுப் புறம் மற்றும் வயிற்றுப்பக்கம் பரவும் தன்மைகளைக் கொண்டதாக இருக்கும். இருதய பாதிப்புக்கு உள்ளாகும் சிலருக்கு, உடல் வியர்க்கும் உணர்வும், தலைப்பாரம் இலேசாகுவதையும், சுவாசம் சரிவர இயங்காமல் சுவாசிப்பதில் இடர்ப்பாடு ஏற்படுவதையும் உணரலாம். இந்தவித அறிகுறிகளை சிலர் உட்கொண்ட உணவில் செமிபாட்டுக் குறைபாடாகவும் கருதி, உதாசீனம் செய்துவிடவாய்ப்புண்டு. சிலருக்கு உண்டாகும் இருதயபாதிப்பு, அதிகபரபரப்பை உண்டாக்காமல் மிக அமைதியாகவே நடந்துவிட முடியும் என எம்மக்களிடையே ஏற்பட்ட திடீர் மரணங்கள் நிரூபிக்கின்றன. எனவே, உடலில் ஏற்படும் சிறுசிறு மாற்றங்களை உதாசீனம் செய்துவிடாமல், உரிய நேரத்தில் மருத்துவரை அணுக எவரும் குறிப்பாக முதியவர்கள் தயங்கக்கூடாது என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எனக்கு சமீபத்தில் ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக, உரிய நேரத்தில் மருத்துவ உதவியை நாடிய காரணத்தினால், 'ஒருபேப்பருக்கு' இன்று இக்கட்டுரையை எழுதக்கூடிய உடல் நலத்தில் இருப்பதை வாசகர்களுக்கு தெரியப் படுத்த விரும்புகிறேன்.

லூசியம் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட பின்னர், அங்கு தொடர்ந்த E.C.G இரத்த பரிசோதனைகள் தந்துதவிய சான்றுகளின்படி, Kings College Hospitalக்கு மாற்றப்பட்டேன். இங்கு இடம்பெற்ற Coronary Angiogram பரிசோதனையின் மூலம், எனது இருதயத்தின் செயல்பாடுகள் தடைபெற்றுள்ளது நிரூபிக்கப்பட்டது. ஆகவே, அறுவை சிகிச்சை மூலம் எனது இருதயம் செயல்பட மருத்துவ விற்பன்னர்கள் ஒழுங்கு செய்தனர். இறைவனால் எனக்கு உயிர் அளிக்க முடிந்தது. அதே உயிரை மீண்டும் சுழற்சி செய்ய மருத்துவர்களால் மட்டும் முடிந்தது. மருத்துவர்கள் இறைவனுக்கு அடுத்த படியல்லவா!

## வருமுன் காப்போம்

1985ம் ஆண்டு, பிரித்தானியாவுக்கு புலம் பெயர்ந்தபோது வருமானத்துக்கு என்ன செய்வதென்ற பேச்சுக்கே இடமில்லை. அங்குமிங்கும் காணப்படும் விற்பனை நிலையங்கள் கைகொடுத்தன. ஒரு கடையில் காலையில் ஆரம்பித்து, இரவு 11 மணிவரை வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அன்றைய சூழ்நிலையில் தேவைப்பட்டது. பசியைப்போக்க கடைகளில் விற்பனையாகும் இனிப்புப் பண்டங்கள் இலகுவில் கிடைத்தன. இந்த இனிப்புப்பண்டங்கள் தான் எமது உடல் ஆரோக்கியத்தை பின்னாளில் கெடுத்தன.

தாயகத்தில் காலையில் எழுந்தவுடன் வியர்த்துவழியும் உடல் மாலையில் உடலில் ஊற்றிக் கொள்ளும் பச்சைத் தண்ணீரால் உடல் நலம் பேணப்பட்டது. இங்கு எத்தனை மணித்தியாலங்கள் வேலை செய்தாலும் உடல் களைப்படுவது மிகவும் அரிது. இதனால் இரத்த நாளத்தில் மெல்ல மெல்ல கலந்து கொள்ளும் Blood Lipids தனது வேலையை ஆரம்பித்துவிடுகிறது இரத்த நாளத்தில் சேர்ந்து கொள்ளும் கொலஸ்ரோல் இரண்டுவகைப்பட்டது. இதில் HDL வகைப்பட்டது நல்லதெனவும், LDL கெட்ட வகையானதெனவும் பிரித்துக் கூறுகின்றனர். சாதாரணமான இரத்த பரிசோதனை மூலம், இவற்றைக் கண்டுபிடிப்பது மிக இலகுவாகும். எனவே, இந்த நாட்டில் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் குறிப்பாக முதியவர்கள் தவணை முறையில் இரத்த பரிசோதனை செய்து தமது கொலஸ்ரோல் அளவை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த அளவில் குறைபாடுகள் காணப்பட்டால், அதை நிவர்த்தி செய்ய போதியளவு மருத்துவ வசதிகள் உண்டு. Statins வகை மருந்துகள் 20% உயர்ந்த கொலஸ்ரோல் அளவையும் 30% LDL அளவையும் கட்டுப்படுத்தி இருதய தாக்கத்தை 1/4 பங்கினருக்கு குறைத்து வருவதாகவும் British Heart Foundation தரும் தகவல்களாகும்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை, சகலவிதமான நோய்களுக்கும் போதியளவு நிவாரணங்கள் நிறையவே கிடைக்கக்கூடிய வசதிகள் உள்ள சூழ்நிலையில், அறியாத்தனமாகவோ அடம்பிடிக்கும் மனோபாவத்துடனோ நோய்களை அணுகாமல் வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் இறங்கினால், அனாவசியமான மரணங்களைத் தவிர்க்க முடியுமென முழுசாக நம்பலாம்.

## ஏனிந்தப் பாரபட்சம்

மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளை, அவரவர் உறவினர்கள், நண்பர்கள் சுகம் விசாரித்துச் செல்வது வழமை. எனினும் பிரசித்திபெற்ற மருத்துவமனைகளுக்கு ஏராளமானவர்கள் நலம் விசாரித்துச் செல்வது தவிர்க்கமுடியாத சம்பிரதாயம். மருத்துவமனைக்கு வருபவர்கள் முன்கூட்டியே அறிவிப்பீர்களேயானால், அதற்கு வசதியாக கூடுதலானவர்கள் வருவதைக் கட்டுப்படுத்த முடியும். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இவை நடைமுறையில் கடைப்பிடிப்பதில் பல சிக்கல்கள் உண்டு.

பொதுவாக எல்லா மருத்துவமனைகளும், நோயாளிகளைக்காண மாலை 3.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை இடமளிக்கப் படுகிறது. எனினும் இந்த இடைவெளியில் நோயாளிக்கருகில் பிரசன்னமாயிருக்க இருவர் மட்டும் அனுமதிக்கப்படுவது மருத்துவமனைகளின் கட்டுப்பாடாகும். இந்த நடைமுறைக்கு கட்டுப்பட்டு அனேகர் ஒத்துழைப்பு நல்குவது சர்வசாதாரணமாகும். இக்கட்டத்தில் மருத்துவமனையில் நான் தங்கியிருந்தபோது, எனக்கு ஏற்பட்ட பல அனுபவங்களில் நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு. இவற்றில் சிலதை பங்குகொள்வதில் ஆர்வமாயுள்ளேன்.

நோயாளிக்கு ஆறுதல்கூற வருபவர்களை அநாகரிகமாக துரத்தியடிக்க எந்த ஒரு சுய சிந்தனையாளனுக்கும் மனம் இடம் கொடாது. இருப்பினும் கூடுதலாக கூட்டமாக வந்தவர்களைக் கண்டு சினமடைந்த மருத்துவமனைச் சிப்பந்திகள் அவர்களை விரட்டுவதில் ஆர்வமாக இருப்பதை அவதானித்த எனது உறவினர்கள் நண்பர்களுக்கு முதலிடம் கொடுத்து தாமாகவே வெளியில் சென்று, மருத்துவமனையின் கட்டுப்பாட்டைப் பேண ஒத்துழைத்தது எனது மனதை நெகிழச்செய்த செயலாகும். இதற்காக முதற்கண் எனது உறவினர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். அசௌகரியத்துக்குள்ளான எனது நண்பர்கள் என்னை மன்னிப்பார்களென முழுமனதுடன் நம்புகிறேன். இந்த ஒரு சூழ்நிலையில், எனது படுக்கைக்கு வெகு அருகில் ஒரு கறுப்பின இளைஞன் நோயாளியாக அனுமதிக்கப்பட்டது நான் செய்த துர் அதிர்ஷ்டமோ என்னமோ. இரண்டு மூன்று நாட்களாக அந்த இளைஞனைக் காணவரும் நபர்களின் கூட்டம், ஒன்றா, இரண்டா. குறைந்தபட்சம் 10 நபர்களை ஒரே நேரத்தில் காணமுடிந்தது. நண்பர்களின் கூடுதலான விசுவாசத்தையும், அன்பையும் பெற்ற அந்த இளைஞன், மருத்துவமனையின் விதிமுறைகளை மதிக்கும்படி தனது நண்பர்களிடம் எடுத்துக்கூறத் தவறியது, அவனுடைய சமுதாய தராதரத்தைத் தாழ்த்திவிட்டது என்பதே உண்மை. நோயாளர்களை குசலம் விசாரிக்க வருபவர்கள், அரட்டை அடித்து எக்கச்சக்கமான எதிரொலியை எழுப்பிக் கொண்டிருந்தபோது அதைக் கட்டுப்படுத்த மருத்துவமனை நிர்வாகம் தவறிவிட்டது. இவர்கள் செய்த அட்டகாசத்தைக் கண்டு முகம் சுழித்த பலர், இவர்களைக் கட்டுப்படுத்த நாதியற்றவர்களாக இருந்தார்கள். திருந்துவது எப்போது?

BHARATHIAR UNIVERSITY
School of Distance Education
State University, Coimbatore, India

- ஐக்கியராச்சியம் மற்றும் ஐரோப்பா வாழ் கல்வி ஆர்வலர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.!!!
- வேலை செய்து கொண்டும், வீட்டில் இருந்துகொண்டும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாரதியார் பல்கலைக்கழக BA, BBA, BCom, Bed ,BSc, MA, MBA, MCom,MSc பட்டதாரியாகலாம்.
- நீங்கள் விரும்பிய தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் க.பொ.த உயர்தரத்தில் மூன்று சித்திகளுடன் மிகவும் குறைந்த செலவில் கற்கைநெறி மற்றும் வழிகாட்டல் கைநூல் என்பவற்றுடன் அரிய வாய்ப்பினை தருகிறார்கள் இலண்டனில் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற மேலை நாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியத்தினர்.
- விண்ணப்ப முடிவுத்திகதி: 21 ஏப்ரல் 2012
- தொடர்புகள். மேலைநாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியம்.

- B.A, B.A applied Tamil
- B.Com., B.Sc Mathematics
- B.Sc. Information Technology
- BBA Finance and Accounting,
- B Social work, M.A. Tamil, M.A. English,
- M.A. Sociology, M.A. Journalism M.Com,
- M.Social Work M.Sc Applied Psychology,
- M.Sc Maths M.Sc I/T,
- MBA General, Financial, Human Resource, Banking & Marketing Management





WESTERN TAMIL SCHOOLS FEDERATION-UK
Tel: Manoharan - 020 8540 0705, Vilvaraj 020 8689 5897, 079 5840 8280 , Murugaiah 07960455853
E-mail : info@tamiled.co.uk • Web: www.tamiled.co.uk, www.b-u.ac.in

TRICO
COMMERCIAL FREIGHT TO SRI LANKA
JCB/ TRACTOR UNITS/ EXCAVATORS
OFFERS ON
HIGH CUBE CONTAINERS
OPEN TOP CONTAINERS
FLAT RACKS OR BY RO RO




GREAT NEWS FOR CAR SHIPPERS
A) We can help with 'Letters of Credit'. Professional advice on how to open a letter of credit and ensure that your documents pack reaches the bank in time. All you need to do is sign, send to the bank and wait for your money.
B) We can facilitate 'Veritas inspection' at our yard. All you need to do is deliver your car(s) with their V5's and we do the rest.
C) We provide 24 security while parked at our premises.
D) You can deliver your vehicle seven days a week until 10pm and save yourselves a journey to Felixstowe or Southampton.
E) Cars will be loaded at our yard by professionally qualified staff.
F) Give us a call from Monday to Saturday and talk to our friendly and professionally qualified staff who are there to help you.
G) We offer Marine Insurance for your cars. Weekly sailings to Colombo with 18 days transit time, so your cars get to Colombo faster than with anyone else.
Book now to avoid disappointment.

Weekly sailing to Sri Lanka with transit time of 18 days

Personal affects to Sri lanka



CALL US NOW OR EMAIL US WITH DIMENSIONS.
020 8888 8787
E-MAIL : info@tricofreight.co.uk




# Wembley Malar cash & carry

## மாபெரும் மலிவு விற்பனை!!!




**Curry powder 900 grams**

**£3.99**




**அரிசி வகைகள்**

1 Kg Pack 2 for £1.99



**டின் மீன்கள்**

2 for £2.49



**மீன் வகைகள்**

2 for £4.49




**Maggi coconut powder**

1 kg 2 for £10.99




**Nestomalt**

2 for £3.99




**அரிசி மா வகைகள்**

1kg Pack 2 for £2.39



**நண்டு**

( 2 Box) £7.99



**நல்லெண்ணை**

2 for £5.99

- இலங்கை இந்திய மரக்கறி வகைகள் 1Kg - £1.99
- மலர் பொன்னி அரிசி 5kg Buy 1 get 1 free £6.99
- Bombay வெங்காயம் 5 kg - 89 p மட்டுமே
- 3 Coconut only 99p மட்டுமே

*இன்னும் பல பல பொருட்கள் மலிவு விற்பனையில்*

**இவை ஏப்பிரல் 15 வரை மட்டுமே!!!**

**541-543 High road, Wembley, HA0 2DJ, Tel : 02087955797**

# ஐபோனில் மன்னர் மகிந்தரும் மனிதவுரிமை அமைச்சர் சமரசிங்கவும்

சதா

(ஒரு பேப்பருக்காக)

மகிந்த: ஹலோ சமரசிங்க. ஒண்ணை நம்பி ஐ.நா.வுக்கு அனுப்பினது என்னோட முட்டாள்தனம்தானே. சொளை சொளையாய் சல்லியும் கொடுத்து எழுபது ஆக்களையும் கூட்டி கொடுத்து குண்டிலே எனக்கு நானே ஆப்பு சொருகினதுதானே. பீரிசு சொன்னது ஒண்ணை நம்பினா எனக்கு ஆப்புத் தான் எண்டு நான்தான் அவரை பேசி அடக்கிப்போட்டுது.

சமர: மாத்தயா நான் எல்லா நாட்டுக்காரன்களிட்டையும் எங்கட நெலமையை எடுத்து சொன்னது. தாமரா நோனா கூட அவங்களோட படுத்து படுத்துதான் பேசிப் பாத்தது. வெள்ளைகாரங்க ஒங்கட பொய் கதை கதைக்க வேண்டாம் எண்டது. கறுப்பு ஆக்கள்தான் அவாவோடை பேச்சுக் கொடுத்தது.

மகிந்த: பீரிசு என்ன சொன்னது போனை போட்டா எடுக்கிதில்லே?

சமர: நான் கூட்டத்திலை பேச தொடங்கவே அவரு மைக்ரோ போனை புடுங்கிப்போட்டு பேசாமல் இருந்தது. பக்கத்திலே இருந்த டக்ளஸ் மல்லி அதை போட்டு கேக்க சொன்னது..

மகிந்த: எயா தெமிழோ சரிவிடு. மல்லி யாரோட பேசி..?

சமர: அவனுக்கு இங்கிலீஸ் தெரியாது தானே. அவன் ஆக்களை கண்டா கண்ணாடிக்கு மேலே கண்ணை ஒசத்தி எந்த நாட்டுகாரங்க எண்டு கேக்கும். அப்புறம் கிட்ட போயி Help to Sri Lanka எண்டு கேக்கும். அதுகூட நான் தானே அவருக்கு சொல்லி கொடுத்தது.

மகிந்த: எங்கட சீனாக்கார ஆக்கள் ஒங்களுக்கு நல்ல ஒதவி செஞ்சதா?

சமர: அவங்கதானே மிச்சம் மிச்சம் ஒதவி செஞ்சது. ஆனா வெள்ளைகாரன்க அவங்களுக்கு சொன்னது தெமிழன்ர பிரச்சனை ஒங்களைவிட எங்களுக்கு தான் கூட தெரியுமெண்டு.

மகி: இண்டியாகாரன் எங்களை அண்டை நாடு அண்ணன் நாடு எண்டு போட்டு கடைசி நேரத்திலே அடியை காட்டினது தானே. அவங்களுக்கு பெரிய ஆப்பு ஒண்டு சீவி எடுத்து சொருக வேணும் சரியா?

சமர: இது பத்தி பீரிசும் நானும் கடுமையாய் அவங்களோட சண்ட போட்டது. மிச்சம் பெரிய சண்டே. அப்ப இண்டியா ஆளு ஒண்டு சொன்னது எங்களுக்கு தெமிழ் நாட்டுகாரங்க பிரச்சனை, அமெரிக்காவோட பிரசர். இதுக்கு மேலே எங்கட கட்சிக்குள்ளாடி பொளவு. இப்படி இருக்க நாங்க ஒங்களுக்கு ஒதவி பண்ண வந்தா நீங்க பாகிஸ்தான் ஆமிகாரங்களை கூப்பிட்டு அவங்களோட கூட்டம் போடறது. ஒங்கடை நாட்டை சுத்தி சுத்தி காட்டிறது. அவங்களை சீனாகாரங்க அனுப்பித்தான் அவங்க ஒங்களிட்டை வருது எண்டு நாங்க சொல்லி கொடுத்தும் நீங்க கேக்கிறது இல்லைதானே எண்டு மிச்சம் கோபப்பட்டது தானே.

மகிந்த: அவங்களுக்கு பயம் வரோணும் எண்டு தான் கோட்டா மல்லி அப்படி செஞ்சது. அவங்க கோபப்படு வாங்க எண்டா கோட்டா இப்படி செஞ்சிருக்காதுதானே. சரி நீங்க மல்லியை கொறை சொல்ல கூடாது சரிதானே.

சமர: மாத்தயா அவங்க சொன்னதைத்தான் நான் ஒங்களுக்கு சொன்னது. மலேசியாகாரன் கூட கடைசி நிமிடம் வரைக்கும் ஒங்களுக்குத்தான் எங்கட வாக்கு எண்டு சொன்னது. அப்புறம் அங்கினை ஓரமா உட்காந்திருக்கி. அவங்களை எட்டிப் பாத்தா அவங்க வேறபக்கம் பாத்தது தானே. புலிக்கிட்ட சல்லி கில்லி வேண்டின போல.

மகிந்த: மலேகாரனை தூக்கி போடு ஆனா இண்டியா தவிர மத்த ஏசியாகாரன்க எங்களுக்கு தானே சப்போர்ட். புலியாளுங்க நெனக்குது வெள்ளைகாரங்கள புடிச்சு எங்கள புடுங்கலாமெண்டு. ஆனா கோட்டா மல்லி நெனைச்சா இங்கே இருக்கிற தெமிழன் எல்லாத்தையும் புடுங்கி எறிஞ்சு போடும் சரியா. ஆனா ஒங்கே உள்ள தெமிழனுக்குத் தான் எங்க மேலே மிச்சம் மிச்சம் கோபம் இருக்கி. ஆக்களை கொண்டது. பொண்ணுங்கள கெடுத்தது, பட்டிணி போட்டது. இத நான் கோட்டாக்கு சொன்னது.

சமர: வெள்ளகாரன்கிட்டேயும் ரஸ்சியா எங்க பக்கம் தானே நிக்குது. ஆனா ஒண்டு மட்டும் நான் பாத்தது. இந்த தடவ மிச்சம் மிச்சம் தெமிழ் ஆக்களு இங்கே வந்து எல்லா நாட்டுகாரன்களேடேயும் பேசினது. கைநெறைய போட்டோக்கள், DVD. எல்லாம் கொண்டு வந்து அவங்களுக்கு கொடுத்ததுதானே. அடுத்த வருசம் இன்னும் தெமிழன் இங்கே வரப்போகுது. இந்த தடவை கூட எங்கள கோபப்படுத்திற மாதிரி கேள்வி கேட்டுப் போட்டு நாங்க கோபப்பட்டு பேச மத்த ஆக்களு எங்கள கண்டிக்க தெமிழன் எங்கள பாத்து சிரிச்சதுதானே. அதுதான் எங்களுக்கு சங்கடமாப் போச்சு.

மகிந்த: K.P கருணா எல்லாம் எனக்கு உறுதியாய் சொல்லி இருக்கி. மேலே நாட்டில உள்ள தெமிழனை எல்லாம் பாகம் பாகமா பிரிச்சுப்போட்டு அப்புறம் சண்டை மூட்டிவிட்டு அப்புறம் அடிபட்டு ஆளை ஆள் காட்டிக் கொடுத்து வெள்ளைகாரனோட சிறையிலேயே போட்டுத் தாறம் எண்டு.

சமர: மாத்தயா எங்கட முஸ்லீம் அமைச்சு ஆக்கள் வந்ததுதானே. அவங்கதான் அரபு நாட்டுகாரன்களோட பேசி எங்களுக்கு சப்போர்ட் வாங்கி கொடுத்தது. அவங்க பிரியாணி விருந்தெல்லாம் போட்டு தாமரா குணநாயகத்தையும் கூட்டிப் போய் அரபுகாரன்களிக்கு அவ கையாலேயே பரிமாறினது தானே.

மகிந்த: ஒங்களுக்கு அந்த முஸ்லீம் ஆக்ள பத்தி தெரியாது. அவங்களோட மிச்சம் கவனமா இரிக்கோணும். நான்தான் தாமிராவுக்கு ஓடர் போட்டது. முஸ்லீம் ஆக்ளு பேசிற இடமெல்லாம் நீங்க இரிக்கோணும் எண்டு. அவங்கள தெமிழன் கிட்ட போகாம நாங்க வைச்சிரிக்கோணும். ஆனால் அவங்கள மிச்சம் நம்பக் கூடாது. எங்களுக்கு 'பேப்பே' காட்டிக்போடும். தெமிழனுக்கு ஒரு தீர்வை கொடு எண்டு எங்கள எந்த நாடேனும் நெருக்கினா எங்களுக்கும் ஒரு 'அலகு' வேணுமெண்டு அவங்க போயி அடம்புடிச்சு எல்லாத்தையும் கொழப்பிக் கொண்டே இரிக்கோணும். இதுக்குத்தான் எங்களுக்கு அவங்க தேவை. தெமிழன் நேருக்குநேரு சண்டைக்கு வரும் ஆனா இவங்க சந்தர்ப்பம் கெடைச்சா சாறத்தை பின்னாடி தூக்கிட்டு பெரிசா சொருகிப் போடும். சரிதானே. தாமரா கறுப்பு ஆக்களை புடிச்சது. சீனாகாரன் கொஞ்சநாட்டை புடிச்சு தந்தது. மத்த கொஞ்சம் அமெரிக்காவை எதிர்க் கோணுமெண்டு வாக்கு போட்டது. அப்ப நீங்க யாரைப் புடிச்சீங்க? என்னைய விட எண்ட மல்லி கோட்டாதான் ரொம்ப கடுப்பிலே இருக்கி நீங்க எழுபது பேரும் நாட்டுக்கு வந்ததும் நேரே கோட்டாவைத்தான் பாக்கோணும் சரியா.

சமர: சரி மாத்தையா. எனக்கு ஒரு டவுட்டு இருக்கி இந்த முஸ்லீம் ஆக்களு தங்களுக்கு ஒரு 'அலகு' வேணுமெண்டு சொல்லுது தானே அது என்ன அலகு?

மகிந்த: இந்த அலகு என்னா எண்டு எங்களுக்கும் தெரியாது தெமிழனுக்கும் தெரியாது. இது ரவூப் பக்கீமுக்கு மட்டும்தான் தெரியும். ஆனா நாங்களும் இது என்னா எண்டு அவங்கள கேக்க கூடாது சரியா.

# சரித்திரம் திரும்புகிறது

(22ம் பக்கத் தொடர்ச்சி)

...கோபப்பார்வைக்கும் உட்பட வேண்டியதாயிற்று. இத்தனைக்கும் எமது தேசிய இன அந்தஸ்த்தையும், எமது கோரிக்கைகளின் நியாயத் தன்மையையும் ஓரளவுக்காவது புரிந்து கொண்டு ஓர் தற்காப்பு யுத்தத்திற்கு எம்மைத் தயார்படுத்தியது இந்தியாவே. நாம் தான் எல்லை மீறிப் போய்விட்டோம்?.

இதனால் தந்தை செல்வாவென்னும் தூர நோக்குக்கொண்ட அரசியல் அறிஞன் செதுக்கிய தேசிய இன அந்தஸ்துக் கோட்பாடும், தமிழரசு அதாவது சமஷ்டிக் கோரிக்கையும் எமது தனித்தமிழீழத்திற்கான ஆயுதவழிப் போராட்டத்தினால் உலகின்முன் எடுபடாமலேயே போய்விட்டன. இப்போது சரித்திரம் திரும்பியிருக்கிறது. தமிழரசுக்கோட்பாடும், சமாதான சகவாழ்வை இலங்கையில் ஏற்படுத்துவதற்காக தந்தை செல்வா முன்வைத்த சமஷ்டி அரசியலமைப்பொன்றுக்கான கோரிக்கையும் மறுக்கப்பட முடியாத மிக நியாயமான அரசியல் தீர்வுகள் என்பதை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

மீண்டும் ஆனாவிலிருந்து தொடங்கவேண்டியிருந்தாலும் நம்பிக்கை ஒளியொன்று முன்னே தெரிகிறது. பாக்கு நீரிணையின் இருபுறத்திலுமிருந்து தமிழ்த் தேசியம் தன்னை மெதுவாக உலகின் முன் புலப்படுத்துகிறது.


ஐநாவிடமும் மனிதஉரிமைகள் ஆணையகத்திடமும் சமாதான வழிமுறைகளுடன் கூடிய தீர்வுத்திட்டங்களை முன்வைத்து அவற்றை இலங்கையரசிடம் சிபாரிசு செய்யுமாறு தமிழர் தரப்புகள் வலியுறுத்துவதன்மூலம் எமது தேசியத்தின் இருப்பை நிதானமான முறையில் நாம் புலப்படுத்தலாம். சர்வதேசம் எமது கோரிக்கையிலுள்ள நியாயத்தன்மையைப் புரிந்துகொள்வதோடு, ஜனநாயகவிரோதமில்லாத வழிகளில் நாம் எமது இலக்குகளுக்காக முன்னெடுக்கும் போராட்டங்களையும் ஆதரிக்கும்.

எமது பிரச்சனை சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் ஒன்றாகிவிட்டதால் அதன் வெறுப்பைச் சம்பாதியாது எமது அரசியல் அபிலாசைகளையும், அவற்றைப் பெறுவதற்கான போராட்ட வழிமுறைகளையும் நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டிய காலகட்டம் தற்போது உருவாகியிருக்கிறது.

இலங்கையில் இரண்டாந்தரப் பிரஜைகளாயில்லாது சமஉரிமைபெற்ற இனமாக தற்போதுள்ள ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் எம்மை வாழவைக்க வழிகாட்ட அரசியல் அறிவு நிரம்பப்பெற்ற எந்தக்கொம்பனாலும் முடியாது. ஒன்றில் எண்பதுவீத பெரும்பான்மையிடம் எமது தாயகத்தைத் தாரைவார்த்துப் எம்மைப் பணிந்து போகும்படி வற்புறுத்தவேண்டும் அல்லது படிப்படியான குடியேற்றங்களைச் செய்து எமது தாயகத்தை இல்லாமலாக்கி இன அழிப்பினைச் செய்யுமாறு இலங்கையரசுக்கு ஆலோசனை கூறவேண்டும்.

சர்வதேசம் அதைச்செய்யாது. அதனால் தீர்வு என்பது தனித் தமிழீழ தேசம் அல்லது ஐக்கிய இலங்கையின் கீழான சமஷ்டி அல்லது கூட்டாட்சியாகத்தான் இருக்க முடியும்.

தொடருவம்...




தமிழ் ஓலைகள்
TAMIL PAGES

தமிழர்களுக்கோர்
தரமான இலவச
சமூக, வர்த்தக
தகவல் ஏடு

0771 800 3838 | 0798 642 9848
editor@tamilpages.com
www.tamilpages.com

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை

யாழ், வன்னி,
வவுனியா, மன்னார,
மட்டகளப்பு, திருமலை,
அம்பாறைக்கு விரைவான

Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilankaó

இங்கு வந்து பொதி செய்து
இல்லம் வந்து பெற்று
அனுப்பும் சேவையும் உண்டு.

தொடர்புகளுக்கு : சிவம் (Sivam)
G14, Big Yellow,
1-3 Wyvern Industriial Estates,
Beverely Way, New Malden, Surrey KT3 4PH
Tel: 02086465222 Mob: 07939550397
Email: info@permainternational.co.uk
Web: www.permainternational.co.uk


www.poojasweets.com
Best Quality Vegetarian Food for Any Occasions!
5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!
...tempting?
discover a new heaven on earth:
ORDER ON LINE
FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details
POOJA
SWEETS & SAVOURIES
The Taste That You Will Love, The Quality That You Can Trust
TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com
KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com


HAPPY SHOP
EXPRESS
SUPERMARKET
EXPRESS
HAPPY SHOP
நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
உளம் கனிந்த ஈஸ்டர், சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
* Specialist in Srilankan products
* Over 4000 SQ FT
* Free parking on site & Surrounding areas
* Halal Butcher
* Fresh Fish (Sat & Sun)
* All leading brands available
* Instore promotions available for new year
* இலங்கை மளிகைப் பொருட்கள்
* 4000 சதுர அடிக்கு மேற்பட்ட இடவசதி
* இலவச வாகனத்தரிப்பிடங்கள்
* ஹலால் உணவு தயாரிப்பாளர்கள்
* உடன் மீன்கள் (சனி மற்றும் ஞாயிறுகளில்)
* எல்லா உயர்ரக brands களும் கிடைக்கும்
* சித்திரைப் புத்தாண்டு விஷேட விலைக்கழிவுகள்
70, Windmill Road, Croydon, Surrey, CR0 2XP.
Tel : 0208 665 8381 (Near Halfords white horse Road)

# மாணிக்க மகுடம் சூட்டிக் கொண்டாள் மகாராணி

'மாணிக்க மகுடம் சூட்டிக் கொண்டாள் மகாராணி' இத்திரையிசைப்பாடலைக் கேட்டிருக்கிறீர்களா? பழைய திரைப்பாடல்களைச் சுவைப்போருக்கு இத்திரைப்பாடல் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. வித்தியாசமான இசை, சுறுசுறுப்பான மெட்டு, எவ்வளவுதரம் கேட்டாலும் சலிக்காத பாடல். ஆனால், இந்தப் பாடல் பற்றிய குறிப்பு எழுத நான் வரவில்லை. எனது குறிப்பு அஞ்சலிக் குறிப்பு. வானொலிக் குயில் **இராஜேஸ்வரி சண்முகம்** அவர்கள் எம்மையும் உலகையும் விட்டு விடைபெற்றுச் சென்றதற்கான அஞ்சலிக் குறிப்பு.

அதற்கு ஏன் இத்திரைப்படப்பாடல் என்று கேட்கலாம். இப்பாடல் எப்பொழுது மனதில் சுழன்று வந்தாலும் இராஜேஸ்வரின் குரல்தான் என்நெஞ்சில் கூவும். எழுபதுகளின் நடுப்பகுதியான காலம். காலை ஏழு மணிக்கு இலங்கை வானொலி **'பொங்கும் பூம்புனல்'** என்ற நிகழ்ச்சியைத் தவழவிடுகிறது. காலை நேரக் குளிர் போல ஒரு குயிலின் கூவல். **இராஜேஸ்வரி சண்முகம்** பாடல் வரிகளுக்கு ஏற்ற விதமாக சந்தக் கவிதை புனைந்து பாடல்களைத் தவழ விடுவார். ***'மாணிக்க மகுடம் சூடிக்கொண்டவள், மனதில் என்றும் நின்று நிலைத்தவள், காணிக்கையாக தன்னைத் தந்தவள், காதல் பாடி இதோ வருகிறாள்'*** என்ற விதமாக வரிகளைப் புனைந்துவிட்டு பாடல் சுழலும் 'மாணிக் மகுடம் சூடிக்கொண்டாள் மகாராணி'.

தமிழ் வானொலி என்றால் அனைத்து ஆளுமைகளும் இலங்கை வானொலியில் தான் சங்கமித்தன. குரல் ஆளுமையை மாத்திரம் கூறவில்லை. நிகழ்ச்சிகளின் ஆளுமைகளையும் சேர்த்தே குறிக்கின்றேன். ஆளுமைகளின் பெயர்களையும் நிகழ்ச்சிகளையும் அடுக்க விரும்பவில்லை. இலங்கை வானொலியில் ஒரு குரலைக் கேட்டவுடன் சட்டென்று சொல்லிவிடுகின்றோமே 'யார் இவர்' என்று. அதுவே அவர்களது ஆளுமை. சென்னை, திருச்சி, பாண்டிச்சேரி வானொலியில் ஒரு தமிழ்க்குரலையாவது நாம் யாரென்று அடையாளம் கண்டோமா?

அப்பேர்ப்பட்ட ஆளுமைகளில் விகசித்து எழுந்து, விசும்பு வரை உயர்ந்த ஒரு குரல் இராஜேஸ்வரி சண்முகத்தினுடையது. காலைக்குளிர் எப்படி பொங்கும் பூம்புனலாகப் பாய்ந்ததோ அவ்வாறே பின்னேரத் தேனீரின் இனிமை போல இசைக்களஞ்சியம் என்ற நிகழ்ச்சிக்கு உயிர்ததும்பி ஈர்க்கும் குரல்கொடுப்பார். ஒருபோதும் 'இன்ன திரைப்படத்தில் இன்னார் பாடினார்' என்ற ஒற்றை வரியுடன் பாடலைச் சுழலவிடுவதில்லை இராஜேஸ்வரி சண்முகம். ஒரு தொகுப்பு அவரிடம் இருக்கும். அதனையே நிகழ்ச்சித்தயாரிப்பு என்கிறோம். செய்யும் தொழிலில் விசுவாசமும் விருப்பும் இருந்தாலொழிய இது வராது. முன் ஆயத்தம் முக்கியம். ஆயத்தப்படுத்தியதை வெளிப்படுத்துவதற்கு ஆளுமை அவசியம். இலங்கை வானொலியின் அனைத்துக் கலைஞர்களிடமும் அது இருந்தபோதும் இராஜேஸ்வரியிடம் அது சற்றுத் தூக்கல்.

என்னிடம் கறுப்பு எதிர் வெள்ளை என்ற வடிவமே உண்டு. அவ்வகையில் சிவாஜி - எம்ஜிஆர், காமராஜர்-அண்ணா, ரஸ்யா-அமெரிக்கா, செளந்தரராஜன்-ஜேசுதாஸ், கே.வி.மகாதேவன் - எம்.எஸ்.விஸ்வநாதன், கே.எஸ்.ராஜா - பி.எச்.அப்துல்ஹமீத் என்ற வகைப்பாடுகளே சிறுபராயத்தில் என்னிடம் இருந்தன. ஆச்சரியமாக வட்டம்-சதுரம், புட்டு-தோசை என்று கூட வகைப்படுத்தினேன். மேற்சொன்னவற்றில் முதலில் இட்ட பெயர்களின் கட்சிக்காரரே நான். ஆனால், இராஜேஸ்வரி சண்முகத்துக்கு மாற்று என்று என்னிடம் எவரும் இருக்கவில்லை.

'இராஜேஸ்வரி' என்கின்றேன். அவர் ஒருபோதில் 'இராஜேசக்கா'வாக என்னிடம் மாறினார். பிரித்தானியக் குடிவாசியாக மாறி நீண்ட ஓர் எட்டு ஆண்டுகளின் பிறகு அம்மாவிடம் போனேன். கால் நடக்க இயலாத அம்மாவிடமிருந்து வந்த பல சம்பாஷணைகளில் ஒன்று "இராசேஸ்வரி எனக்கு நல்ல உதவி". அம்மாவின் வார்த்தையிலிருந்து என் ஊகம் இராஜேஸ்வரி என்பது அம்மாவின் தூரத்துச் சொந்தம் அல்லது பக்கத்துவீட்டுப் பெண். என் முழுசலைப் பார்த்து அம்மா "உனக்கு இராசேஸ்வரி சண்முகத்தைத் தெரியாதோ. ரேடியோ சிலோனில் எனவுன்ஸ் பண்ணுவா" என்றார்.

'அவரா' என்ற ஆச்சரியம் என்னை உடனே அவர் வீடு போகத் தூண்டியது. எனது அவசரம் கண்டு "வெறுங்கையோட போகாதே. ஏதாவது வாங்கிக்கொண்டு போ" என்றார் அம்மா. என் வீட்டிலிருந்து மூன்று வீடுகள் தள்ளியிருந்த அவர் வீட்டுக்கு இடையில் கடை ஏதுமில்லை என்பது போக, அவருக்கு கொடுக்க வேண்டியது பெரிய அன்பளிப்பு என்பதனால், வெறுங்கையால் அவர் வீட்டுக் கதவைத் தட்டினேன். திறந்ததே இராஜேஸ்வரி சண்முகம் என்கிற மகாராணி. 'நீதானே அந்தக் குயில்?' என்ற பாடல்வரி சட்டென என் நெஞ்சில் ஓடிற்று.

நான் சொல்லவேதேவை இருக்கவில்லை. 'பரமேஸ்வரி அக்காவின் மகன் இரவி' என்று அவர் சொல்லிவிட்டார். அவரை எப்படி அழைப்பதென்று திகைத்துத் தடுமாற நேரம் அவ்வளவு தரவில்லை அவர். "தம்பி இரவைக்கு சாப்பாடு கொண்டு வாறன்..." என்று ஏதேதோ சொன்னார். நான் சட்டெனப் பிடித்துக்கொண்டேன் 'இராஜேசக்கா...' என்று கதைக்கத்தொடங்கினேன். அது தொடர்ந்து, அனேகமான தினங்களில் அவர் வீட்டிலிருந்து அரை மணித்தியாலமாவது பலதும் பத்தும் பேசிப் பறைந்தேன். கூடுதலாக அவரது அனுபவங்களைக் கேட்பதிலேயே எனக்கு ஆர்வம் அதிகம்.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

இராஜேசக்காவின் திறமையை வியந்து பாடலாசிரியர் **வைரமுத்து** எழுதிய கடிதத்தை வாசித்து முடிக்க எனக்கு நிறைய நேரம் எடுத்தது. அற்புதமாக அவர் இராஜேஸ் அக்காவை சிலாகித்திருந்தார். இரண்டு பெண் குரல்கள்தான் தனக்குப் பிடித்தமானது ஒன்று சுசீலா, மற்றது எங்கள் இராஜேசக்கா. **சிவாஜி கணேசன்** தனது மணியான கையெழுத்தில் "நான் உங்களது தீவிர இரசிகன்" என்று எழுதியவரிகளின் பிறகான வரிகளை வாசிக்க எனது கலங்கிய கண்கள் விடவில்லை. அந்தக் கணமெல்லாம் என் 'சொந்த அக்கா' என உணர்ந்தேன் இராஜேசக்காவை.

**ஒரு ரேடியோ** என்ற வானொலி சேவையை ***ஒரு பேப்பர்*** ஆரம்பித்தது. ஒரு சிறுகாலம் அதன் பொறுப்பாளராக இருந்தேன். அதில் நான் செய்த ஒரேயொரு பெருங்காரியம், ஒருரேடியோ வானொலியை அதிகாலை ஆறு மணிக்கு இராஜேசக்காவின் குரலால் திறக்கச் செய்தது. காலைத்தென்றல் என்ற நிகழ்ச்சிக்காக அவர் வந்தார். ***"தமிழுக்கும் அமுதென்று பேர்..."*** என்று முதல் பாடல் வைத்தார் இலங்கை வானொலியில் ஒலிபரப்பமுடியாத இப்பாடலை 'ஒருரேடியோ' வில் ஒலிபரப்பி 'தமிழரின் தாகத்தை' தான் தீர்த்துக்கொண்டாரோ என்னவோ.

காலம் அவர் குரலைப்பறித்து விடலாம். ஆனால் காற்று அவர் குரலை தமிழ் ஒலிக்கும் இடமெங்கும் ஏந்திச் செல்லும்.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

## மொழியின் அகமும் புறமும்

ஒரு மொழி என்று சொல்லும்போது அதற்குள் அடங்கும் இலக்கணம், சொற்தொகுதி, எழுத்துத் தொகுதி ஆகிய மூன்றையும் தனித் தனியே பார்க்க வேண்டும். ஒன்றோடொன்று திரித்துப் பார்ப்பது குழப்பத்துக்கே வழி வகுக்கும். ஒரு மொழியின் அமைப்பை விளக்குவதே அம்மொழியின் இலக்கணம். 2,000 ஆண்டுகளுக்கு முன்பே எம்மொழிக்கு நல்லதோர் இலக்கணம் தந்தார் தொல்காப்பியர். இலக்கணமே மொழியின் கரு. அதை வைத்தே அம்மொழி எந்தப் பிரிவைச் சார்ந்தது என்று அடையாளம் காணப்படுகிறது.

மொழியின் நெடுங்கணக்கு அல்லது எழுத்துத் தொகுதி என்பது அம்மொழியினுள் அடங்கும் குரல் ஒலி வகைகளைப் பிரதிபலிக்கும் குறியீடுகள்தான். அவற்றில் ஏற்படும் மாற்றம் எவ்விதத்திலும் மொழியைப் பாதிக்காது. அப்படியிருந்தும் எழுத்தில் சீர்திருத்தம் கொண்டு வருவதையே தமிழில் பாண்டித்தியம் பெற்ற பலர் எதிர்க்கிறார்கள். கவிதை வடிவில் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல என்று கூறும் அவர்கள் சீர்திருத்தம் என்று வந்தால் அது வழு, வழு என்று அழுவார்கள்.

எமது க என்னும் எழுத்தையே மலையாளத்திலும் பயன்படுத்துகிறார்கள். நாம் அதே க வை சிதைத்தே கு கூ ஆக்குகிறோம். ஆனால் அவர்களோ புத்திசாலித்தனமாக அதன் பக்கத்தில் குறிலுக்கு ஒரு குறியீடும் நெடிலுக்கு ஒரு குறியீடும் இடுகிறார்கள். நாமும் அப்படிச் செய்யலாம். அதாவது கு கூ என்று எழுதலாம் ஆனால் செய்ய மாட்டோம். சாட்டுச் சொல்ல பல காரணங்கள் வைத்துள்ளோமே. உயிர் எழுத்துக்களைத்தான் என்னவெல்லாம் செய்து வைத்திருக்கிறோம். பின்லாந்தின் பினிஷ் மொழியில் எட்டு உயிரெழுத்துக்கள். அவ்வெழுத்துக்களின் நெடிலையும் சேர்த்தால் அவை பதினாறாகின்றன. அப்படிப் பார்த்தால் தமிழில் அ, இ, உ, எ, ஐ, ஒ ஆகிய 6 உயிரெழுத்துக்கள் தானே உண்டு. ஐக்கு நெடில் இல்லாதபடியால் மிகுதி ஐந்தின் நெடில்களையும் சேர்த்தால் 11 எழுத்துக்கள்தானே. (அவ் அவ்வாகவே இருக்கலாம்) அவற்றையும் ஆ, இா, உா, ஏா, ஓா என்று சீராகவா எழுதுகிறோம். இதை ஏன் இவ்வளவுக்கு உள்ளக் கொதிப்புடன் சொல்லுகிறேன் என்றால் புதிதாக இங்கு தமிழ் படிக்கும் சிறார்கள் தமிழ் நெடுங்கணக்கை சற்று எளிய வழியில் பயிலட்டும் என்னும் விருப்பால் தான்.

அடுத்து சொற்தொகுப்பைப் பார்ப்போம். பக்கத்துக்குப் பக்கம் மொழிகள் பேசப் படும்போது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழி சொற்களை வாங்குவது சகஜம்.. இதோ நான் பயன்படுத்திய சகஜம் என்ற சொல் எங்கோ வாங்கியதுதானே. மொழி வளர்ச்சி, படிநிலை வளர்ச்சியுடன் கடன் வாங்கலும் சேர்ந்ததுதான். பேச்சுக்கு எளிதான சொற்கள்தான்? முதலில் உள்வாங்கப் படும். நீர் இறைக்கும் யந்திரம், நீர்ப் பம்பி ஆகிய இரு சொற்களில் நீர்ப் பம்பியின் எளிய தன்மைதான் அதை முன்னுக்கக் கொண்டு வருகிறது. உலக மொழி என்று நாம் புகழும் ஆங்கில மொழியின் நாளாந்தப் புழக்கச் சொல்லான cash, தமிழின் காசு என்னும் சொல்லின் மாறுபட்ட வடிவம்மானே. சொற்கள் இயல்பாக உள்வாங்கப் படவேண்டும் கட்டாயப்படுத்தி உள்புகுத்த முடியாது. ஒரு காலத்தில் தமிழ் மொழியைக் கேவலப்படுத்தி அதை நீச பாஷை என்றும் வட மொழியை தேவ பாஷை என்றும் மக்களை ஏமாற்றி சொற்களைப் புகுத்த முற்பட்ட கூட்டம் தோல்வி கண்டது. அச்செயல் எத்தனையோ தமிழ் மொழிப் பற்றாளர்களை அவரவர்கள் பெயர்களையே மாற்றச் செய்தது. சுவாமி வேதாசலம் தனது பெயரை மறைமலை அடிகள் என்று மாற்றினார். வடமொழியில் பாண்டித்தியம் பெற்றவரான சூரிய நாராயண சாஸ்திரியார் சீற்றம் கொண்டு பரிதிமால் கலைஞர் என்று தன்பெயரை மாற்றினார். ஈழத்தின் தமிழ் பேராசிரியர் ஒருவர் பாலசுப்பிமணியன் என்னும் தன் இயற்பெயரை இளமுருகனார் என்று மாற்றினார்.

மொழியியலாளர் மொழியைப் பயன் படுத்தும்போது அவரது நோக்கம் அதன் அகத்தே இருக்கும். அவர்கள் இலக்கணம் அமைத்தாலும் அது மரபு வழியில் இருந்து விலகி மொழியியல் அடிப்படையிலேயே அமையும். மொழியின் இயல்புகளை உள்ளவாறு விளக்கி உரைப்பதும், மொழியின் செயற்பாட்டை விளக்குவதும் மொழியியல். பழங்குடி மக்களின் பேச்சு மொழிகளையும் கிளை மொழிகளையும் அவர்கள் ஆராய்கிறார்கள். மற்றையவர்கள் பெனிப் பெறுமதி கூட அற்ற கன்னடமும், களிதெலுங்கும் கவின் மலையாளமுந்துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்ததென்று சொல்லிக் கொண்டு இருக்க வேண்டியதுதான்.

- Friday Special -
Thali 12 Items £5.00
RAINBOW RESTAURANT
தாயகத்தில் கிடைத்த அதே சுவை....
£20 க்கு மேல் வாங்கினால் Mutton briyani or kothu rotti FREE
4 Vadai........ £1
Italy 25 pieceswith sambal & sambaar £10
WEDNESDAY SPECIAL OFFER
CHICKEN BRIYANI £1.99
100 String Hoppers with sothy & sambol Only £9.00
50 String Hoppers....... £6
25 String Hoppers ....... £4
Outdoor catering services
EMail : rainbowmitcham@gmail.com
Web: www.rainbowmitcham.co.uk
205, Streatham Road, Mitcham, Surrey, CR4 2AJ
Call : 020 8640 4230 , 020 8640 1612

Offlicene Grocery Newsagent Shop FOR SALE
SALE
• Location: Abbeygreen road Nuneation Coventry
• Long lease weekely its running £5000
கடையுடன் 3 படுக்கையறைகள் கொண்ட வீடு வாடகைக்கு £ 950 மட்டுமே
Good condition / அண்மையில் திருத்தப்பட்டது
மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்
Contact: 07946355147

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 30 வயது, 5'4", Student visa in UK Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref:3932

2. 33 வயது, 5'7", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 686

3. 31 வயது, 5'6",PSW visa, பட்டதாரி working in an American company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3937

4. 35 வயது, 5'10", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, working in an IT company தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3939

5. 21 வயது, 6'0", Asylum seeker in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3941

6. 30 வயது, 5'9", French citizen, Engineer in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3948

7. 31 வயது, 5'6", பிரித்தானிய பிரஜா வுரிமை, Software Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 115

8. 30 வயது, 5'11", HSMP visa, Engineer, working as a researcher & reading PhD, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3624

9. 32 வயது, 6'0", பிரித்தானிய பிரஜாவுரிமை, MBA holder, having own business (Shop)தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3911

10. 30 வயது, 6'0", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி working as a supervisor தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3919

11. 40 வயது, 5'9", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3897

12. 41 வயது, 5'6", பிரித்தானிய பிரஜா வுரிமை, machine operator தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3925

13. 35 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, BA and ACPA qualified, Accountant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3926

14. 53 வயது, 5'5", பிரித்தானியபிரஜாவு ரிமை, Divorced, selfemployed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3931

15. 29 வயது, 5'10", PSW visa, BSc and MBA holder, working in accounts field, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3901

16. 33 வயது, 5'9", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working as a Manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3885

17. 46 வயது, 5'8", பிரித்தானிய பிரஜா வுரிமை, Divorced, Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

18. 32 வயது, 5'9", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3893

19. 23 வயது, 5'7", Student visa in UK, completed diploma in civil engineering and doing charted accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3899

20. 37 வயது, 5'7", பிரித்தானிய பிரஜா வுரிமை, Assistant manager in a shop, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3890

21. 28 வயது, 5'11", Student visa in UK, working in IT , தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3892

22. 24 வயது, 5'6", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3907

23. 28 வயது, 5'2", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3910

24. 37 வயது, 5'4", பிரித்தானிய பிரஜா வுரிமை, Working as a team manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1793

25. 43 வயது, 5'8", Asylumseeker, பட்ட தாரி, MBA holder தகுந்த மணம களை தேடுகின்றனர் Ref: 3856

26. 31 வயது, 5'6",PSW visa in UK, BA பட்டதாரி, தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3857

27. 31 வயது, 5'7", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3866

28. 31 வயது, 5'10", பிரான்ஸ் நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3867

29. 26 வயது, 6'0", Student visa in UK, Studying BSc Computer Application, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3869

30. 26 வயது, 5'10", Student visa in UK, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3838

31. 25 வயது, 5'5", Student visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3839

32. 34 வயது, 5'5", France, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3840

33. 29 வயது, 5'10", visa in Lithuania, Engineer தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3842

34. 31 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 3844

35. 32 வயது, 5'7", Asylumseeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3845

36. 28 வயது, 5'3", Student visa in UK, Studying BA, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3846

37. 26 வயது, 5'8", Canada, Working in IT industry, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3851

38. 33 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3852

39. 30 வயது, 5'5", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3816

40. 25 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3830

41. 39 வயது, 5'6", Doctor born and broughtup in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3831

42. 35 வயது, 5'9", PR holder, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3834

43. 27 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3835

44. 33 வயது, 5'8", Permanentresidence, Engineer working in a company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3836

45. 38 வயது, 5'8", British citizen currently running a business in Dubai , தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3605

46. 35 வயது, 5'8", கனடியநிரந்தரவதிவு ரிமை, Land Surveyor , தகுந்த மணம களை தேடுகின்றனர் Ref: 3774

47. 29 வயது, 5'10", Student visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3784

48. 27 வயது, 5'5", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, IT sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 3785

49. 31 வயது, 5'8", Asylum, BBA, தகுந் த மணமகளை தேடுகின்றனர் Ref: 3786

50. 26 வயது, 5'6", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref:3787

## மணமகன் தேவை

1. 25 வயது, 5'3", பிரித்தானிய பிரஜா வுரிமை, Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3935

2. 31 வயது, 5'3", Student visa in UK, பட்டதாரி தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 3936

3. 36 வயது, 5'3", working in a IT company தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 991

4. 39 வயது, 5'4", அவுஸ்திரேலிய பிரஜா வுரிமை, Civil Engineer தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref:3950

5. 31 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவு ரிமை, Doctor, born and brought up in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3356

6. 24 வயது, 5'7", born and brought up in Switzerland, working in a financial sector தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3933

7. 29 வயது, 5'2", Student visa in UK, பட்டதாரி தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref:3934

8. 24 வயது, 5'1", Student visa in UK, பட்டதாரி தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3938

9. 47 வயது, 5'3", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி working in IT sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3903

10. 37 வயது, 5'3", பிரித்தானிய பிரஜா வுரிமை, studying ACCA, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3921

11. 29 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, Masters degree in planing, working as a transport planner, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3914

12. 41 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, Engineer, working in accountant sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3362

13. 22 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, doing business management, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3928

14. 42 வயது, 5'5", இலங்கை, working as a clerk, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 3920

15. 31 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, AAT qualified working as accounts assistant ,தகுந்த மணம கனைதேடுகின்றனர் Ref: 3918

16. 26 வயது, 5'3", பிரித்தானிய பிரஜா வுரிமை, BA Business Management with Accounting, working in accountant sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3930

17. 33 வயது, 5'8", பிரித்தானிய பிரஜா வுரிமை, divorced, பட்டதாரி working as a Teacher தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3508

18. 34 வயது, 5'8", Workpermit visa, Doctor, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3889

19. 38 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை,Part qualified ACCA, working as an assistant accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

20. 41 வயது, 5'2", Student visa in UK, பட்டதாரி, doing MSc in formulation science தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 899

21. 29 வயது, 5'1", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1378

22. 25 வயது, 5'3", BSc degree in Mathematics and Statistic, living in uk for the past 10 years waiting for a permanent visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

23. 22 வயது, 5'0", இலங்கை, A/L Bio Science தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3732

24. 31 வயது, 5'2", அமெரிக்க பிரித்தா னிய பிரஜாவுரிமை,, Doctor, PhD qualified, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3855

25. 35 வயது, 5'6", அமெரிக்க பிரஜாவு ரிமை, பட்டதாரி, Working in pharmaceutical company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3865

26. 27 வயது, 5'4", கடிய பிரஜாவுரிமை, Computer degree holder தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3881

27. 34 வயது, 5'4", பிரித்தானியபிரஜாவு ரிமை, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3841

28. 31 வயது, 5'4", பிரித்தானிய பிரஜா வுரிமை, Bio Chemist, தகுந்த மணம கனை தேடுகின்றனர் Ref: 3793

29. 35 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை, Accountant, தகுந்த மணம கனை தேடுகின்றனர் Ref: 3853

30. 28 வயது, 5'6", இலங்கை, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3803

31. 26 வயது, 5'4", பிரித்தானிய பிரஜா வுரிமை, Accountant working in a company, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 3260

32. 28 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Working in IT field, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3502

33. 22 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை, Working in medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

34. 29 வயது, 5'1", இலங்கை, Working for export firm in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3791

35. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவு ரிமை, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3800

36. 31 வயது, 5'3", PSW visa in UK, Masters degree holder, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3806

37. 29 வயது, 5'5", Work permit visa in UK, BSc, MBA degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3810

38. 26 வயது, 5'3", தென்னாபிரிக்க பிரஜாவுரிமை, Engineer தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3569

39. 24 வயது, 5'5", Denmark பிரஜாவு ரிமை, பட்டதாரி, Working in Medical sector in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

40. 36 வயது, 5'7", பிரித்தானியபிரஜாவு ரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3573

41. 32 வயது, 5'5", Malaysian citizen, Masters in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3763

42. 27 வயது, 5'8", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

43. 32 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணம கனை தேடுகின்றனர் Ref: 3772

44. Age 28, 5'2", British citizen accountant looking for a suitable groom Ref: .1348

45. Age 32, 5'4", British citizen doctor looking for a suitable groom Ref: 3711

46. Age 25, 5'3", graduate working in a bank in srilanka looking for a suitable groom Ref: 3717

47. Age 31, 5'6", British citizen graduate working in a bank looking for a suitable groom Ref: 3365

48. Age 32, 5'1", graduate working as a accountant in a company in srilanka looking for a suitable groom Ref: 3739

49. Age 33, 5'2", graduate divorced student visa in uk looking for a suitable groom Ref: 3745

50. Age 24, 5'4",Student visa in UK, looking for a suitable groom, Ref no: 3687

51. Age 34, 5'4", British Citizen, Doctor, looking for a suitable groom, Ref no:3694

52. Age 37, height 5'5" Student visa looking for a suitable groom Ref: 3667

53. Age 32, height 5'4" Sweden citizen divorced looking for a suitable groom Ref: 3653

54. Age 27, height 5'6", Canadian citizen student looking for a suitable groom Ref no 3674

55. Age 30, height 5'5", Graduate Teacher in srilanka looking for a suitable groomRef no 3660

56. Age 27, height 5'4" British citizen, a student looking for a suitable groom Ref: 3628

57. Age 29, height 5'2" Student visa looking for a suitable groom Ref: 3631

58. Age 28, height 5'7" British citizen graduate looking for a suitable groom Ref: 3637

59. Age 28 height 4'9" in Srilanka graduate looking for a suitable groom Ref: 3590

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# புராண இதிகாச சரித்திரங்கள்



லண்டனில் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள முத்தமிழ் விழா பற்றிய ஒரு துண்டுப் பிரசுரம். வழமைபோல் இரு தமிழ் சேவையாளர்களுக்கு சாதனை விருது வழங்கப்படும் என்ற தகவலையும் அது உள்ளடக்கி இருந்தது. சைவ முன்னேற்றச் சங்கத்தினூடாக புராண இதிகாச சரித்திரங்கள் புலம் பெயர் நாட்டுப் பிள்ளைகளுக்கும் பாடப் புத்தகங்களாகவும், தமிழ்ப் பாடசாலை ஊடாகவும் ஆலயப் பிரசங்கங்கள் ஊடாகவும் பரவ காரணமாகக் கொண்டிருக்கும் பணியை ஆற்றிக்கொண்டிருக்கும் திரு.ஆனந்ததியாகர். இதே பணியை தன் வருடாந்த புத்தகக் கண்காட்சி மூலமும் வெளியீடுகள் மூலமும் செய்து கொண்டிருக்கம் முல்லை அமுதன் என்ற திரு.மகேந்திரன் என்ற இரு ஈஸ்ட்காம் வாசிகளுக்கும் இந்த விருது இம்முறை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தகவல் புராண இதுகாசங்கள் பற்றிய நினைவை எனக்குள் எழுப்பியது. எங்கள் பாலப் பிராயத்திலேயே பள்ளிப் படிப்பில் அரிவரி வகுப்பு முதலாக கற்ற தமிழ் மொழி அதற்குப் பாட நூல்களாக இருந்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்நெறி, நாலடியார், திருக்குறள் என்று நீதி நூல்கள். சைவ சமய நூல்களில் கற்ற நாயன்மார்களின் சரித்திரம் திருவருள் பயன் போன்ற புத்தகங்கள். நளவெண்பா, அரிச்சந்திர புராணம், மகாபாரதம், இராமாயணம், முதலான இதிகாசக் கதைகள். சரித்திரம் என்ற பாடத்திநூடாக படித்த சேர சோழ பாண்டியன், எல்லாளன், சங்கிலியன், முதலான தமிழ் மன்னர்களின் சரித்திரம் எல்லாமே நினைவுக்கு வந்தது.

அண்மைக் காலத்தில் மேற்கொண்ட தாயகப் பயணத்திலும் புலம் பெயர் நாட்டிலே பரவலான பார்வையிலும் இந்த புராண இதிகாச சரித்திரங்கள் இளம் சிறார்களை உரியமுறையில் சென்றடைகின்றதா என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது. நளவெண்பா, அரிச்சந்திர புராணம் ஆகிய இரு இதிகாசங்கள் பற்றிய அறிவு எம் மக்களிடையே இளம் பாலர்களிடையே இல்லை என்பதை சில கேள்விகளை சிறார்களிடம் கேட்டபோது காணமுடிந்தது மிகவும் வேதனை அளித்த விடயம். இது எல்லாமே காணாமல் போனோர் பட்டியலில் அடக்கம் பெறப் போகின்றதா? என்ற எண்ணமே துயரத்தைத் தந்தது.

நளவெண்பா பாலபோதினி என்ற புத்தகத்தில் நாம் கற்ற கதை. அம்பலப்பிள்ளை ஆசிரியர் அதைக் கற்பித்த முறை இன்றும் நினைவிருக்கின்றது. ஆசிரியர்கள் கதிரேசப்பிள்ளை நாகலிங்கம் ஆகியோரிடம் ஏழாம் எட்டாம் வகுப்புகளில் பாலபாடம் என்ற புத்தகத்தின் மூலம் படித்த, மகாபாரதம், இராமாயணம் ஆகியவற்றில் உள்ளடக்கப் பட்டிருந்த கதைகள் அவர்கள் அந்த செய்யுளைச் சொல்லிய அந்த சுவையான நினைவுகளோடு மனதில் நிழலாடியது. 'பஞ்சு தளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க' என்ற கம்பராமாயணத்தை நாகலிங்கம் மாஸ்டர் கற்பித்தால் என்றோ நடந்த ராமாயணக் கதை கண்ணுக்கு முன் நிற்கும். தாய் நாட்டிலும் புலம்பெயர் நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ் பாட நூல்கள் இப்போது இவற்றில் உள்ளடக்கப் படாத நிலையையே கொண்டிருக்கின்றது. மறந்த கதையாக இவை அமைய இது காரணமாகி விடுகின்றது.

விடிய விடிய நடக்கும் நாட்டுக்கூத்து புராண இதிகாச சரித்திரங்களை எம் மக்கள் மனங்களில் அன்றைய நாட்களில் பதிய வைப்பதில் நல்ல பங்காற்றியது. அரிச்சந்திர மயான காண்டம் ஆயிரம் தடவைக்கு மேல் மேடையேறிய காங்கேசன் துறை வேணுகான சபாவின் நாடகம். நடிகமணி வீ.தீ.வைரமுத்து இந்த வேசத்தாலேயே பெயரெடுத்தவர். பாசையூர் நாடக மன்றங்கள் குறிப்பாக புகுந்தான் ஜோசப் என்ற கலைஞர் பண்டாரவன்னியன், சங்கிலியன் போன்ற சரித்திர நாடகக் கூத்துக்களை தொடர்ந்து மேடை ஏற்றியவர் மக்கள் மனங்களில் பதிய காரணமாக அமைந்தவர்.

காத்தவராயன் கூத்து வடமராச்சியில் நாடகமாக்கப் பட்டு தொடர்ந்து வெற்றிநடை போட்டு வந்தது. மட்டக்களப்பு பிரதேசங்களும் அண்ணாவிமார் மூலம் நாட்டுக் கூத்துகளாக இந்த புராண இதிகாச சரித்திரங்களை மக்கள் மனங்களில் தொடர்ந்து பதித்ததில் நல்ல பங்காற்றி வந்தது.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

இந்த இதிகாச சரித்திர விடயங்கள் இசைப் பாடல்களாக வசந்தன் கோளாட்டத்தில் இந்தப் பகுதிகளில் பரவி வந்ததும் குறிப்பிடத் தக்கது. கூத்து நாடகங்கள் என்பன கிழக்கில் சில கலை அரங்கங்களால் சிறப்பாக ஒளி பாச்சப் பட்டன. பிரணவி கலாமன்றம் என்ற யாழ்ப்பாண நாடக மன்றம் சிரமங்களிடையும் தொடர்ந்தும் மேடையேற்றி வருகின்றது. விடுதலைப் போராட்ட காலத்தில் கவிஞர் காசியானந்தன், புதுவை இரத்தினதுரை, நா. யோகேந்திரநாதன் போன்றோர் கவிவரிகளிலும் தெருக்கூத்துகளிலும் பண்டைய தமிழ் மன்னர்களின் பெருமைகள் மேலோங்கி நின்றது.

ஒப்பீட்டளவில் தாயகத்தை விடா புலம்பெயர் நாட்டில் இளம் சந்ததியினர் இடையே நடனம், சங்கீதம், வயலின், மிருதங்கம், வீணை, சுரத்தட்டு என்கின்ற இசை ஞானங்கள் செறிவாகப் பரப்பப் படுகின்றது. தமிழ்ப் பள்ளிகள், கலை மன்றங்கள், கலை ஆசிரியர்கள் இந்தப் பணியை சிறப்போடு ஆற்றிவருகின்றனர்.

கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் எழுதிய மகாபாரதம் என்ற செய்யுள் தற்காலத்தில் மாணவர்கள் மனதில் பதியக் கூடியது அல்ல. இவை கடினமான செயல்களே. ஆயினும் பாண்டவர் பூமி என்ற கவிஞர் வாலியின் படைப்பு. ஜேசு காவியம் என்ற கவிஞர் கண்ணதாசனின் படைப்பு. போன்றவை இவற்றை இலகுபடுத்தி கவிதைகளாக சொல்லியுள்ளன. இப்படியாக இலகுபடுத்தப்பட்ட இவைகளை தமிழ்ச் சிறார்களின் மனங்களில் பதிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

## தாயகத்திலும் கூட இந்தப் பணி சிறப்பாக செயற்படுத்தப்படுவதற்கு பாடப் புத்தகங்களில் உள்ளடக்கப் படுவதற்கு ஏற்றன ஆற்றுவார்களா ?

புலம்பெயர் நாடுகளில் இதை சாதாரண தமிழில் கவிகளாகக் கூட மாணவர்களுடைய மனங்களிலே பதியச் செய்ய வேண்டும். ஏகலைவன் என்ற கதாபாத்திரத்தை மையமாகக் கொண்ட ஒரு நாடகத்தை சட்டன் தமிழ்ப் பள்ளி அண்மையில் ஆண்டுவிழாவில் மேடையேற்றியது. கௌரவர் பாண்டவர்களிடையே சகுனியோடு நடத்தப்பட்ட சூதுப் படலத்தை நாடகமாக்கி தெற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலை அண்மையில் ஆண்டுவிழாவில் இரசிக்கத்தக்க முறையில் மேடையேற்றியது. புலம்பெயர் தமிழ் ஆசிரியர்கள் இந்தப் பணிகளைசிறப்போடு செய்து வருகின்றார்கள். இவை தொடர இன்னும் விரிவானநடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் தாயகத்திலும் கூட இந்தப் பணி சிறப்பாக செயற்படுத்தப் படுவதற்கு பாடப் புத்தகங்களில் உள்ளடக்கப் படுவதற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களோ உரிய கல்வித் திணைக்களத்தினரோ ஏற்றன ஆற்றுவார்களா. இருந்து பார்ப்போம்..!

EACH தொண்டர்கள் தேவை!

**தமிழ் சமூகத்தினரின் வாழ்க்கையை மீழமைக்க உதவும் எம் இப் பாரிய திட்டத்தில் நீங்களும் பங்கெடுக்க விரும்புகின்றீர்களா?**

பேரினாலும் வன்முறைகளினாலும் பாதிக்கப்பட்ட உங்கள் உறவுகளின் வாழ்க்கையை மீழமைக்க உதவுவதற்கு தமிழ் சமூகத்திடையே இருந்து ஆண் பெண் தொண்டு பணியாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**கொடுத்தால்:**

பிரத்தியேக பயிற்சி பெறுவீர்கள்.

புதிய திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

புதிய திறமைகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் உங்களுடைய வேலை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வீர்கள்.

உங்களுடைய போக்குவரத்துக்கான செலவுகளும் வழங்கப்படும்.

**எமது தொண்டர்களிடம் நாங்கள் எதிர் பார்ப்பது:**

முழுமையான பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் ஆங்கிலம் இரண்டு மொழிகளையும் பேசத் தெரிந்திருக்க வேண்டும்.

ஆகக் குறைந்தது வாரத்தில் 3 மணி நேரமாவது எமக்காக செலவிட வேண்டும்.

ஆதரவு மேற்பார்வை பயிற்சிப் பட்டறைகளுக்கு சமூகமளிக்க வேண்டும்.

மேற்கொண்டு பயிற்சிகளை பெற தயாரானவர்களாக இருக்க வேண்டும்.

*EACH, established in 1991, is a voluntary sector organisation providing specialist community- based services for individuals and families affected by alcohol and drug problems, domestic violence and mental health concerns.*

Registered Charity No **1025967** Company No **2818814**

For more information Call EACH on **020 8579 4529**

For a pack Email : info@eachealing.org.uk

Website: www.eachcounselling.org.uk

The project is funded by Equality and Human Rights Commission

Meera Arnold & Co

for all your accounting needs...

Accountancy

Auditing

pay roll

book keeping

company formation

45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர, ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ______

Address : ______

Postcode: ______

Telephone: ______

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


www.ayngaran.com
Connecting you with Live Cinema!
PROUDLY PRESENTS
FOR FURTHER DETAILS : 020 8540 1500
020 8903 3300, 020 8471 3133
ஈஸ்டர் மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
ஐங்கரனின் மாபெரும் மலிவு விற்பனை!
50% OFFER
HURRY UP! SALE MUST END SOON
50% OFFER
எது வாங்கினாலும் 50% கழிவு
AYNGARAN SHOWROOM TOOTING, AYNGARAN SHOWROOM WEMBLEY, AYNGARAN SHOWROOM EASTHAM
FOR FURTHER DETAILS : 020 8540 1500
Why This KOLAVERI DI
Easter Bank Holiday Weekend!
WITH ENGLISH SUBTITLES
DIRECTED BY : AISHWARYA DHANUSH MUSIC BY : ANIRUDH
STARRING : DHANUSH I SHRUTHI HASSAN I PRABHU I BANUPRIYA I SIVAKARTHIKEYAN
FROM 04th to 12th APRIL 2012 - UK CINEWORLD - DAILY SHOWS
Ilford I Feltham I Wandsworth I Staplescorner I Stockport I Liverpool I Birmingham I Enfield
ADVANCE BOOKING : ONLINE - WWW.CINEWORLD.CO.UK OR CALL - 0871 220 1000
FOR FURTHER DETAILS : 020 8540 1500, 020 8903 3300, 020 8471 3133
Subjected to changes in showtimes within advertised period.
JOIN US ON YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran visit us: www.ayngaran.com


www.ayngaran.com
Connecting you with Live Cinema!
PROUDLY PRESENTS
FOR FURTHER DETAILS : 020 8540 1500
020 8903 3300, 020 8471 3133
ORU KAL ORU KANNADI
WITH ENGLISH SUBTITLES
STARRING: UDHAYANIDHI STALIN I HANSHIKA I SANTHANAM I SARANYA PONVANNAN I AZHAGAM PERUMAL
GUEST APPEARANCE : ARYA I ANDREA JEREMIAH I SNEHA DIRECTED BY : RAJESH.M MUSIC BY : HARRIS JAYARAJ
FROM 13th APRIL 2012 - UK CINEWORLD - DAILY SHOWS
Ilford I Feltham I Wandsworth I Staplescorner I Milton Keynes I Crawley I Cardiff I Glasgow
Aberdeen I Sheffield I Enfield I Liverpool I Stockport I Luton I Birmingham
ADVANCE BOOKING : ONLINE - WWW.CINEWORLD.CO.UK OR CALL - 0871 220 1000
FOR FURTHER DETAILS : 020 8540 1500, 020 8903 3300, 020 8471 3133
Subjected to changes in showtimes within advertised period.
JOIN US ON YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran visit us: www.ayngaran.com


AE AKILAN ENTERPRISES
அகிலன் எண்டர்பிரைசஸ்
மங்களம் தரும் மதுரை மல்லி
மாலைகள் எங்களிடம் கிடைக்கும்
All Fresh Flowers Available
Handicrafts, Fancy Goods, Pooja Items, Indian Magazines, Tamil Navals,
Bharathanatyam Costumes & Jewells and
Pooja Temple for Homes
274, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6SA TEL: 020 8548 0033 email: seliyan24@hotmail.com

# திரைவிமர்சனம் - 3



ஒரு பாடல் வெற்றி பெற்று விட்ட காரணத்தால் சேனல்களில் மூன்று படத்துக்கு கொடுத்த புரோமோஷன் அலப்பறைகளை தமிழ்ச்சமுகம் பார்த்துக்கொண்டுதான் இருந்தது..

கணவன் நடிக்க மனைவி இயக்கிய படம்...சொந்தக் காரபையன் இசையமைக்க.. மாமனார் வீட்டில் தயாரிப்பை கவனிக்க, மூத்தாரிடம் இணை இயக்குனராகப் பணியாற்றிய ரஜினி மகள் ஐஸ்வர்யா இயக்கிய முதல் படம்...

கதையென்று பார்க்கப் போனால் பணக்கார பிரபு பானுப்பிரியா தம்பதிகளின் மகன் தனுஷ் (ராம்) மாணவனாய் இருக்கும் போது ரோகிணி தம்பதியினரின் மகள் ஸ்ருதி (ஜனனி)யை காதலிக்கின்றார்.. ஜனனி நடுத்தர குடும்பம்.. முதலில் மறுக்கும் ஸ்ருதி பின்பு தனுஷ்யை காதலிக்கின்றார்..இருவீட்டார் சம்மதத்துடன் திருமணமும் செய்து கொள்கின்றார்கள்... பிறகு அங்கதான் ஒரு டுவிஸ்ட் இயக்குனர் வச்சி இருக்காங்க.. அது என்னென்று தியேட்டருக்கு போய் பாருங்க,..,

தற்கொலை எதற்கும் தீர்வல்ல என்கிற வாசகங்களோடு படம் முடிகிறது. ஐஸ்வர்யா தனுஷின் கருணையே கருணை. அவர் எடுத்திருக்கிற கொடூரமான மொக்கைப் படத்தை பார்த்து யாரும் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்கிற அன்பை நாம் பாராட்டியே தீரவேண்டும். ரஜினியின் மகள் அல்லவா? அவருடைய அன்பில் கருணையுள்ளத்தில் பாதியாவது இருக்காதா பின்னே!

தனுஷ் இதுவரை நடித்து ஓரளவு பெயரும் பணமும் சம்பாதித்த எல்லா படங்களிலிருந்து தலா நான்கு காட்சிகளை உபயோகித்து இந்த படத்தினை எடுத்திருக்கிறார்கள். தனுசுக்கான TRIBUTE ஆக மூன்று படத்தினை கருதலாம். துள்ளுவதோ இளமையிலிருந்து நாலு சீன், புதுப்பேட்டையிலிருந்து இரண்டு சீன், மயக்கம் என்ன, காதல்கொண்டேனிலிருந்து சில காட்சிகள்! பொல்லாதவன் படிக்காதவனிலிருந்து மேலும்.. அதுபோக தனுஷின் பெரும்பாலான படங்களில் வருவதைப் போலவே இந்தபடத்திலும் அவருக்கு பைத்தியம் பிடித்து விடுகிறது! தண்ணீர் தெளித்த கோழியை போல வெடுக் வெடுக் என இப்படியும் அப்படியும் ஆட்டி ஆட்டி பயமுறுத்துகிறார்! நமக்கு சிரிப்பு வருகிறது. கோழி சண்டையும் 'கே.பி கருப்பையும்' சேர்த்திருந்தால் TRIBUTE முழுமையடைந்திருக்குமோ என்று தோன்றுகிறது. அனுபவம் வராதவர்கள் காதலிப்பது போல் படம் எடுக்கிற புண்ணியவான்களுக்கு இ.பி.கோவில் ஏதாவது செக்சனில் ஏதாவது கொடூரமான 'கட்டிங் வெட்டிங்' தண்டனை வழங்கித் தொலையலாம். அதிலும் இந்தப்படம் சொல்லுகிற செய்தி இன்னும் மோசமானது. அதோடு குடிவெறி பாரில் தாலிக்கட்டி திருமணம், நண்பனை பக்கத்தில் வைத்துக்கொண்டே சரச சல்லாப விளையாட்டு, குடும்பத்தோடு குடிக்கும் குதூகலம்.. அடேங்கப்பா படம் முழுக்க கலாச்சார அதிர்ச்சிகள் ரொம்பி வழிந்து வழித்து வழித்து ஊற்றியிருக்கிறார்கள்! ஆனால்..... எதற்குமே காரணமே இல்லை. அட மண்ணாங்கட்டி லாஜிக்கும் இல்லை. Housing Unitல் வளரும் ஸ்ருதி திடீரென பப்பில் தனுஷோடு சரக்கடிக்கிறார்! Wow what a logic i say!

பிரபு, பானுசந்தர், பானுப்ரியா என பலரும் நட்புக்காக நடிச்சுக் கொடுத்திருக்க வேண்டும். ரோஹினியை கதறி கதறி கத்த விட்டிருக்கிறார்கள். ஸ்ருதிஹாசனும் அதைவிட அதிக டெசிபலில் ஆவ்வ்வ் என கத்திக்கொண்டேயிருக்கிறார்.. காதுக்கு புடிச்ச கேடு!(ரசூல்பூக்குட்டியும் வேலை பார்த்திருக்கிறார் போல....)

முதல்பாதியின் முதல் முக்கால் மணிநேரம் மட்டும் படத்தை பார்த்துவிட்டு தியேட்டரிலிருந்து வெளியேறிவிடுவது உத்தமம். மீதி படத்தையும் நான் பார்த்தே தீருவேன் என்று அடம்பிடித்தால் முக்கால் படத்தில் வெறியேறி பக்கத்து சீட்டில் இருப்பவர்களையெல்லாம் கடித்து வைத்துவிடுவீர்கள் ஜாக்கிரதை! கதை கல்யாணம், குடும்பம் என்று ஆன பின்பு தனுசின் வியாதி எனும் போது தான் தடுமாறுகிறது திரைக்கதை. தனுசுக்கு தன் வியாதியை பற்றி தெரிந்தும், அதை உணர்ந்தும் சிகிச்சை எடுத்தால் சரியாகிவிடும் எனும் போது என்ன எழவுக்கு மனைவியிடமோ, அல்லது பெற்றோர்களிடமோ சொல்லாமல் தற்கொலை முடிவுக்குப் போகிறார் என்றே புரியவில்லை. நிலமை மோசமாக இருக்கும் பட்சத்தில் ஏன் மனைவியிடமோ, அல்லது அவனது பெற்றோர்களிடமோ சொல்லாமல் மறைக்க வேண்டும். மனைவியிடம் சொல்ல முடியாததற்கான காரணம் படு செயற்கை. இதுவரை காதலுடன் பார்த்த அவளின் பார்வையில் பயம் வந்துவிடும் என்பதற்காக சொல்லாமல் மறைக்கிறானாம்?. ஐந்து வருடம் காதலித்து, அவனை பற்றி துல்லியமாய் அறிந்தவள் கணவனின் மனநிலை, உடல்நிலையைப் பற்றி அறியாமலா இருப்பாள்? தனுசின் சாவு ஸ்ருதியை எப்படி உலுக்கி எடுத்ததோ, அதே அளவிற்கு படம் பார்க்கும் நம்மையும் உலுக்கியிருக்க வேண்டிய ஒரு திரைக்கதையை இரை அவியல் ஆக்கியிருக்கிறார்கள்.

எழுதி இயக்கிய ஐஸ்வர்யா தனுஷிற்கு முதல் படம் என்ற அளவில் நல்ல கதையைத்தான் தெரிந்தெடுத்திருந்தாலும், திரைக்கதை அமைக்கும் போது கோட்டை விட்டிருக்கிறார். குறிப்பிடத்தக்கவை என்று பார்த்தால் கொஞ்சம் சுவாரஸ்யமான முதல் பாதியும், பாடல்களையும் சொல்ல வேண்டும். படம் பார்க்கும் போது மீண்டும் மயக்கம் என்ன படத்தை பார்க்கிறோமா? என்ற எண்ணம் வருவதை தவிர்க்க முடியவில்லை.

தனுஷ் ஏன் இறந்தார் என்ற ஆர்வத்தை எழுப்ப வேண்டும் என்று எண்ணி அமைத்த திரைக்கதையில் எப்ப சாவாரெனன் காத்திருந்து இறுதிக்கட்ட காட்சிகளில் படு சீரியஸாய் தியேட்டரில் ஆட்கள் சிரித்து கொண்டிருப்பது இப்படத்தின் முடிவைச் சொல்லும்.

*- அகிலன்*

# சினித்துளி

## நடிகர் பட்டாளத்துடன் 'கோச்சடையான்'!



நாளுக்கு நாள் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் கோச்சடையான் பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள் பல வெளிவந்துகொண்டே இருக்கின்றன.தற்போதைய தகவல்களின்படி மறைந்த நடிகர் நகேஷினை தொடர்ந்து மறைந்த நட்சத்திரங்களான பிஎஸ். வீரப்பா, எம்என். நம்பியார், அசோகன், ஆர்.எஸ் மனோகர் போன்றோரும் நடிக்கவுள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் நடிகர் நாகேஷ் இரு வேடங்களில் தோன்றவுள்ளார் என்பது ஏற்கனவே அறிந்த விடயம்.

நடிகர்கள் படத்தில் இடம்பெறவுள்ள தகவல் உறுதிப்படுத்தப்பட்டால் இதுவே படத்தின் வியாபாரத்தையும் விளம்பரத்தையும் கூட்டும்.

*எல்லாம் இருக்கட்டும் படம் எப்ப வருமெண்டு சொல்லுங்கோவன்.....*

## ஷங்கருடன் இணையும் விக்ரம்!



நண்பன் படத்துக்குப் பின்பு, புதிய படத்துக்கான வேலைகளை இயக்குனர் ஷங்கர் ஆரம்பித்துள்ளார். இந்தப் படத்தில் நடிப்பவர்கள் குறித்து அவர் இதுவரை எந்த தகவலும் வெளியிட வில்லை. தனது புதிய படத்தின் நாயகன் குறித்து அதிகாரப்பூர்வமாக ஷங்கர் கூறாவிட்டாலும், சியான் விக்ரம் தான் இந்தப் படத்தில் நடிப்பார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. தற்போது சியான் விக்ரம் இயக்குனர் விஜய்யின் தாண்டவம் படத்தில் நடித்து வருகிறார்.

## இசைஞானியின் இசைக்குப் போட்டி!!



கௌதம் மேனன் படங்களைப் பொருத்தவரை, படத்திற்கு இருக்கும் வரவேற்பை விட பாடல்களுக்கு அதிக வரவேற்பு இருக்கும். 'நீதானே என் பொன்வசந்தம்' படத்திற்கு இளையராஜா இசையமைக்க ஒப்புக்கொண்டதை அறிவித்ததும், இசை ரசிகர்கள் மத்தியில் இந்த புது கூட்டணி தரப் போகும் பாடல்களுக்கு எதிர்பார்ப்பு ஆரம்பித்துவிட்டது. கௌதம் மேனனும் இணையத்தில் இளையராஜாவைப் பற்றியும் படத்தின் பாடல்கள் குறித்தும் அவ்வப்போது பகிர்ந்து கொள்கிறார்.

இதனால் ரசிகர்ககளை விட, இசை வெளியிடும் நிறுவனங்கள் இப்படப் பாடல்களுக்காக காத்திருக்கின்றனர். இப்போதே இப்படத்தின் இசை வெளியீடு செய்யும் உரிமைக்கு போட்டி ஆரம்பித்துவிட்டது.

## ஆர்யா-சந்தானம்-ஹன்சிகா கூட்டணி!!



இந்தியில் வரவேற்பைப் பெற்ற 'டெல்லி பெல்லி'யின் தமிழ் ரீமேக்கை தயாரிக்க இருக்கிறது யுடிவி நிறுவனம். இப்படத்தில் யார் எல்லாம் நடிக்கிறார்கள் என்பது குறித்து பல்வேறு தகவல்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. 'டெல்லி பெல்லி' படத்தினை தமிழுக்கு ஏற்றவாறு பல்வேறு மாற்றங்களை செய்து திரைக்கதை அமைத்து இருக்கிறார் இயக்குனர் கண்ணன். ஆர்யா, சந்தானம், பிரேம்ஜி உள்ளிட்டவர்களை நடிக்க வைக்கவிருக்கிறார்கள்.

படத்தின் நாயகியாக ஹன்சிகாவை அணுகி இருக்கிறது யு.டிவி நிறுவனம். விரைவில் இன்னொரு நகைச்சுவைக் கலாட்டாவை எதிர்பார்க்கலாம்..

எல்லாளன் இப்பொழுது உங்கள் அருகாமையில்..
ELLALAN SUPER MARKET

Off Licence
மீன் வகைகள்
பலசரக்கு வகைகள்
இறைச்சி வகைகள்
இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்
மரக்கறி வகைகள்
020 8681 7485
Group of Spice Land
234-236, London Road, Croydon CRO 2TF


Discover the world with....
Serendib Lanka Travels Ltd
COLOMBO SPECIAL
Emirates £485 Jet Airways £490
Gulf £500 Qatar £570
Kuwait £450 Etihad £587
SRILANKAN SPECIAL
Colombo £545 Chennai £500
Tirchi £500 Kualalumpur £590
Singapore £590
INDIA SPECIAL
(Direct on British Airways)
CANADA SPECIAL
WORLD WIDE SPECIAL
All fares mentioned are low seasons including taxes

LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
(லூசியம் சிவன் கோயிலுக்கு அண்மையில்)
E.Mail : info@serendib-lanka.co.uk
IATA

# Lycamobile

**Call the world for less**

**India** Landline & Mobile **1p /min**

**Sri Lanka** Landline **7p /min**

NEW OFFER

**£10 Free credit**
with every £20 online top-ups

**UNLIMITED FREE CALLS**
from Lycamobile to Lycamobile

**For your FREE Lycamobile SIM**
**visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears.
1p/min promotion is valid from 31.12.2011 and valid until 30.04.2012. From the March 1st to April 30th 2012, customers with a minimum balance of 20p can enjoy free and unlimited calls from Lycamobile UK to Lycamobile UK. £10 credit offer: When you top up with a £20 voucher online during March and April 2012, you will be credited with an additional £10 call credit. Offer valid only on the first 2 online £20 top ups during March and April 2012. Prices and offers are correct at the time of going to print on 03.04.2012. for more offers and latest rates please visit www.lycamobile.co.uk

Lyca mobile
Call the world for less

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk